# புதிய ஜனநாயகம்

ஜூலை 2009
ரூ. 7.00



புலித்தலைமை படுகொலை:
## சதிகாரர்களும் துரோகிகளும்









லால்கார்:
## காங்கிரசு-சி.பி.எம். அரசுகளின்
# பயங்கரவாதம்!

# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 9**

ஜூலை 2009

**உள்நாடு**
**தனிஇதழ்: ரூ. 7.00**
**ஆண்டுசந்தா: ரூ. 90.00**

*வெளிநாடுகள்*
(வான் அஞ்சலில்)
**ஆண்டு சந்தா:** US$ 20

*படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்*



புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை – 600 024.
**தொலைபேசி:** 94446 32561


# புலித் தலைமை படுகொலை: சதிகாரர்களும் துரோகிகளும்

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு மீதும் பிரபாகரன் மீதும் உண்மையான விசுவாசம் கொண்ட அணிகளும், ஆதரவாளர்களும், அனுதாபிகளும் தாம் நெஞ்சிலே சுமந்த அந்தத் தேசியத் தலைவன் பிரபாகரன் வீரச்சாவை எய்தினார் என்றெண்ணி வீர அஞ்சலி – வீர வணக்கம் செலுத்துவதா அல்லது அவர் பாதுகாப்பானதொரு இடத்தில் நலமாக இருக்கிறார் என்ற செய்தியை இன்னமும் நம்பி ஆறுதல் அடைவதா என்று முடிவு செய்ய முடியாமல் திகைத்துப் போயுள்ளனர். ஆனால், ஈழத்தின் வன்னி-முள்ளிவாய்க்கால் களப்பிரதேசத்தில் உண்மையில் நடந்தது என்ன வென்று இதுவரை நமக்குக் கிட்டியுள்ள தகவல்களைத் தர்க்கரீதியில் தொகுத்துப் பார்க்கும்போது பின்வரும் முடிவுக்கு வர முடிகிறது:**

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ''இறுதிப் போர்'' அறிவிப்பு செய்து, மூர்க்கத் தனமான தாக்குதலை நடத்திய சிங்கள இராணுவம், பேரழிவு ஆயுதங்களைப் பயன் படுத்திப் புலிகளின் தலைமையகமாக விளங்கிய கிளிநொச்சியைக் கைப்பற்றியது. அடுத்து, புலிகள் பின் நகர்ந்து சென்ற முல்லைத் தீவை முற்றுகையிட்டு, புலிகள் நிலை கொண்டிருந்த புதுக்குடியிருப்பையும் தாக்கிக் கைப்பற்றியது. அதன் பிறகும் புலிகள் பின்வாங்கியபடியே நகர்ந்து சென்றனர். இறுதியாக, மே முதல் வாரத்தில், பிரபாகரன், அவரது மகன் சார்லஸ் ஆண்டனி; பொட்டு அம்மன், சூசை, நடேசன் ஆகிய தலைவர்கள் – தளபதிகள் உட்பட 2,000 விடுதலைப் புலிகள், சுமார் ஒரு இலட்சம் ஈழத் தமிழர்களுடன் ஈழத்தின் வடகிழக்குக் கோடியில் நந்திக்கடலுக்கும், இந்துமா கடலுக்கும் இடையில் உள்ள முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரு சில சதுரக் கிலோமீட்டர் பகுதிக்குள், அதிநவீன ஆயுதங்களுடன் கூடிய 50,000 சிங்கள இராணு வத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தனர். சிங்கள இராணுவத்தின் முற்றுகையை முறியடித்து – புலிகளின் சொற்களில் கூறுவதானால் ஊடறுத்து – புலிகள் வெளியேறு வதற்கான வாய்ப்பு சிறிதுகூட இருக்கவில்லை. கடல் வழியே புலிகள் தப்பிவிடாமல் சிங்களக் கப்பற்படையோடு இந்தியக் கடற்படைக் கப்பல்கள் ரோந்து சுற்றிக் கொண் டிருந்தன; ஏற்கெனவே கடற்புலிகளின் படகுகள் அனைத்தும் அழிக்கப்பட்டிருந்தன.

அந்த நிலையில், சிங்கள இராணுவம் தீர்மானகரமான தாக்குதல் நடத்தி இருந் தால், ஓரிரு நாட்களிலேயே புலிகளின் தற்காப்பு நிலைகள் அனைத்தையும் அழித்து, இறுதி வெற்றி ஈட்டியிருக்க முடியும். ஏற்கெனவே, புலித் தலைமையை, குறிப்பாக பிரபாகரனைப் போர்க்களத்திலேயே கொன்று விடவேண்டும், கைது செய்தாலும் உயிரோடு வைத்திருக்கக் கூடாது என்று அயலுறவுத்துறை அமைச்சர், அதிகாரிகளை நேரடியாக கொழும்புக்கு அனுப்பி, இலங்கை அதிபரிடமும், இராணுவத் தலைமை யிடமும் வலியுறுத்தியிருந்தது இந்தியா; இந்திய நாடாளுமன்றத் தேர்தல்கள் முடியும் வரை இறுதித் தாக்குதல்கள் நடத்துவதை தள்ளி வைக்கும்படியும் கேட்டுக் கொண்டிருந்தது. இந்தியாவின் இந்த விருப்பங்கள் நிறைவேற்றப்படுவதை மேற்பார்வையிடுவதற்கென்றே தனிச்சிறப்பாக இந்திய இராணுவ மற்றும் உளவுப் படை ''ரா'' அதிகாரிகள் களத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொருத்தவரைக்கும் ஒன்று சிங்கள இராணுவத் துக்கு எதிராகப் போரிட்டு மடியவேண்டும்; அல்லது அவர்கள் எப்போதும் கழுத் தில் அணிந்திருக்கும் சயனைடு குப்பிகளைக் கடித்து பெருந்திரளாகத் தற்கொலை செய்து கொள்ள வேண்டும்; அல்லது மிக மோசமான வாய்ப்பாக சிங்கள இராணு வத்திடம் சரணடைய வேண்டும். இவை தவிர, வேறொரு தெரிவு எதுவும் விடுத லைப் புலிகளிடம் இருக்கவில்லை. இத்தகையதொரு நிலை ஏற்படுவதற்கு சிங்கள – இந்தியக் கூட்டின் இராணுவ ரீதியான கொலைவெறித் தாக்குதல் முக்கியமானதொரு காரணம் என்றாலும், கிளிநொச்சியிலிருந்து பின்வாங்கி, முல்லைத் தீவுக்குள் முடங் கிய போதே தப்பிச் செல்வதற்கான எல்லாக் கதவுகளையும் அடைத்துக் கொண்டு, ''பொந்தில் பதுங்கி இரையாகிப் போவது'' என்பது விடுதலைப் புலிகளே தெரிவு செய்து கொண்டதுதான். இவ்வாறான ''சுய அழிவு'' முடிவெடுத்ததற்கான விளக்கம் எதுவும் புலித்தலைமையிடமோ, புலி விசுவாசிகளிடமோ ஒருபோதும் இல்லை.

ஆனாலும், இயக்கம் விடாது, தலைவர் பெரிய திட்டமொன்று வைத்துள்ளார்; இந்தியா வரும், அமெரிக்கா வரும்; ஜெயலலிதா, வைகோ, நெடுமாறன் போன்றவர் கள் தூக்கி நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள் புலி விசுவாசிகள். புலித் தலைவர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. இந்த எதிர்பார்ப்பினாலேயே இன்று புலிகள் தங்கள் அழிவிற்குத் தாங்களே காரணமாகிப் போனார்கள். இதே போன்ற

தொரு குருட்டு நம்பிக்கையில்தான் பிரபாகரன் விசுவாசிகள் இன்னமும் இருத்தி வைக்கப்படுகிறார்கள்.

மே 13-ந் தேதியோடு இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களுக்கான வாக்குப்பதிவுகள் முடிந்து போயின. கழுத்துவரை பேரழிவு ஆயுதங்களை நிரப்பி வைத்திருந்த சிங்கள இராணுவம் அடுத்த நாளே - மே 14-ந் தேதி வியாழக்கிழமை - ''வங்கினுள் பதுங்கிய இரையான'' புலிகளைத் தாக்கி அழிக்கும் இறுதித் தாக்குதலைக் கொடூரமான முறையில் தொடங்கியது. மூன்றே நாட்களில் எல்லாம் முடிந்து போயின. முள்ளிவாய்க்கால் கிராமத்தில் பதுங்கியிருந்த பல ஆயிரம் ஈழத் தமிழர்களும், புலித்தலைமை உட்பட புலிப்படைப் போராளிகள் அனைவரும் சிங்கள இனவெறி இராணுவத்தால் கொடூரமாகக் கொன்றொழிக்கப்பட்டனர்.

புலிகளின் ஆதரவாளர்களால் நடத்தப்படும் ''புதினம்'' என்ற இணையதளம், கடந்த ஆறாண்டுகளாகத் தனது நிறுவனத்தின் இரத்தமும் சதையுமாக இயங்கி, உண்மைச் செய்திகளை மட்டுமே அளித்துவந்த அந்த செய்மதி நிருபர், ''என்னுடன் உங்களுக்கு இருக்கும் தொடர்பு இதுதான் கடைசியாகவும் இருக்கலாம்'' என்று நினைப்பதாகக் கூறி அனுப்பிய செய்தியைப் பின்வருமாறு வெளியிட்டிருக்கிறது:

**பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருப்பதாகக் காட்டுவதற்காக நக்கீரன் ''உல்டா'' கோபால் பயன்படுத்திய புகைப்படம் (மேலே). பிரபாகரன் இன்னமும் உயிருடன் இருப்பதாக அறிவிக்கும் நக்கீரன் அட்டைப்படம் கீழே.**






**கடைசி மூன்று நாட்களில் என்ன நடந்தது? புலித் தலைமை என்ன செய்தது? எவ்வாறு அழிக்கப்பட்டது என்பதைத்தான் எஞ்சியுள்ள புலிகளின் பிரதிநிதிகளும், விசுவாசிகளும் பேச மறுக்கின்றனர். அல்லது முரண்பட்ட விளக்கங்களும் தகவல்களும் கொடுத்து, உண்மையை மூடி மறைக்கின்றனர்.**

''கடந்த இரண்டரை வருடங்களாக - உலகப் பெரும் சக்திகள் சிலவற்றின் துணையுடன் சிறீலங்கா நடத்திவரும் தமிழின அழிப்புப் போர், அதன் இறுதிக் கட்டத்தை இன்று திங்கட்கிழமை காலை அடைந்திருப்பதாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இன்னமும் மிஞ்சியிருக்கும் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் இருந்து 'புதினம்' செய்தியாளர், செய்மதி மூலம் சொன்னவை அவரது வார்த்தைகளிலேயே:

''பீரங்கிக் குண்டுகள் நாலாபுறங்களிலும் இருந்து வந்து எங்கள் மீது வீழ்ந்து வெடிக்கின்றன. கனரக மற்றும் சிறுரக துப்பாக்கிச் சன்னங்கள் எல்லாப் பக்கத்தில் இருந்தும் சீறி வருகின்றன. தாக்குதல் நிகழும் இந்தப் பகுதிக்குள் இன்னமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் இருக்கின்றனர். காயப்பட்டு வீழ்ந்து தூக்கி எடுக்க யாருமற்றுக் கிடப்போரின், மக்களின் மரண ஓலங்களே எங்கும் கேட்கின்றன. விடுதலைப் புலிகளின் பக்கத்தில் இருந்து குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்கு எதிர்த் தாக்குதல்கள் ஏதுமற்ற நிலையிலும், சிறீலங்கா படையினர் கண்மூடித்தனமான தாக்குதல்களை நான்கு பக்கங்களிலும், சகலவிதமான நாசகார ஆயுதங்களைப் பாவித்தும் மேற்கொண்டவாறு மக்களைக் கொன்று குவித்து வருகின்றனர். கடந்த நான்கு நாட்களில் மட்டும் 4 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டு விட்டார்கள்; கொல்லப்பட்டு வீழ்ந்த மக்கள் எல்லோரினது உடல்களும் நாலாபுறமும் சிதறிக் கிடக்கின்றன. திரும்பிய பக்கமெல்லாம் பிணக்குவியல்களாகவே இருக்கின்றன. கொல்லப்பட்டோரது உடல்கள் கடந்த நான்கு நாட்களுக்கும் மேலாக அகற்றப்படாத காரணத்தினால், அந்தப் பகுதி எங்கும் பெரும் துர்நாற்றம் வீசுகின்றது. இன்றைய இந்த மூர்க்கத்தனமான தாக்குதலுடன் இங்குள்ள மக்கள் அனைவருமே சிறீலங்கா படையினருக்கு இரையாகிவிடுவர். படுகாயமடைந்தவர்கள் இந்தப் பகுதியெங்கும் விழுந்து கிடந்து அலறுகின்றனர். படுமோசமான காயங்களுக்கு உள்ளாகி, சிகிச்சையளிக்க எந்த வழியுமற்ற நிலையில் கதறும் பொது மக்கள், அங்கே இருக்கும் போராளிகளிடம் தம்மை சுட்டுக் கொன்று விடுமாறு மன்றாடுகின்றனர். அதேபோல காயமடைந்து சிகிச்சைக்கு வழியற்றுக் கிடக்கும் போராளிகள், தமது 'சயனைட்' வில்லைகளைத் தந்துவிடுமாறு கதறுகின்றனர். பதுங்குக் குழிகளுக்குள் இருந்தபோதே கொல்லப்பட்டுவிட்ட மக்களின் உடல்களுக்கு மேலேயே, உயிரோடு எஞ்சியிருக்கும் மக்கள் பாதுகாப்புக்காய் பதுங்க வேண்டிய அவலம் நிலவுகின்றது. ''இப்பேர்ப்பட்ட ஒரு மாபெரும் மனிதப் பேரவலம் கண் முன்னால் நிகழ்ந்து கொண்டிருக்கும்போது, ஆயுதப் போராட்டத்தையே விட்டு விடுகின்றோம் என விடுதலைப் புலிகள் சொல்லிவிட்ட பின்பு, யாராவது வந்து எம்மை காப்பாற்ற மாட்டார்களா என மக்கள் இங்கு ஏங்கித் தவிக்கும்போது - மனித உயிர்களைக் காப்பதற்காகவேனும் இந்த உலகம் ஏன் எதனையும் செய்யாதிருக்கின்றது? என்று தழுதழுத்த குரலில் கேள்வி எழுப்பினார்.''



**புலிகளின் சரணடைவிற்காக முயற்சிகள் மேற்கொண்ட (இடமிருந்து) இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ''சண்டே டைம்ஸ்'' நாளிதழின் பெண் செய்தியாளர் மேரி கால்வின் மற்றும் புலிகள் அமைப்பின் சமாதானச் செயலகப் பொறுப்பாளர் சீ.புலித்தேவன், அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன்.**

அந்தக் கடைசி மூன்று நாட்களில் என்ன நடந்தது? புலித் தலைமை என்ன செய்தது? எவ்வாறு அழிக்கப்பட்டது என்பதைத்தான் எஞ்சியுள்ள புலிகளின் பிரதிநிதிகளும், விசுவாசிகளும் பேச மறுக்கின்றனர். அல்லது முரண்பட்ட விளக்கங்களும் தகவல்களும் கொடுத்து, உண்மையை மூடி மறைக்கின்றனர். ஈழப் போரின் கடைசி மூன்று நாட்களில் நடந்த சம்பவங்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையைச் சுற்றித் தாம் கட்டியெழுப்பியிருந்த பெருமைக்குக் களங்கம் ஏற்படுத்திவிடும் என்ற அச்சத்தால், அவை குறித்துப் பரிசீலிக்கவோ, மக்கள் முன் உண்மை விளக்கமளிக்கவோ மறுக்கின்றனர். அவ்வாறான முயற்சியில் ஈடுபடுவோருக்கு எதிரான அவதூறுகளை ஆத்திரம் ஆத்திரமாகக் கொட்டித் தீர்க்கின்றனர். ஆனால், இந்த உண்மைகளைக் கண்டறிந்து, மக்கள் முன் வைப்பதன் மூலம்தான் ஈழ விடுதலைப் போரின் இந்தப் பேரழிவு - பேராபத்துக்குக் காரணமான எதிரிகளின் வக்கிரமான பாசிச இனவெறிப் பேயாட்டங்களை மட்டுமல்ல, சதிகாரர்களையும் துரோகிகளையும்கூட வெளிச்சத்திற்குக் கொண்டு வரமுடியும். ஆனால், நடந்த உண்மைகளை மூடி மறைப்பது ஈழத்தின் எதிரிகளையும் சதிகாரர்களையும் துரோகிகளையும் காப்பாற்றவே பயன்படும்.

சிங்கள இராணுவம் ஈழத் தமிழின அழிப்புப் போரின் இறுதி தாக்குதலைக் கொடூரமான - வெறித்தனமான முறையில் நடத்திக் கொண்டிருந்த அதேசமயம், பல ஆயிரம் ஈழத் தமிழர்களை ஒரே நாளில் கொன்ற அவப்பெயர் தமக்கும், இறுதிவரைப் போராடி வீரமரணமடைந்த பெருமை புலித் தலைமைக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரு சர்வதேச சதியிலும் ஈடுபட்டிருந்தது, சிங்கள பாசிச ஆளும் கும்பல். பிரபாகரன் உட்பட புலித் தலைமையையும், இறுதிவரை புலிகளோடு விசுவாசமாகத் தங்கியிருந்த தமிழர்களையும் படுகொலை செய்து விடுவது என்பதில் உறுதியாக இருந்தது. சிங்கள பாசிச ஆளும் கும்பலும் இராணுவமும். அவர்களுக்குத் தப்பிப் போவதற்கான வழிகள் அனைத்தும் அடைக்கப்பட்டு, யுத்தமும் - சாவும் அவர்கள் தொண்டைக் குழிவரை வந்துவிட்ட நிலையில், புலித் தலைமையின் இந்தக் கையறு நிலையைப் பயன்படுத்திக் கொண்டு, அவர்களை ஏமாற்றிச் சரணடைய வைத்து இலகுவாகப் பலியிடுவது என்ற சதியை நன்கு திட்டமிட்டு, ''ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடைந்தால் பொது மன்னிப்பு'' என்ற தூண்டிலை அமெரிக்க - இந்திய - நார்வே நாட்டுச் சதிகாரர்கள் மூலம் புலித் தலைமையின் முன்பு வீசியது. புலித் தலைமையை முழுமையாக நம்ப வைக்க சில வெளிப்படையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**பிரபாகரன் சரணடையவோ அல்லது கைது செய்யப்படவோ இல்லை; போரிட்டே வீரக்காவியம் ஆனார் என்று புலிகளின் அயலுறவு புலனாய்வுத்துறை சொன்னாலும், இந்தப் போர் எப்போது, எங்கே எவ்வாறு நடந்தது என்று கூறவில்லை! அதுவும் ஆயுதங்களை அமைதியாக்கிக் கொள்வதாக புலிகள் அறிவித்த பிறகு, இவ்வாறான போர் நடந்திருக்கக் கூடுமா?**

அமெரிக்க பசிபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அட்மிரல் திமேத்தி ஜே கீட்டிங், இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோரைச் சந்தித்த பின், 15.5.2009-இல் வெளியிட்ட அறிக்கை இந்த சதி நாடகத்தின் வெளிப்படையான ஒரு அங்கமாகும். அந்த அறிக்கை இலங்கை அரசுடனான கூட்டுச் சதியை நாசூக்காக வெளிப்படுத்துகின்றது. ''இலங்கையில் போர்ப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அமெரிக்கக் கடற்படை கப்பல்கள் தயார் நிலையில் உள்ளன'' என்று அவர் 15.5.2009 அன்று அறிவிக்கின்றார். அத்துடன், ''போர் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கான வழிகளைக் கண்டறிய அமெரிக்க குழு இலங்கை சென்றது. எவ்வகையில் உதவி செய்ய முடியும் என்ற அறிக்கையையும் இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வழியாக வெளியுறவுத் துறைக்கு வழங்கியுள்ளது''. அதில் ''போர் பகுதியில் தமிழர்களுக்கு அமெரிக்கக் கடற்படை வழியாக உதவுவதற்கான பல்வேறு வழிமுறைகளை தெரிவித்துள்ளோம்'' என்கிறது, அந்த அறிக்கை.

நார்வே அமைச்சர் எரிக் சொல்கைம் இந்த நாடகத்தின் மற்றொரு சதிகாரன். 17.5.2009 அன்று பல தரம் (வெளி



**புலிகளின் சரணடைவிற்குத் திரைமறைவில் முயற்சிகள் மேற்கொண்ட (இடமிருந்து) நார்வே நாட்டு அமைச்சர் எரிக் சொல்கைம் மற்றும் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன், இராணுவத் தளபதிகளுள் ஒருவரான சூசை.**

நாட்டு - உள்நாட்டு) புலியுடன் தான் தொடர்பில் இருந்ததாக அவர் கூறியுள்ளார். இப்படி மோசடி செய்து கொல்ல உதவிய பின், நடந்ததை, ''இது மிகவும் கோரமானது'' என்கிறார். இதே போல் கடைசி நிமிடங்களில் ஐ.நா.வைச் சேர்ந்த விஜய் நம்பி யாரும் (வெளிநாட்டு - உள்நாட்டு) புலியுடன் தொடர்பில் இருந்துள்ளார். இவையெல்லாம் இவர்கள் கூறியவைகள் தான். இந்தச் சதியின் மற்றொரு வெளிப்பாடாக மீண்டும் நம்பியார் இலங்கை சென்றார், எல்லாம் இதற்காகத்தான். இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் மற்றும் வெளிவிவகார செயலாளர் சிவ்சங்கர் மேனன் ஆகியோர் அடிக்கடி இலங்கை சென்றதும் இதற்காகத்தான். ''ஆயுதங்களை ஒப்படைத்துச் சரணடைந்தால் பொது மன்னிப்பு'' என்ற சர்வதேச சதிகாரர்களால் வீசப்பட்ட தூண்டிலைப் புலித் தலைமை கவ்வியதா, இல்லையா? பிரபாகரன் உட்பட புலித் தலைமையின் சாவில் மிகவும் சர்ச்சைக்குரிய கூறாக விளங்குவது இதுதான்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ சர்வதேசப் பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதன் மே 17-ஆம் தேதி அன்று ஒரு அறிக்கை வெளியிடுகிறார். அதில், ''நாம் எமது ஆயுதங்களை அமைதியாக்கிச் சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வருகிறோம்... விடுதலைப் புலிகளின் அச்சமற்ற தன்மையையும், தங்கள் கொள்கை மீதுள்ள முடிவில்லாத கடமையுணர்ச்சியையும், அதன் மீது எம்மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையையும் எவரும் சந்தேகப்பட முடியாது. எமது அழைப்பை எமது பிள்ளைகள் எந்தவொரு கேள்வியுமில்லாமல், மரணத்துக்குப் பயமற்று எடுத்துள்ளார்கள். எமது போராட்டம் எம்மக்களுக்காகவே என்பதை நாம் மறந்து விடவில்லை என்றும் இப்போதைய நிலைமையில், இந்த யுத்தத்தை சிறீலங்கா இராணுவம் இம்மக்களைக் கொன்று குவிப்பதற்கான ஒரு சந்தர்ப்பமாகப் பாவிக்க நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்... மிகச் துணிச்சலோடு நாங்கள் எழுந்து நின்று எமது ஆயுதங்களை அமைதியாக்குகிறோம், எமது மக்களைக் காப்பாற்றுமாறு தொடர்ந்து சர்வதேசச் சமுதாயத்துடன் கேட்டுக் கொள்வதை விட, வேறு தெரிவு எங்களுக்கு இல்லை'' என்று அறிவிக்கிறார்.

அதன் பிறகு புலி ஆதரவு இணைய தளமான தமிழ் நெட்டிற்கு பத்மநாதனே வழங்கிய பேட்டியில் ''எமது அமைப்பின் பல மூத்த உறுப்பினர்களும் தலைவர்களும் உயிரிழந்திருக்கின்றனர் அல்லது துரோகத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர் என்பது உண்மை. எங்களின் முடிவை நாம் சர்வதேசத்துக்குக் கூறியிருந்தும், சிறீலங்காவின் தாக்குதல்களை நிறுத்தச் சொல்லிக் கேட்டிருந்தும், கொழும்பானது அதைப் பொருட்படுத்தாது, இதுதான் முடிவென்று இராணுவத் தாக்குதலைத் தொடர்ந்தது. எங்களுக்குக் கிடைத்த தகவலின்படி சரணடைந்து, வெள்ளைக் கொடியைத் தாங்கிச் சென்ற போராளிகளையும் தலைவர்களையும் சர்வதேச மரபைப் பொருட்படுத்தாது இரக்கமில்லாமல் கொன்றுள்ளது. சர்வதேச சமூகமும் சிறீலங்காவுக்கு எதிராக ஒரு திடமான நிலையை எடுத்து, சிறீலங்காவை ஒரு முறையான முடிவை எடுக்கச் சொல்லி ஊக்குவிக்கவில்லை. நடந்த நிகழ்வுகளையிட்டு நாங்கள் துக்கத்திலுள்ளோம்'' என்கிறார்.

அதேசமயம் மே 17 அன்று, எப்போதும் இல்லாத வகையில் திடீரென்று புலிகளின் இராணுவத் தளபதிகளில் ஒருவரான சூசை, ''மக்கள் வலையத்தினுள் இருக்கும் அனைத்து மக்களையும், ஜெனீவாவில் உள்ள அனைத்துலக செஞ்சிலுவை சங்கத்துடன் நேரடியாக செல்வராசா பத்மநாதனூடாகத் தொடர்பு கொண்டு வெளியேற்றுமாறு கேட்டிருந்தோம்'' என்று பேட்டியளித்திருந்தார். நடேசன் மற்றும் புலித்தேவன் ஆகியோர் சரணடைய விரும்புவதாக வடபகுதியில் பணியாற்றிய சர்வதேச அரசு சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடமிருந்தும் சனிக்கிழமை (16.05.09) மாலை தனக்குப் பல்வேறு தகவல்கள் கிடைக்கப் பெற்றதாக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் பாலித கொஹனா பிரித்தானிய ஊடகமொன்றிடம் கூறினார். ''இதற்கு ஒரே வழிதான் உண்டு. இராணுவ முறைப்படி கையில் வெள்ளைக் கொடியுடன் பயமுறுத்தாத வகையில் மெதுவாக வந்து சரணடைய வேண்டும் என நான் கூறியிருந்தேன்'' என்கிறார் கொஹனா. ''அவ்வாறு அவர்கள் சரணடைந்தால், உயிர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படாதுதானே'' என்று கேட்டு நார்வே அமைச்சர் இறுதியாகத் தனக்கு அனுப்பிய குறுஞ்செய்தியையும் கொஹனா அந்த ஊடகத்திடம் காண்பித்துள்ளார்.

இவற்றையும், இவற்றோடு பிரபாகரனைச் சிங்கள இராணுவ வெறியர்கள் சித்திரவதை செய்தும், கோடாறியால் மண்டையைப் பிளந்தும் கொன்ற பின், அவரது உடலை அவமானப்படுத்தி சிதைக்கப்பட்ட உடலை ஒட்டு வேலை செய்து ஊடகங்களுக்குக் காட்டியதை, ''வீடியோ'' படமாக, டக்ளஸ் தேவானந்தா கருணா ஆதரவு இணைய தளங்கள் சிறிது நேரம் வெளியிட்டு அகற்றியதையும் ஆதாரமாக

வைத்து, பிரபாகரன் உட்பட புலித் தலைமை சரணடைந்து படுகொலை செய்யப்பட்டதாக மே 21 அன்றே புலம் பெயர் தமிழரான இரயாகரனின் இணைய தளம் (Tamilcircle.net) செய்தி வெளியிட்டது.

அதன்பிறகு, மே 22 அன்று பிரபாகரன் சாகவில்லை, உயிருடன் பாதுகாப்பாக - நலமாக இருக்கிறார் என்று அறிக்கை வெளியிட்ட செல்வராசா பத்மநாதன், ஒரு வாரத்துக்குப் பிறகு பிரபாகரன் வீரச் சாவெய்தியதாக பி.பி.சி.க்குப் பேட்டியளித்தார். செல்வராசா பத்மநாதனின் முதல் அறிக்கை அடிப்படையில் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகக் கூறிவந்த நெடுமாறன் போன்ற தமிழினவாதத் தலைவர்கள், செல்வராசா பத்மநாதன் பிரபாகரன் சாவை உறுதி செய்தவுடன் ''அவர் பன்னாட்டுப் போலீசு அமைப்பால் தேடப்படும் கிரிமினல் குற்றவாளி, அவரது கூற்று ஏற்கத்தக்கதல்ல'' என்று ஒதுக்கிவிட்டு, பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்ற பிரச்சாரத்தைத் தொடர்கின்றனர். ஜூன் 18-ந் தேதி அன்று, புலிகளின் வெளியகப் பணிப் பிரிவு புலனாய்வுத் துறை பொறுப்பாளர் கதிர்காமத் தம்பி அறிவழகன் ''பிரபாகரன் சரணடையவோ, அல்லது கைது செய்யப்படவோ இல்லை; சிறீலங்கா படையினருடன் போரிட்டே வீரக்காவியம் ஆனார்'' என்று கூறி, செல்வராசா பத்மநாதனின் நிலையை ஆதரித்துள்ளார். இதன் பிறகு தமிழகத் தமிழினவாதிகள் உட்பட, புலி விசுவாசிகள் பிரபாகரன் மரணம் குறித்து மவுனம் சாதிக்கின்றனர்.

இதற்கிடையே யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குழு தனது அறிக்கையில், பிரபாகரன் சிறீலங்கா படையினரால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குப் பின் கொடூரமாகக் கொல்லப்பட்டதாகக் கூறுகிறது. கடைசியாக ஜூன் இறுதியில் வெளியிடப்பட்ட ஜூனியர் விகடனில், இலங்கை இராணுவம் ''சரீன்'' மயக்க மருந்து கலந்த இரசாயனக் குண்டு போட்டு பிரபாகரனைப் பிடித்துச் சித்திரவதை செய்து கொன்றதாக எழுதுகிறது. பிரபாகரன் சரணடையவோ அல்லது கைது செய்யப்படவோ இல்லை; போரிட்டே வீரக்காவியம் ஆனார் என்று புலிகளின் அயலுறவு புலனாய்வுத்துறை சொன்னாலும், இந்தப் போர் எப்போது, எங்கே எவ்வாறு நடந்தது என்று கூறவில்லை! அதுவும் ஆயுதங்களை அமைதியாக்கிக் கொள்வதாக புலிகள் அறிவித்த பிறகு, இவ்வாறான போர் நடந்திருக்கக் கூடுமா? இல்லை, சிறீலங்கா இராணுவம் கூறுவதைப் போல பிரபாகரன் ஆம்புலன்சில் தப்பிச் செல்லும்போது (ஊடறுத்துச் செல்லும்போது) சிறீலங்கா படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டாரா? அப்படியானால் சித்திரவதை செய்யப்பட்டதாகக் காட்டும் வீடியோ, பிரபாகரன் உடலை அவமானப்படுத்துவதாகக் காட்டும் புகைப்படங்கள் ஆகிய ஆதாரங்களெல்லாம் வெறும் ஒட்டு வேலைகள்தானா?

இதற்கெல்லாம் மேலாக பிரபாகரனுக்கு என்ன நேர்ந்தது, எப்படி நேர்ந்தது என்பது ஒருபுறம் இருக்க, சிறீலங்கா பாசிச ஆளும் கும்பலிடமும், இராணுவத்திடமும் ஆயுதங்களை அமைதியாக்கி விட்டுச் சரணடைவது என்கிற முடிவுக்கு புலித் தலைமை வந்து விட்டிருந்தது என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரங்கள் உள்ளன. ''மேலை நாடுகள் சிலவற்றின் முயற்சியில கடைசி நேரத்தில் போர் நிறுத்தப் பேச்சு ஏற்பாடு செய்யப்பட்டது. சிங்களப் படை அழைத்ததன் பேரில், வெள்ளைக் கொடியுடன் பேச்சு நடத்தப்போன அரசியல் பிரிவுத் தலைவர் பா.நடேசன், அமைதிப் பேச்சுச் செயலகத் தலைவர் புலித்தேவன் உள்ளிட்டோரை சிங்களப் படை சுட்டுக் கொன்றது'' என்று புலிகளின் விசுவாசியான மணியரசன், தனது பத்திரிக்கையில் எழுதுகிறார்.

**நடேசனும் புலித்தேவனும் மேற்கொண்ட சரணடைவு முயற்சிகள் எல்லாம் பிரபாகரன் உட்பட புலித் தலைமையின் ஒப்புதலுடன் நடந்தனவா? அல்லது பிரபாகரன் ஒப்புதல் இல்லாமலேயே நடந்ததா?**

ஆயுதங்களை அமைதியாக்குவதாகப் புலித்தலைமை விடுத்த அறிவிப்பிற்கு முதல் நாளே, அதாவது மே 16-ந் தேதி இரவே, புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் பாலசிங்கம் நடேசன் ''ஆயுதங்களை ஒப்படைக்கிறோம். ஒபாமா அரசு, இங்கிலாந்து அரசு ஆகியவற்றிடம் பாதுகாப்பு உறுதி கிடைக்க வேண்டும். புலிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஐ.நா. அதிகாரியான விஜய நம்பியார் அங்கே இருக்க வேண்டும்'' என்று இங்கிலாந்து ''சண்டே டைம்ஸ்'' நாளேட்டின் பெண் செய்தியாளர் மேரி கால்வினுக்கு தொலைபேசி மூலம் வேண்டுகோள் விடுத்தார். பிறகு, இலங்கை நாடாளுமன்ற தமிழ் உறுப்பினரான ரோகன் சந்திரா நேருவை அழைத்து நடேசன் பேசியிருக்கிறார். மேரி கால்வின் - விஜய் நம்பியார் வழியேயும் ரோகன் சந்திரா நேரு வழியேயும் அதிபர் இராஜபக்சேவுக்கு செய்தி போனது; சிறீலங்கா அரசு இந்தச் சரணடைவை ஏற்பதாக பாசிச இராஜபக்சே கூறியதாக, நேரு வழியேயும் விஜய் நம்பியார் - மேரி கால்வின் வழியேயும் மே 17-ந் தேதி காலையே நடேசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. மணியரசன் கூறுவதிலிருந்து சில மேற்கு நாடுகளும் இந்த ஏற்பாட்டில் பங்கு பெற்றிருக்கின்றன. இந்த ஏற்பாட்டை நம்பிச் சரணடையப் போனபோதுதான் நடேசனும் புலித்தேவனும் வேறு சிலருடன் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நடேசனும் புலித்தேவனும் மேற்கொண்ட சரணடைவு முயற்சிகள் எல்லாம் பிரபாகரன் உட்பட புலித் தலைமையின் ஒப்புதலுடன் நடந்தனவா, இல்லையா? பிரபாகரன் எதிரிகளுடனான பேச்சு வார்த்தைகள் எதிலும் நேரடியாக ஈடுபட்டதே இல்லை, அரசியல் பிரதிநிதிகளை அனுப்புவதைத்தானே வழக்கமாகக் கொண்டிருந்தார். இதுவும் அப்படி நடந்தது தானா? அல்லது பிரபாகரன் ஒப்புதல் இல்லாமலேயே நடந்ததா? அப்படியானால் நடேசன், புலித்தேவன் உள்ளிட்டோரைத் தியாகிகளாகப் புலி விசுவாசிகள் போற்றுவது ஏன்? இந்தக் கேள்விகளுக்கு புலிகளிடமும் அவர்களின் விசுவாசிகளிடமும் பதில் இல்லை. இன்னும் இரண்டு கேள்விகள் உள்ளன. பிரபாகரன் போரிட்டே மரணமடைந்தார், சித்திரவதை செய்து கொல்லப்படவில்லை என்ற நிலைப்பாடு சிறீலங்கா ஆளும் கும்பல் மீதான சர்வதேச கிரிமினல் போர்க் குற்றவாளி என்ற குற்றச்சாட்டிலிருந்து காப்பதாகாதா? பிரபாகரன் வெளிப்படையாக சம்பந்தப்படவில்லை என்றாலும், சிறீலங்கா பாசிச கும்பலைப் பற்றி அறிந்திருந்தும் நடேசன் வழி மேற்கொள்ளப்பட்ட சரணடைவு முயற்சிகள் அரசியல், இராணுவ ரீதியில் சரியானவைதானா? அது பற்றிய ஆய்வுக்குள் எஞ்சியுள்ள புலிகளும், அவர்களின் விசுவாசிகளும் போக மறுப்பது ஏன்? இந்தக் கேள்விகளுக்கான விடையை அறிந்து கொள்ளும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு. •

# ஈழத் தமிழினப் படுகொலைக்கு வாழ்த்து:
# ஐ.நா.மனித உரிமை கவுன்சிலின் கேலிக்கூத்து!

**ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் கொண்டுவரப்பட்ட தீர்மானம், இலங்கை இனவெறி பாசிச அரசின் போர்க்குற்றங்களுக்கு எதிரானதல்ல.**

முள்ளிவாய்க்காலில் இலங்கை இராணுவம் நடத்திய இறுதித் தாக்குதலில் மட்டும் சுமார் 25,000-க்கும் மேற்பட்ட ஈழத்தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலநூறு பேர் படுகாயமுற்றும், உடல் ஊனமுற்றும் மருத்துவ வசதிகள் இல்லாமல் அல்லலுறுகின்றனர். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அரசு கண்காணிப்பு முகாமில் எந்த அடிப்படை வசதிகளுமின்றி அவதிப்படுகின்றனர்.


இப்படி தட்டிக்கேட்க ஆளின்றி இலங்கை அரசு நடத்தி வரும் அட்டூழியங்கள் குறிப்பாக, புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் ஆத்திரத்தை தோற்றுவித்து அவர்களும் மேலைநாடுகளில் தொடர்ச்சியாக போராடி வந்தனர். இது இங்கிலாந்து மற்றும் சில ஐரோப்பிய நாடுகளுக்கு ஓரளவு நெருக்கடியைத் தோற்றுவித்தது. இதை தணிப்பதற்கு மேலைநாடுகள் முயன்றபோது கை கொடுத்ததுதான் ஐ.நா.சபை தீர்மானம்.

சுவிட்சர்லாந்து தலைநகரம் ஜெனிவாவில் ஐ.நா.சபையின் மனித உரிமைக் கவுன்சில் உள்ளது. இதில் இலங்கை, இந்தியாவையும் உள்ளிட்டு 47 நாடுகள் உறுப்பினர்களாய் உள்ளன. 2006-ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வரும் இந்தக் கவுன்சில், உண்மையில் எந்தவித அதிகாரமும் அற்ற ஒரு அலங்காரக் கவுன்சிலாகும். குறிப்பிட்ட நாடு மனித உரிமை மீறலில் ஈடுபட்டிருப்பதாக இந்தக் கவுன்சில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினாலும், அந்த நாட்டில் இதை வைத்தே தலையிடுவதற்கு இந்தக் கவுன்சிலுக்கு அதிகாரம் இல்லை. அதை ஐ.நா. பொதுச் சபை விவாதித்து பாதுகாப்பு கவுன்சில் அங்கீகரித்தால்தான் செய்ய முடியும்.

இந்நிலையில் மனித உரிமைக் கவுன்சிலில் சுவிட்சர்லாந்து அரசு இலங்கை நடத்திய போர் மீது ஒரு தீர்மானத்தை கொண்டு வர முயன்றது. பலரும் நினைத்துக் கொண்டிருப்பது போன்று இந்த தீர்மானம் இலங்கை அரசின் இனப்படுகொலையை கண்டித்து எழுதப்பட்டதல்ல. மாறாக, புலிகள்தான் மக்களை பணயக்கைதிகளாய் பிடித்து வைத்திருந்ததாகவும் அவர்கள்தான் சிவிலியன்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், அதையும் உள்ளிட்டு ஏனைய மனித உரிமை மீறல்களை இலங்கை அரசே விசாரிக்க வேண்டுமெனவும் இந்தத் தீர்மானம் முன்மொழிந்தது. மற்றபடி, சிங்கள இராணுவத்தின் போர்க்குற்றங்கள் குறித்து இந்தத் தீர்மானம் தந்திரமாக மவுனம் சாதித்தது. இதுபோக, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அவர்களது சொந்த இடத்திற்குப் போக வழி ஏற்படுத்துதல், முகாமில் இருக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் கொடுப்பது, சர்வதேச தொண்டு நிறுவனங்களை இம்முகாம்களுக்கு அனுமதித்தல் முதலியவையும் இந்த தீர்மானத்தில் இருந்தன.

இந்த டுபாக்கூர் தீர்மானத்தைத்தான் ஊடகங்கள் ஏதோ இலங்கையின் போர்க் குற்றங்களைத் தண்டிக்கப் போகின்ற மாபெரும் நடவடிக்கையாகச் சித்தரித்தன. ஆனால், இந்த மயிலிறகு தீர்மானத்தைக்கூட இலங்கை சகித்துக் கொள்ளத் தயாராக இல்லை. வாக்கெடுப்புக்கு வந்தபோது தீர்மானத்திற்கு ஆதரவாக சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, கனடா, சிலி, மெக்சிகோ உள்ளிட்ட 17 நாடுகள் வாக்களித்தன. எதிராக இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரசியா, மலேசியா உள்ளிட்ட 22 நாடுகள் வாக்களிக்க, எட்டு நாடுகள் நடுநிலைமை வகிக்க, இறுதியில் சுவிட்சர்லாந்து தீர்மானம் தோல்வியடைந்தது.

20,000-க்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்களைக் கொன்றொழித்த இனவெறி பயங்கரவாதப் போரின் கொடூரம்: ராஜபக்சே ‘‘’’கும்பலின் போர்க் குற்றங்களுக்கு ஆதாரமாக ‘‘டைம்ஸ்’’ நாளேடு வெளியிட்ட புகைப்படம்.



இதன் கூடவே இலங்கை அரசு மற்றொரு தீர்மானத்தை முன்மொழிந்தது. இதில் இலங்கையில் பயங்கரவாதிகளை வீழ்த்திய இலங்கை அரசுக்கு வாழ்த்து, மற்றும் ‘பணயக்கைதிகளாய்’ பிடிபட்டிருக்கும் மக்களை மீட்டு ‘மனித உரிமையை’ நிலைநாட்டிய இலங்கை இராணுவத்துக்கு பாராட்டு, முகாமிலிருக்கும் மக்களின் மறுவாழ்வுக்கு சர்வதேச நாடுகள் உதவுதற்கான வேண்டுகோள் எல்லாம் உண்டு. இப்படி ஆடுகளுக்காய் அழும் ஓநாயின் தீர்மானத்திற்கு ஆதரவாய் 29 வாக்குகளும், எதிராக 12 வாக்குகளும் கிடைக்க, 6 நாடுகள் நடுநிலை வகித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து ஐ.நா.வுக்கான இலங்கைப் பிரதிநிதி தயான் ஜெயதிலகே கூறும் போது ‘‘மனித உரிமைக் கவுன்சில் தனது எண்ணத்தை மிகச் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளதாக’’ பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

இப்படி எல்லா ஐசுவரியங்களும் கூடிவர, இலங்கை தனது போர்க்குற்றங்களுக்கு ஐ.நா. சபை மூலம் பூமாலை சூடிக்கொண்டது. இதுபோக, இலங்கை வந்த ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி மூன், இலங்கை அரசை பகிரங்கமாகப் பாராட்டியதும் குறிப்பிடத் தக்கது. ஆனால், ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலின் இந்த காக்காய் தீர்மானத்தை சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், தன்னார்வக் குழுக்களும், ஈழ ஆர்வலர்களும் கண்டித்திருக்கின்றன. எனினும், ஐ.நா. சபையின் பின்னணியில் மேலை நாடுகள் நடத்தியிருக்கும் இந்த நாடகத்தின் நோக்கம் என்ன?



**சிங்கள இனவெறிப் போரை நிறுத்தக் கோரி, பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் திரண்டு லண்டன் மாநகரில் 11.4.09 அன்று நடத்திய ஆர்ப்பாட்டம்.** (கோப்புப் படம்)

முதலில் ஐ.நா. சபை என்பது ஏகாதிபத்தியங்களின் அரசியல் நோக்கத்திற்கு சேவை செய்யும் பஜனை சங்கமாகும். குறிப்பாக, அமெரிக்காவின் நோக்கத்திற்கேற்ப இசுரேலின் மனித உரிமை மீறலை அங்கீகரிக்க வேண்டுமா, வடகொரியா, கியூபாவை மிரட்ட வேண்டுமா - இதற்கெல்லாம் ஐ.நா. அம்பிகள் தவறாமல் ஆஜராவார்கள். அமெரிக்காவின் நலனுக்கு எதிராகச் சென்றார் என்பதற்காக யூகோஸ்லாவிய அதிபர் மிலசோவிச்சை, போஸ்னிய முசுலீம்களை கொன்றார், போர்க்குற்றங்களைச் செய்தார் என்று சர்வதேச நீதிமன்றத்தில் விசாரித்தார்கள். விசாரணை நடக்கும்போதே மிலசோவிச் உடல் நலக்குறைவால் மரணம் அடைந்தார். அதேபோல, பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக ஒரு பச்சைப் பொய்யைக் கூறி ஈராக்கின் எண்ணெய் வயல்களுக்காக அந்நாட்டை ஆக்கிரமித்த அமெரிக்கா, அதிபர் சதாம் உசேனைப் பிடித்து, அவர் ஒரு ஷியா கிராமத்தில் 113 மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாயிருந்தார் எனக் குற்றம் சாட்டி, அமெரிக்க கைக்கூலிகளால் நடத்தப்பட்ட ஈராக் நீதிமன்றத்தில் அவசரமாக விசாரிக்க வைத்து, தூக்கிலேற்றி கதையை முடித்தது.

இதனால் மிலசோவிச்சும், சதாம் உசேனும் அப்பாவிகள், தவறேதும் செய்யாதவர்கள் என வாதிடவில்லை. ஆனால், அமெரிக்கா போடும் மனித உரிமை நாடகம்தான் முக்கியமானது. இதே சதாம் உசேனுக்கு வேதியியல் ஆயுதம் கொடுத்து, அதை அவர் ஈரான் மீதான போரில் பயன்படுத்தி பல வீரர்களைக் கொன்றதை விசாரித்தால், சாதாமுக்கு உதவிய அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைத் தூக்கிலேற்ற வேண்டியிருக்கும். இதேபோன்று சதாம் உசேன் குர்தீஷ் மக்களை ஒடுக்கியதை விசாரித்தால், கூடவே அமெரிக்காவின் அடியாள் துருக்கியின் அத்துமீறலையும் விசாரிக்க வேண்டியிருக்கும். வடகொரியா அணு ஆயுத சோதனை நடத்தியதால் சர்வதேச பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இதே சோதனையை அமெரிக்காவின் கூட்டாளிகள் இந்தியாவும், பாகிஸ்தானும் செய்திருந்தாலும் அந்த தடையை அமல்படுத்துமாறு அமெரிக்கா கோரவில்லை.

எனவே இந்த உலகில் இனப்படுகொலையும், போர்க்குற்றங்களையும் செய்து வரும் அரசுகள் எல்லாம் அமெரிக்காவின் விருப்பத்திற்கேற்ப கண்டுகொள்ளாமலோ அல்லது விசாரிக்கப்படவோ செய்யப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக, அமெரிக்காவின் அத்துமீறலை மட்டும் வாயளவில் கூட யாரும் அதிகாரப்பூர்வமாக கண்டிக்க முடியாது. இதுதான் நிலைமை என்றால், இலங்கை அரசு அதன் போர்க்குற்றங்களுக்காக விசாரிக்கப்படவில்லை என்பதன் முக்கிய காரணம் அமெரிக்காவும் அதன் அணியிலுள்ள மேலை நாடுகளும் அதை கண்டு கொள்ளாமல் விடவே விரும்பியதெனலாம். மற்றபடி, ஐரோப்பிய நாடுகளில் போராடிய ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு மன ஆறுதலாக இருக்கட்டும் என்பதற்காகவே சுவிட்சர்லாந்து தீர்மானம் உயிரின்றி கொண்டு வரப்பட்டது. இப்படி இந்த விசயத்தில் மேற்கத்திய நாடுகள் பச்சையான அழுகுணி ஆட்டம் நடத்தியிருக்கின்றன.

எனவே, இந்த தீர்மானத்தை ஒட்டி ஏற்பட்ட இருவேறு அணிகளில் பெரிய சண்டையோ சச்சரவோ ஏதுமில்லை என்பதும் முக்கியம். இருப்பினும், இலங்கை அரசுக்கு வெளிப்படையான ஆதரவு கொடுக்க ரசியா, சீனா முதலிய நாடுகள் முன்வரக் காரணம், இந்தியப் பெருங்கடலில் அமெரிக்காவிற்குப் போட்டியாக இலங்கையை ஒரு தளமாக பயன்படுத்த வேண்டுமென்ற ஆசைதான். அமெரிக்காவின் அணியிலிருக்கும் பாகிஸ்தான், இலங்கையை ஆதரித்ததற்கு - அது ஏராளமான ஆயுதங்களை விற்றதும், இந்தியாவுக்கு போட்டியாக இலங்கையை தாஜா செய்ய வேண்டுமென்ற காரணங்கள் இருக்கின்றன. இந்தியாவோ ஈழத்தில் மறைமுகப் போரை நடத்தி இலங்கைக்கு உற்ற துணைவனாக இருந்தாலும், அதைவிட இலங்கை சீனா பக்கம் சாய்வதால் ராஜபக்சேயை ஆதரிக்க வேண்டிய நிர்ப்பந்தம். கூடவே மனித உரிமை விசாரணை வந்தால் ஆயுதங்கள் கொடுத்த வகையில் இந்தியாவும், சீனாவும், பாக்.கும் கூட விசாரணைக்கு பதில் சொல்ல வேண்டுமென்ற நிர்ப்பந்தம் - இவையெல்லாம் சேர்ந்து இந்த நாடுகள் சிங்கள அரசை ஆதரிக்க வைத்திருக்கின்றன.

அமெரிக்காவின் பல்லாண்டுத் தடைகளை மீறி உயிர்த்திருப்பதற்குப் போரடும் கியூபா, எப்போதும் அமெரிக்காவின் எதிர்ப்பு அணியிலேயே இருக்குமென்பதால் அந்நாடு இலங்கைக்கு ஆதரவாய் வாக்களித்தது. இப்படி எல்லா அரசியல் புறச்சூழல்களும் பொருத்தமாக கூடி வந்ததால், ராஜபக்சே அரசு தனது இனப்படுகொலைக்கு சர்வதேச நாடுகளிடம் பாராட்டு வாங்க முடிந்திருக்கிறது.

இலங்கை அரசை ஒப்புக்குக் கூட சர்வதேச நாடுகள் கண்டிக்க முன்வரவில்லையே என ஈழத்து மக்களிடம் ஒரு விரக்தி இருக்கிறது. ஆனால், உலகமய காலகட்டத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பும் அதற்கெதிரான உலக மக்களின் ஆதரவும் இல்லாமல், ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டம் வெல்லவோ, நீடித்திருக்கவோ முடியாது என்ற பாடத்தையும் அவர்கள் இதிலிருந்து கற்றுக்கொண்டு தங்களது போராட்டத்தை தொடரவேண்டும்.

● பச்சையப்பன்

# சி.பி.எம். - காங்கிரசு அரசுகளின் பயங்கரவாதம்


**பயங்கரவாத முத்திரை குத்தி லால்கார் பழங்குடியின மக்களின் நியாயமான போராட்டத்தை ஒடுக்குவதில், காங்கிரசு–சி.பி.எம். அரசுகள் ஓரணியில் நிற்கின்றன.**

''லால்காரில் அமைதி திரும்பிக் கொண்டிருக்கிறது; பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது'' என்று எக்காளமிடுகின்றன டெல்லி மைய அரசும், மே.வங்க மாநில அரசும். மாவோயிஸ்டுகளைப் 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்தி, அவ்வமைப்புக்கு மைய அரசு சட்டபூர்வமாகத் தடை விதித்துள்ளது. மே.வங்க லால்கார் வட்டாரத்தின் ஜித்கா காடுகளிலிருந்து மாவோயிஸ்டுகளை வெளியேற்றுவோம் என்று மே.வங்க 'இடதுசாரி' அரசின் போலீசுப் படையும், மைய அரசின் துணை இராணுவப் படைகளும் அதிரடிப் படைகளும் அதிநவீன ஆயுதங்களுடன் தேடுதல் வேட்டை நடத்துகின்றன. போலீசு - துணை இராணுவப் படைகளின் அடக்குமுறைக்கு அஞ்சி, லால்கார் பழங்குடியின மக்கள் காடுகளிலிருந்து வெளியேறி அகதி முகாம்களில் அவதிப்படுகிறார்கள்.

தமது வாழ்வுரிமைக்காகவும், அரசு மற்றும் சி.பி.எம். குண்டர்களின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராடி வரும் லால்கார் பழங்குடியின மக்களை வன்முறையாளர்கள், அராஜகவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறது, மே.வங்க 'இடதுசாரி' அரசு. ''இம்மக்களை இடதுசாரி அரசுக்கு எதிராகத் தூண்டி விட்டு வன்முறைப் போராட்டங்களைக் கட்டவிழ்த்து விட்டும், அவர்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்டு பயங்கரவாதச் செயல்களிலும் மாவோயிஸ்டுகள் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சியான திரிணாமுல் காங்கிரசு, இவர்களுடன் கள்ளக்கூட்டுச் சேர்ந்து மாநிலமெங்கும் வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டு, இடதுசாரி ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்கிறது'' என்று மே.வங்கத்தை ஆளும் சி.பி.எம். கட்சியும் ஆட்சியும் குற்றம் சாட்டுகின்றன.

லால்கார் பழங்குடியின மக்களோ எப்போதுமே அமைதியானவர்கள்; உண்மையானவர்கள். அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் வறுமையில் உழலும் அவர்கள், சாலை வசதியே இல்லாத கரடுமுரடான காட்டுப் பாதையில் நீண்ட நெடும்பயணமாக கண்ணீர் மல்க நோயுற்ற தமது அன்புக் குழந்தைகளை தூக்கிக் கொண்டு மாவட்ட மருத்துவமனைக்கு ஓடி, அங்கே சிகிச்சை பலனளிக்காமல் குழந்தைகள் மாண்டு போகும்போது அவர்கள் கதறியழுவார்கள். லால்கார் வட்டாரத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்தில்லாத போதும், மருத்துவர்களே இல்லாதபோதும், அவர்கள் தமது விதியை நொந்து கொண்டு அமைதியாகவே இருந்தார்கள்.

**லால்காரில் வீடுகளைச் சூறையாடி மக்களை வதைக்கும் கொடூரம்: அரசு பயங்கரவாதமா? 'அமைதி' யை நிலைநாட்டும் நடவடிக்கையா?**



கோடை காலங்களில் குடிநீர் இல்லாமல் தத்தளிக்கும்போதும், காட்டுக் கிழங்குகளை வேகவைத்து பசியாறிக் கொண்டு பட்டினியால் பரிதவித்தபோதும், ஆரம்பப் பள்ளி இல்லாமலும் ஆசிரியரே இல்லாத பள்ளியாலும் தமது குழந்தைகள் தொடக்கக் கல்விகூடக் கற்க முடியாத அவலத்தைக் கண்டபோதும் - இவையெல்லாம் தலைமுறை தலைமுறையாக உள்ள விசயம்தானே என்று தமக்குத்தாமே ஆறுதல்பட்டுக் கொண்டு அமைதியாக இருந்தார்கள்.

இன்று அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள லால்கார் பழங்குடியின மக்களுக்கு மருத்துவ உதவிகள் செய்ய கொல்கத்தாவிலிருந்து சென்ற மருத்துவர்கள், ''இப்போது இம்மக்களுக்கு மருந்து - மாத்திரைகள் அவசியமில்லை; சத்தான உணவுதான் உடனடித் தேவையாக உள்ளது'' என்கின்றனர். நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணரான அமர்த்யா சென், இம்மாநிலத்தைச் சேர்ந்தவர். அவர், ''பசியும் பட்டினியும்தான் மிகக் கொடிய வன்முறை'' என்றார். தமது மக்களுக்கு உணவளிக்காத அரசுதான், அம்மக்கள் மீது வன்முறையை ஏவும் கொடிய குற்றவாளி என்று அவர் சாடியுள்ளார். அவரது வாதப்படி, குற்றவாளியான மே.வங்க இடதுசாரி அரசு, பசி-பட்டினி எனும் வன்முறையை லால்கார் பழங்குடியின மக்கள் மீது தொடர்ந்து ஏவி வந்துள்ள போதிலும், இம்மக்கள் நல்வாழ்வை எதிர்பார்த்து அமைதியாகவே காத்திருந்தார்கள்.

ஒவ்வொரு முறையும் சட்டமன்ற - நாடாளுமன்ற - உள்ளாட்சித்

தேர்தல்களில், ஏழைகளின் நண்பனாகக் காட்டிக் கொள்ளும் இடதுசாரிக் கூட்டணி கட்சிகளுக்கே அவர்கள் வாக்களித்தார்கள். வாக்குறுதிகள் வீசப்பட்டனவே தவிர, அவை லால்கார் வட்டார மக்களின் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரவில்லை. வறுமை ஒழிப்புக்காகவும், வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட நிதி அவர்களைச் சென்றடையவும் இல்லை. நாட்டின் பங்குச் சந்தை புள்ளிகள் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறிய போதிலும், ஏகபோகக் கம்பெனிகளின் தலைமை நிர்வாக அதிகாரிகளது ஊதியம் கோடிக்கணக்கில் அதிகரித்த போதிலும், இந்தியா 'வல்லரசாக' ஒளிர்ந்த போதிலும், இவையெல்லாம் லால்கார் பழங்குடியின மக்களின் வாழ்வில் எந்தச் சலனத்தையும் ஏற்படுத்தவில்லை.



துப்பாக்கியின் நிழலில் நிவாரணம்:
சொந்த மண்ணில் அகதிகளாகப் பரிதவிக்கும் பழங்குடியின மக்கள்.

இருப்பினும், இவையெல்லாம் வன்முறையே அல்ல என்பதுதான் புரட்சி பேசும் போலி கம்யூனிஸ்டுகளின், ஆளும் வர்க்கங்களின், மேட்டுக்குடி கும்பல்களின், அவர்களின் ஊதுகுழல்களான 'தேசிய' பத்திரிகைகளின் வாதம். பழங்குடியின மக்களைப் போலீசார் இழுத்துச் சென்று வதைத்தாலும், பொய் வழக்குப் போட்டுச் சிறையிலடைத்தாலும் அவை வன்முறையோ, பயங்கரவாதமோ அல்ல. சி.பி.எம். குண்டர்கள் மற்றும் போலீசின் அடக்குமுறையின் கீழ் அவர்கள் இருத்தி வைக்கப்பட்டாலும், அது வன்முறை அல்ல; புதிய விசயமும் அல்ல.

வறுமையையும் அடக்குமுறையையும் சகித்துக் கொண்டு அமைதியாக இருந்த பழங்குடியின மக்கள் மெதுவாக விழித்தெழுந்து போராடத் தொடங்கினால், அது சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்கும் வன்முறை! பழங்குடியினக் கிராமங்களைச் சுற்றி வளைத்துச் சூறையாடி விடிய விடிய வதைத்த போலீசாரின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடி, போலீசாரை அப்பகுதியிலிருந்து விரட்டியடித்தால், அது பயங்கரவாதம்!

அவர்கள் போலீசு அடக்குமுறைக்கு எதிரான மக்கள் கமிட்டியை நிறுவினார்கள். அந்தக் கமிட்டி கிராமங்களில் மருத்துவ - சுகாதார வசதியும், பள்ளிகள் - சாலைகள் - பாலங்கள் உள்ளிட்டு மின்சார வசதியும் ஏற்படுத்தித் தரக் கோரி கடந்த எட்டு மாதங்களாகப் போராடி வருகிறது. அடக்குமுறையில் ஈடுபட்ட போலீசார் மக்கள் முன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்க வேண்டும்; அதுவரை போலீசாரையோ அரசு அதிகாரிகளையோ இப்பகுதியினுள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்ற கோரிக்கையுடன் மக்களைத் திரட்டிப் போராடி வருகிறது.

இவையெல்லாம் சட்டம் - ஒழுங்கைச் சீர்குலைக்கும் அராஜக - வன்முறைகள் என்று சாடுகிறது. மே.வங்க இடதுசாரி அரசு. ஆனால், இந்த அராஜக - வன்முறையாளர்கள், மக்களின் சுயவிருப்ப உழைப்பின் மூலம் 20 கி.மீ. தொலைவுக்கு சாலை அமைத்துள்ளார்கள். 'இடதுசாரி' அரசின் பஞ்சாயத்து நிர்வாகம் சாலையே போடாமல், ஒரு கி.மீ. சாலை அமைக்க ரூ. 15,000 வீதம் செலவிட்டதாகக் கணக்கு காட்டி ஏய்க்கும் நிலையில், 20 கி.மீ. தொலைவுக்கு சாலை அமைக்க மொத்தம் ரூ. 47,000 செலவாகியுள்ளதாக அவர்கள் கணக்குகளை எழுதி மக்களின் பார்வைக்கு வைத்துள்ளார்கள்.

இது மட்டுமின்றி, கடந்த எட்டு மாதங்களில் அவர்கள், தூர்ந்து போன குடிநீர்க் கிணறுகளைச் சீரமைத்தும் புதிய கிணறுகளைத் தோண்டியும், பள்ளிக்கூடங்களை நிறுவியுமுள்ளார்கள். நிதியில்லை என்று இடதுசாரி அரசு புறக்கணித்து இழுத்து மூடிவிட்ட கடபாஹரி கிராம ஆரம்ப சுகாதார நிலையத்தை அவர்கள் சீரமைத்து உள்ளூர் மருத்துவர்களைக் கொண்டு மக்களுக்குச் சிகிச்சையளிக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, காடுகளை ஒட்டியுள்ள புறம்போக்கு நிலங்களை, நிலமற்ற பழங்குடியினருக்கு விநியோகிக்கச் சட்டம் கொண்டு வரப்பட்டு செயல்படுத்தப்படாத நிலையில், கடபாஹரி, பன்ஷ்பேரி கிராமங்களை அடுத்துள்ள புறம்போக்கு நிலங்களை, நிலமற்ற விவசாயிகளுக்கு விநியோகித்துள்ளார்கள். இந்நடவடிக்கைகளுக்காக அவர்கள் இடதுசாரி அரசின் உதவியை எதிர்பார்த்து நிற்கவில்லை. எதிர்பார்த்தாலும், அது கிடைக்கப் போவதுமில்லை.

கடந்த நவம்பரில் போலீசு பயங்கரவாத அடக்குமுறைக்கு எதிராகப் போராடிய லால்கார் பழங்குடியின மக்கள், லால்கார் போலீசு நிலையத்தை முற்றுகையிட்டு போலீசாரை விரட்டியடித்து, போலீசு நிலையத்தை இழுத்து மூடினர். லால்கார் காடுகளை அழித்து 5000 ஏக்கர் பரப்பளவில் ஜிண்டால் எனும் தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனம் தொடங்கவுள்ள சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை முற்றாக ரத்து செய்யவும், அடக்குமுறையை ஏவிய போலீசார் பகிரங்க மன்னிப்பு கேட்கவும் கோரி இம்மக்கள் தொடர்ந்து போராடி வந்ததால், இப்பகுதிக்குள் போலீசாரோ, அரசு அதிகாரிகளோ நுழைய முடியவில்லை. அதன்பிறகு நாடாளுமன்றத் தேர்தலின்போது, வாக்குப் பதிவைக் கண்காணித்து முறைப்படுத்துவது என்ற பெயரில் போலீசு முகாமிட முயற்சித்தது. போலீசுடன் கூட்டுச் சேர்ந்து சி.பி.எம். குண்டர்கள் இப்பழங்குடியின மக்கள் மீது தாக்குதல் நடத்தி, அதிகாரவர்க்க - போலீசு ஆட்சியை நிறுவ எத்தணித்தனர். அந்த முயற்சியையும் லால்கார் மக்கள் தமது போராட்டங்களால் முறியடித்தனர்.

தேர்தல் முடிந்த பிறகு, இப்போது மீண்டும் தமது அதிகாரத்தை நிலைநாட்ட போலீசும் - அதிகார வர்க்கமும் கிளம்பின. அதனுடன் கூட்டுச் சேர்ந்து சி.பி.எம். குண்டர்கள் ஆள்காட்டிகளாகவும் அடியாட்களாகவும் செயல்பட்டனர். இவர்களின் கூட்டுச் சதிகள் - சூழ்ச்சிகள் - தாக்குதல்களை முறியடித்த லால்கார் பழங்குடியின மக்கள், கடந்த ஜூன் 15-ஆம் தேதியன்று சி.பி.எம். குண்டர்படைத் தலைவர்களது வீடுகளையும் உள்ளூர் சி.பி.எம் கட்சி அலுவலகங்களையும் தாக்கித் தீயிட்டுக் கொளுத்தினர்.

இதற்கு முன்னதாக, நந்திகிராமம் - கேஜூரி பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரசு வெற்றி பெற்றதும், ஹேதியா நகரிலுள்ள சி.பி.எம். வட்டாரக் கமிட்டி அலுவலகம் ஜூன் 9-ஆம் தேதியன்று திரிணாமுல் காங்கிரசு

கட்சியினரால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அரசு அதிகாரத்தைக் கொண்டும் குண்டர் படைகளைக் கொண்டும் தேர்தலின் போது வன்முறை வெறியாட்டங்களைக் கட்டவிழ்த்து விட்ட சி.பி.எம். உள்ளூர் தலைவர்களது வீடுகளும் கட்சி அலுவலகங்களும் நந்திகிராமம் பகுதியில் அடுத்தடுத்து திரிணாமுல் காங்கிரசு கட்சியினரால் தாக்கப்பட்டுத் தீயிடப்பட்டன.

இவற்றை அரசியல் வன்முறை என்று சாடும் சி.பி.எம் கட்சி, லால்கார் மக்கள் போராட்டத்தை மட்டும் பயங்கரவாத வெறியாட்டம் என்று குற்றம் சாட்டுகிறது. லால்கார் மக்கள் சி.பி.எம். அலுவலகங்களையும் குண்டர்படைத் தலைவர்களது வீடுகளையும் மட்டும் தாக்கித் தீயிடவில்லை. அவர்கள் போலீசாரையும் அதிகார வர்க்கத்தையும் அடித்து விரட்டி விட்டு, அரசு அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்துக் கொண்டு, தமது சொந்த ஆட்சியை நடத்துகிறார்கள். அதுதான் பயங்கரவாதம் என்கிறது 'இடதுசாரி' அரசு. சட்டத்தின் ஆட்சிக்கு எதிராக, அதிகார வர்க்க - போலீசு ஆட்சிக்கு எதிராக தமது சொந்த ஆட்சியை நிறுவக் கிளம்பிவிட்டார்களே, அதுதான் பயங்கரவாதம் என்கிறது சி.பி.எம். அரசு.



அரசைக் கவிழ்க்கச் சதி செய்யும் 'பயங்கரவாதிகள்': போலீசு-துணை இராணுவப் படைகளை நுழைய விடாமல் மறிக்கும் பழங்குடியின மக்கள்.

''இப்பயங்கரவாதத்தையும், அதைப் பின்னாலிருந்து கொண்டு இயக்கி வரும் மாவோயிஸ்டு பயங்கரவாதிகளையும் முறியடிக்க மாநிலப் போலீசுப் படை போதாது; மைய அரசின் துணை ராணுவப் படைகளையும் அனுப்ப வேண்டும்'' என்று டெல்லிக்குப் பறந்தார், போலி கம்யூனிஸ்டு முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா. அரசியலில் எதிரெதிர் முகாம்களில் உள்ள காங்கிரசும் சி.பி.எம்.மும் லால்கார் மக்களின் 'பயங்கரவாதத்தை' ஒழிப்பதில் ஓரணியில் நின்றன. முதலில் மூன்று கம்பெனி துணை இராணுவப் படைகளை அனுப்பிய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், அடுத்ததாக ''கோப்ரா'' அதிரடிப்படையையும் எல்லைப் பாதுகாப்பு படையின் ஒரு பிரிவினரையும் லால்காருக்கு ஏவினார். மொத்தம் எவ்வளவு போலீசு - துணை ராணுவப் படையினர் லால்காரில் குவிக்கப்பட்டனர் என்ற விவரத்தை இன்றுவரை அரசு அறிவிக்கவில்லை.

# சிவப்பு ஜமீன்தார்களுக்கு எதிராக பழங்குடியினரின் போர்க்கோலம்!

**லா**ல்கார் வட்டாரம், தரம்பூரில், சி.பி.எம். வட்டாரக் கமிட்டி செயலாளர் அனுஜ் பாண்டேவும் அவரது சகோதரர்களும் கட்டியுள்ள ஆடம்பர பங்களா, இப்பகுதியிலேயே மிகப் பெரியது. பளிங்குக் கற்கள் பொருத்தப்பட்டு, ஆடம்பர சாதனங்களைக் கொண்ட இந்த பங்களா, சி.பி.எம். தலைவர்கள் பழங்குடியின மக்களை ஏய்த்தும் மிரட்டியும் சுரண்டியும் அடக்கியும் வருவதன் அடையாளச் சின்னம். பழங்குடியின மக்களின் வெறுப்புக்கு ஆளான அவமானச் சின்னம்.

கடந்த 32 ஆண்டுகால இடதுசாரி முன்னணியின் 'பொற்கால' ஆட்சியில் லால்கார் பழங்குடியின மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி அவதிப்படுகிறார்கள். காட்டுக் கிழங்குகளையும், காட்டெறும்புப் புற்றிலுள்ள முட்டைகளையும் வேக வைத்து உண்ணும் அவலத்தில் உழல்கிறார்கள். ஆரம்பப் பள்ளியோ, ஆரம்ப சுகாதார நிலையமோ, குடிநீர், சாலை - மின்சார வசதியோ இல்லாமல் பழங்குடியின மக்கள் தத்தளிக்கும்போது, சிவப்பு ஜமீன்தார்களான சி.பி.எம் தலைவர்கள் ஆடம்பர பங்களா கட்டிக் கொண்டு உல்லாச - சுகபோகத்தில் மிதக்கின்றனர்.

லால்கார் வட்டாரக் கமிட்டிச் செயலாளரான அனுஜ் பாண்டே, சி.பி.எம். கட்சியின் முழுநேர ஊழியர். கட்சி அவருக்கு மாதாந்திர பராமரிப்புத் தொகையாக ரூ.1500 கொடுக்கிறது. இந்தத் தொகையைக் கொண்டு எப்படி அவரால் இப்படியொரு பங்களா கட்ட முடிந்தது? ''இது எனது சொத்து அல்ல; எனது சகோதரர்கள் விவசாய வர்த்தகம் (அக்ரி பிசினஸ்) செய்து, அதில் கிடைத்த வருவாயில் இந்த வீட்டைக் கட்டியுள்ளனர். நான் அந்த வீட்டில் தங்கியிருக்கிறேன்'' என்கிறார் அனுஜ் பாண்டே. பாண்டேயின் சகோதரரான தாலிம், லால்கார் சி.பி.எம். கட்சிக் கமிட்டித் தலைவர்களுள் ஒருவர். பாட்டாளிகளின் தோழனாகிய அவர் பங்களா கட்டியது எப்படி? நிலமற்ற பழங்குடியின ஏழைகள் நிறைந்துள்ள இப்பகுதியில் பாண்டே சகோதரர்கள் 40 பிகா (ஏறத்தாழ 13 ஏக்கர்) நிலத்துடன் நவீன ஜமீன்தாரர்களாக வலம் வருவது எப்படி?

லால்கார் வட்டார பஞ்சாயத்துகளுக்கு ஒதுக்கப்படும் நிதியிலிருந்து வளர்ச்சித் திட்ட பணிகளுக்கான நிதி வரை அனைத்தையும் அதிகார வர்க்கத்தின் துணையோடு பாண்டே கும்பல் நீண்ட காலமாக விழுங்கி ஏப்பம் விட்டு வந்துள்ளது. லால்கார் வட்டாரத்தில் சாலை இணைப்புகளே இல்லாத நிலையில், ஏற்கெனவே போடப்பட்ட சாலைகளும் நடக்கக்கூட லாயக்கற்றதாக உள்ள நிலையில், தார்ச் சாலைகள் போடப்பட்டதாக கணக்கு காட்டி கோடிகோடியாய் இக்கும்பல் விழுங்கியிருப்பதே, இக்கும்பல் அடித்துவரும் கொள்ளைக்குச் சான்று கூறப் போதுமானது. இதுதவிர, இப்பகுதியில் நிலங்களை விற்பது-வாங்குவது உள்ளிட்டு எந்தவொரு பரிமாற்றம் நடக்கும் போதும், கட்சிக்கு நன்கொடை என்ற பெயரில் இக்கும்பலுக்குக் கப்பம் கட்ட வேண்டும். ஆயுதமேந்திய சி.பி.எம். குண்டர் படையை வைத்துக் கொண்டு பழங்குடியின மக்களை அச்சுறுத்தி ஆதிக்கம் செய்து வரும் இக்கும்பலை மீறி, யாரும் எதுவும் செய்துவிட முடியாது. சி.பி.எம். ''தாதா''க்களின் ஒப்புதல்

மாவோயிஸ்டுகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்துத் தடை செய்த மைய அரசு, லால்கார் காடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றி அழிப்பது என்ற பெயரில் இவ்வட்டாரமெங்கும் அரசு பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. மே.வங்க இடதுசாரி அரசு அதற்கு ஒத்தூதியது.

இப்பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க லால்கார் பழங்குடியின மக்கள் சாலைகளில் மரங்களை வெட்டிப் போட்டும் அகலமான குழிகளை வெட்டியும் தடையரண்களை ஏற்படுத்தி, வில்-அம்பு, கோடாரிகளுடன் அரசு பயங்கரவாதப் படைகளை மறித்து நின்றார்கள். ''அப்பாவி மக்கள் மீது தாக்குதலை நடத்தாதீர்கள்; நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண தயாராக உள்ளோம்'' என்று பழங்குடியின மக்களின் போராட்டக் கமிட்டி மத்திய-மாநில அரசுகளிடம் பலமுறை கோரிய போதிலும், அவை ஏற்க மறுத்துவிட்டன. மறித்து நின்ற மக்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி கிராமங்களைச் சூறையாடி கண்ணில்பட்டவர்களைக் கொடூரமாகத் தாக்கி போலீசும் துணை இராணுவப் படைகளும் வெறியாட்டம் போட்டன. இப்படி ஒவ்வொரு கிராமமாகச் சுற்றி வளைத்து அரசு பயங்கரவாதிகள் தாக்குவதையும், இதற்குத் துணையாக வான் படையின் ஹெலிகாப்டர்கள் வட்டமிடுவதையும் கண்டு அஞ்சிய மக்கள், கிராமங்களை விட்டு வெளியேறி நகரத்திலுள்ள பள்ளிகள் - மைதானங்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர்.

லால்கார் பகுதிக்குள் பத்திரிகையாளர்களோ, மனித உரிமை அமைப்பினரோ, தன்னார்வக் குழுக்களோ நுழைய அனுமதி மறுக்கப்பட்டு, அரசு பயங்கரவாத அட்டூழியங்கள் வெளியுலகுக்குத் தெரியாமல் மூடிமறைக்கப்படுகின்றன. இக்கொடுஞ்செயலுக்கு எதிராக பிரபல வரலாற்றியலாளரான சுமித் சர்க்கார், பிரபல எழுத்தாளர் பிரஃபுல் பித்வாய், மகாசுவேதாதேவி, கலைஞர்களான தருண் சன்யால், கௌதம் கோஷ், அபர்ணா சென் முதலானோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். கொல்கத்தாவில் மனித உரிமை இயக்கத்தினரும் அறிவுத்துறையினரும் கண்டனப் பேரணி நடத்தியுள்ளனர்.

லால்கார் மக்களை மாவோயிஸ்டு பயங்கரவாதிகள் தூண்டிவிட்டு அரசுக்கெதிராகப் போராட்டம் நடத்துகிறார்கள் என்று போலி கம்யூனிச ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும்போதே, எந்த மாவோயிஸ்டு தூண்டுதலும் இல்லாமல் பிர்பூம் மாவட்டம் போல்பூரில் மே.வங்க அரசின் நிலப்பறிப்புக்கு எதிராக விவசாயிகள் தன்னெழுச்சியாகத் திரண்டு அண்மையில் போராட்டத்தை நடத்தியுள்ளனர். போராடிய விவசாயிகளை போலீசும் சி.பி.எம். குண்டர்களும் கூட்டுச் சேர்ந்து தாக்கி ஒடுக்குவதை முதலாளித்துவப் பத்திரிகைகளே படம் பிடித்து அம்பலப்படுத்துகின்றன.

புரட்சி சவடால் அடித்து வந்த போலி கம்யூனிஸ்டுகள், மறுகாலனியாக்க சூழலில் உழைக்கும் மக்களின் எதிரிகளாகவும் குண்டர்படைகளை ஏவி மக்களைக் குதறும் பாசிச பயங்கரவாதிகளாகவும் சீரழிந்து விட்டதை சிங்கூர்-நந்திகிராமம் முதல் இன்று லால்காரில் நடந்துள்ள வெறியாட்டங்கள் வரை திரும்பத் திரும்ப நிரூபித்துக் காட்டுகின்றன. காங்கிரசு அரசும் மே.வங்க 'இடதுசாரி' அரசும் கூட்டுச் சேர்ந்து பயங்கரவாத வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு, லால்காரை 'விடுதலை' செய்து 'அமைதி'யை நிலைநாட்டிவிட்டதாக அறிவிக்கின்றன. இவ்வளவுக்குப் பின்னரும் நாட்டு மக்கள் நடுநிலை வகிக்கவோ 'இடதுசாரி' அரசு மீது நம்பிக்கை வைக்கவோ அடிப்படை இல்லை. அரசு பயங்கரவாத அடக்குமுறைக்கு உழைக்கும் மக்கள் அடங்கிக் கிடந்ததாக வரலாறுமில்லை.

● பாலன்

---

பெறாமல் பழங்குடியினர் திருமண நிகழ்ச்சியைக் கூட நடத்த முடியாது. சி.பி.எம். கட்சியைத் தவிர வேறெந்த அரசியல் கட்சியையும் ஆதரிக்கவும் முடியாது.

லால்கார் பழங்குடியின மக்களை அரசியல்படுத்தி, போலீசு மற்றும் சி.பி.எம்.மின் அடக்குமுறைக்கு எதிராக அணிதிரட்டிப் போராடி வரும் மாவோயிஸ்டுகள், கடந்த ஜூன் 15-ஆம் தேதியன்று, ''சிவப்பு ஜமீன்தார்களது ஆதிக்கச் சின்னமாகத் திகழும் அனுஜ் பாண்டேயின் பங்களாவை இடித்துத் தள்ளுவோம், வாருங்கள்!'' என்று போராட்ட அறைகூவல் விடுத்தனர்.

சிவப்பு ஜமீன்தார்களது கொட்டத்தாலும் அடக்குமுறையாலும் குமுறிக் கொண்டிருந்த பழங்குடியின மக்கள், பெருத்த ஆரவாரத்துடன் பறைகளும் முரசுகளும் முழங்க, வில், அம்பு, கோடாரி, கடப்பாரைகளுடன் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு அனுஜ் பாண்டே கும்பலின் பங்களாவை உடைத்துத் தள்ளினர். பழங்குடியின மக்களின் பேரெழுச்சியைக் கண்டு அரண்டு போன பாண்டே கும்பல், புடவையைக் கட்டிக்

போராட்டத் திருவிழா: பறைகள்-மத்தளம் முழங்க ஆரவாரத்துடன் சிவப்பு ஜமீன்தாரின் வீட்டை இடித்து நொறுக்கும் பழங்குடியின மக்கள்.



கொண்டு கொல்லைப்புற வழியாகத் தப்பியோடியது. இதேபோல, பின்பூரிலுள்ள பெலாடிக்ரி கிராம சி.பி.எம். செயலாளரான சந்திகரண் என்ற சிவப்பு ஜமீன்தாரின் வீடும் பழங்குடியின மக்களால் இடித்து நாசப்படுத்தப்பட்டது. இவ்வட்டாரத்திலுள்ள சி.பி.எம். கட்சி அலுவலகங்கள் தீயிடப்பட்டன.

அடக்குமுறைக்கு எதிரான பழங்குடியின மக்களது பேரெழுச்சியின் ஓர் அங்கமாக சிவப்பு ஜமீன்தார்களின் பங்களாக்களும், சி.பி.எம் அலுவலகங்களும் தாக்கப்பட்டதை பயங்கரவாத வெறியாட்டம் என்று போலி கம்யூனிஸ்டுகளும் ஆளும் வர்க்கங்களும் தேசிய பத்திரிகைகளும் கொச்சைப்படுத்தி வருகின்றனர்.

அதேசமயம் பழங்குடியின மக்களை ஒடுக்கிச் சுரண்டிக் கொழுத்து ஆதிக்கம் செய்யும் சிவப்பு ஜமீன்தார்களைப் பற்றி வாய் திறக்க மறுக்கின்றனர். சமூக பாசிஸ்டுகளாகச் சீரழிந்து விட்ட சி.பி.எம். கட்சி யாருடைய நலனுக்காக நிற்கிறது என்பதற்கு இதை விட வேறென்ன ஆதாரம் வேண்டும்?

●

ஈரான்:

# ஆட்சிக் கவிழ்ப்புக்கு அலையும் அமெரிக்கா

## ஏகாதிபத்திய மேற்குலகம் வழிமொழியும் சீர்திருத்தங்களைவிட, ஈரானின் இறையாண்மை மேலானது!

ஈரான் அதிபர் தேர்தலில் தற்போதைய அதிபர் முகமது அகமதிநிஜாத் மீண்டும் வெற்றி பெற்றதையடுத்து அங்கு நடந்து வரும் போராட்டங்கள், ஈரான் உள்நாட்டுப் போரில் விழுந்துவிடுமோ என்ற ஐயத்தை உலகெங்கும் தோற்றுவித்திருக்கிறது. அதிபர் தேர்தலில் அகமதிநிஜாத் தோற்றுப் போய் விடுவார் என மேற்குலக நாடுகள் எதிர்பார்த்து இருந்ததற்கு மாறாக, அவர் ஒரு கோடியே பத்து இலட்சம் வாக்குகள் அதிகம் பெற்று மிகப்பெரும் வெற்றியை ஈட்டியுள்ளார். மேற்குலகாலும், ஈரானின் நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தாலும் வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்பட்ட மிர் ஹுசைன் மௌசாவி, ''இத்தேர்தலில் மோசடிகள் நடந்திருப்பதாகவும், அகமதிநிஜாதின் வெற்றி திருடப்பட்ட வெற்றி'' என்றும் குற்றஞ்சுமத்தி, தனது தோல்வியை ஏற்க மறுத்து வருகிறார்.

தேர்தல் முடிவுகளை ஆதரித்தும், எதிர்த்தும் பேரணிகளும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறத் தொடங்கியவுடனேயே, ஈரான் நாட்டின் உயர்மட்டத் தலைவரான அயத்துல்லா அலி காமேனி, ''மௌசாவியின் குற்றச்சாட்டுகள் குறித்து பரிசீலிக்கப்படும்; சில வாக்குச்சாவடிகளில் மீண்டும் வாக்குகள் எண்ணப்படும்'' என அறிவித்தார். சாதாரண உள்நாட்டுப் பிரச்சினையாக முடிந்திருக்க வேண்டிய இவ்விசயத்தை, மேற்குலகப் பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் ஈரானில் ஏதோ ஜனநாயகப் படுகொலை நடந்துவிட்டதைப் போல ஊதிப் பெருக்கின. ஈரானில் எப்படியாவது ஒரு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திவிட முயன்று வரும் அமெரிக்கா மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசுகளுக்கு, இப்பிரச்சினை அவல் கிடைத்தது போலானது.


மேற்குலகின் ஆதரவும், ஈரானில் அரசியல் செல்வாக்கு கொண்ட மத குருமார்களில் ஒரு பிரிவினரின் ஆதரவும் தனக்குக் கிடைத்திருப்பதை உணர்ந்து கொண்ட மௌசாவி தேர்தல் முடிவுகளை ரத்து செய்துவிட்டு, புதிய தேர்தல் நடத்த வேண்டும் எனப் புதிதாகக் கோரத் தொடங்கினார். இதனிடையே, உயர்மட்டத் தலைவர் அயத்துல்லா காமேனி, ''தேர்தலில் முறைகேடுகள் நடக்கவில்லை'' என அறிவித்து, அகமதிநிஜாதின் வெற்றியை உறுதிப்படுத்தினார். இன்னொருபுறம், மௌசாவியின் ஆதரவாளர்கள் தலைநகர் டெஹ்ரானையும், டெஹ்ரான் பல்கலைக்கழகத்தையும் மையப்படுத்தி நடத்தி வரும் போராட்டங்களை ஒடுக்குவதற்கு அரசின் துணை இராணுவப் படைகள் இறக்கிவிடப்பட்டன. மேற்குலக ஊடகங்கள் இந்த அடக்குமுறையைப் படம் பிடித்துக்காட்டி, உலக மக்களிடம் எதிர்த்தரப்புக்கு ஆதரவு திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளன.

•••


ஈரானின் அரசு கட்டமைப்பு முற்றிலும் வேறுபட்ட தன்மை கொண்டது. அந்நாட்டின் அதிபரும் நாடாளுமன்றமும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், மத குருமார்களின் கட்டுப்பாட்டை மீறி அதிபரும் நாடாளுமன்றமும் தன்னிச்சையாக நடந்து கொள்வதற்கு முட்டுக்கட்டை போடுவதற்காகவே, மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத பல்வேறு அமைப்புகள் அரசின் அங்கங்களாக உருவாக்கப்பட்டுள்ளன.

மத குருமார்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆயுட்காலத்துக்கும் நியமிக்கப்படும் உயர்மட்டத் தலைவர்தான், மக்களால்

ஈரானின் உயர்மட்டத் தலைவர் அயத்துல்லா அலி காமேனி.




அதிபர் தேர்தலில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வென்று மீண்டும் அதிபராகியுள்ள முகமது அகமதி நிஜாத்.



தேர்ந்தெடுக்கப்படும் அதிபருக்கும் மேலானவர். அரசு, நிர்வாகம் தொடர்பான அனைத்து விவகாரங்களிலும் உயர்மட்டத் தலைவரின் முடிவுதான் இறுதியானது.

290 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றமும், 86 மதகுருமார்களை உறுப்பினர்களாகக் கொண்ட நிபுணர்களின் அவையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. நிபுணர்களின் சபைதான் உயர்மட்டத் தலைவரை நியமிக்கும் அதிகாரம் கொண்டது. நிபுணர்களின் அவை உறுப்பினர்களின் பதவிக்காலம் எட்டு ஆண்டுகளாகும்.



மேற்குலக நாடுகளால் தூக்கிப் பிடிக்கப்படும் 'சீர்திருத்தவாதி' மிர் ஹுசைன் மௌசாவி.

12 மதகுருமார்களை உறுப்பினர்களாகக் கொண்டது, காப்பாளர் அவை. இவ்வுறுப்பினர்களில் ஆறு பேர் உயர்மட்டத் தலைவராலும், ஆறு பேர் நீதிமன்றத்தாலும் நியமிக்கப்பட்டு, இந்த அவை நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று இயங்குகிறது. இஸ்லாமியச் சட்டங்களுக்கு முரணாக நாடாளுமன்றத்தில் ஏதாவது சட்டமியற்றப்பட்டால், அவ்வகையான சட்டங்களை ரத்து செய்யும் அதிகாரம் கொண்டது, காப்பாளர் அவை.

நாடாளுமன்றத்திற்கும் காப்பாளர் அவைக்கும் இடையே ஏற்படும் முரண்பாடுகளை, பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்காக ஆலோசனை அவை நியமிக்கப்பட்டு இயங்கி வருகிறது. இஸ்லாமியச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்வது நீதிமன்றத்தின் முக்கியமான பணியாகும். இராணுவம் ஒருபுறமிருக்க, மத குருமார்களின் செல்வாக்கிற்குக் கட்டுப்பட்ட புரட்சிகர காவல் படையும், பாஸ்ஜி போராளிகள் படையும் அரசியல்ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவை. சுருக்கமாகச் சொன்னால், ஈரானில் நடைபெறும் ஷியா பிரிவு முசுலீம் மத குருமார்களின் சர்வாதிகார ஆட்சியை மூடி மறைக்கும் திரையாகவே நாடாளுமன்றமும், தேர்தலும் பயன்படுகின்றன.

•••

முதலாளித்து நாடுகளில் அதிபரையோ, பிரதமரையோ தேர்ந்தெடுப்பதைத் திரைமறைவில் முதலாளிகள் தீர்மானிப்பதைப் போல, ஈரானில் யார் அதிபராவது என்பதை மத குருமார்கள்தான் தீர்மானிக்கிறார்கள். அந்நாட்டில் நடந்து முடிந்த அதிபர் தேர்தலில் போட்டியிட்ட முகமது அகமதிநிஜாத்திற்கு, உயர்மட்டத் தலைவர் அயத்துல்லா காமேனியும், அவரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் புரட்சிகர காவல் படையும் ஆதரவளித்தன. அதிபர் தேர்தலில் போட்டியிட்ட மற்ற மூவரில் சீர்திருத்தவாதியாகக் கருதப்படும் மௌசாவிக்கு நிபுணர்களின் அவையின் தலைவரும், முன்னாள் அதிபருமான ஹஷேமி ரஃப்சஞ்சானியும், சீர்திருத்த மதகுருமார்களின் அமைப்பும் ஆதரவளித்தனர்.

தேர்தல் மோசடிகள் இல்லாத முதலாளித்துவ அதிகார அமைப்புகளுக்கான தேர்தல்களைக் கற்பனைகூடச் செய்து பார்க்க முடியாது. ஆனானப்பட்ட அமெரிக்காவிலேகூட, ஜுனியர் ஜார்ஜ் புஷ் முதன்முறையாக அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபொழுது, அத்தேர்தலில் ஏகப்பட்ட மோசடிகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. இக்குற்றச்சாட்டுகள் முழுமையாக, முறையாக விசாரிக்கப்படாமலேயே அந்நாட்டு நீதிமன்றத்தால், ஜார்ஜ் புஷ்ஷின் தேர்வு உறுதி செய்யப்பட்டது.

ஈரான் நாட்டில் நடந்த அதிபர் தேர்தலில் அரசே அகமதிநிஜாத்துக்குச் சாதகமாக நடந்து கொண்டதற்குப் பல மறுக்க முடியாத ஆதாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், அவர் பெற்றுள்ள வாக்குகள் அனைத்துமே மோசடியானவை என்று கூறிவிட முடியாது. இத்தேர்தலில் நான்கு கோடி வாக்குகள் பதிவாகியுள்ளன. அகமதிநிஜாத் ஏறத்தாழ ஒரு கோடிக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில், மௌசாவியைத் தோற்கடித்துள்ளார். மௌசாவியின் ஆதரவாளர்கள்கூட 50 நகரங்களில் ஏறத்தாழ 30 இலட்சம் வாக்குகளில் முறைகேடுகள் நடந்திருக்கலாம் என்றுதான் கூறுகிறார்கள். இந்த 30 இலட்சம் வாக்குகளைக் கழித்துவிட்டுப் பார்த்தால்கூட, அகமதிநிஜாத்தின் வெற்றி தீர்மானகரமான ஒன்றுதான்.

அதிபர் தேர்தலையடுத்து, ஈரானின் ஆளும் வர்க்கம் இரண்டாகப் பிளவுபட்டுக் கிடப்பது மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது. இப்பிளவிற்கு தேர்தலில் நடந்த தில்லுமுல்லுகளைக் காரணமாகக் கூறுவது, காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்த கதையைப் போன்றது. ஈரானின் ஆளும் கும்பல்களுக்குள் நெடுங்காலமாகவே நடந்து வந்த அதிகாரப் போட்டி, தேர்தலுக்குப் பின் பகிரங்கமாக வெடித்துவிட்டது என்பதே உண்மை. ஈரான் சமூக அமைப்பேயே இரு கூறாக வகுந்து போடும் அளவிற்கு, இப்பிளவு தீவிரமடைந்துள்ளது.

''சிறுவீத உற்பத்தியாளர்களுக்கு எளிதில் கிடைக்கும்படியான நுண்கடன் திட்டங்கள்; பெருவாரியான ஏழை மக்களுக்குப் பயன் தரும்படியான விரிவாக்கப்பட்ட சுகாதாரத் திட்டம்; தனியார் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகளை ஏழைகள் கூட வாங்கிக் கொள்ளும் வாய்ப்புகளை அளிக்கும் பங்குச் சந்தை கொள்கை'' போன்ற கவர்ச்சிகரமான திட்டங்களின் மூலம் கிராமப்புற ஏழைகள், சிறு முதலாளிகள், அரசு ஊழியர்களின் ஆதரவைப் பெற்றிருக்கிறார், அகமதிநிஜாத்.

சீர்திருத்தம், தனிநபர் சுதந்திரம் போன்ற முதலாளித்துவ சொல்லாடல்களின் மூலம் புதுப் பணக்கார கும்பல், நகர்ப்புறத்து நடுத்தர வர்க்கம், மாணவர்கள் ஆகியோரின் ஆதரவைப் பெற்றுள்ளார், மௌசாவி.

லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா போராளிக் குழுவிற்கும் மற்றும் பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவளிப்பதிலும்; யுரேனியத்தைச் செறிவூட்டும் தொழில்நுட்பத்தை ஈரான் பெறும் நோக்கத்திலும் அதிபர் அகமதிநிஜாத் பின்வாங்க மறுத்துவிட்டதோடு, அவர் இந்தப் பிரச்சினையில் அமெரிக்கா-இங்கிலாந்து-இசுரேல் கூட்டணிக்கு எதிராக நிற்கிறார்.

மௌசாவியும் அவரது ஆதரவாளர்களும் சர்வதேசரீதியில் ஈரான் தனிமைப்பட்டுக் கிடப்பதைத் தடுப்பதற்கு, மேற்குலக

ஏகாதிபத்தியங்களோடு சமரசம் செய்து கொள்ள வேண்டும் என முன் மொழிகின்றனர். இதைத்தான் அவர்கள் சீர்திருத்தம் எனக் குறிப்பிடுகின்றனர். அகமதிநிஜாத்தை சர்வாதிகாரி எனத் தூற்றும் மௌசாவியின் ஆதரவாளர்கள், இதற்கு ஆதாரமாக தேர்தல் சமயத்தில் அவர் கைபேசிகளில் குறுஞ்செய்திகளைப் பரிமாறிக் கொள்வதற்குத் தடை விதித்ததையும்; ஈரான் நாட்டுப் பெண்கள் எந்த மாதிரி உடையணிய வேண்டும் என்பதில் தொடங்கி ஆண்கள் பலதார மணம் செய்து கொள்வதற்கு ஆதரவான இஸ்லாமியச் சட்டத்தை மீண்டும் கொண்டு வந்தது முடிய பல ஆதாரங்களை முன் வைக்கிறார்கள்.

அகமதிநிஜாதின் மீதான சீர்திருத்தவாதிகளின் குற்றச்சாட்டுக்களை மறுக்க முடியாதுதான். ஈரானின் பொருளாதாரம் சரிய சரிய, அவர் தனது ஓட்டு வங்கியைத் தக்கவைத்துக் கொள்ள கவர்ச்சிவாத நடவடிக்கைகளிலும், மதப் பழமைவாத நடவடிக்கைகளைத் தூசு தட்டிக் கொண்டு வருவதிலும் தஞ்சமடைந்தார் என்பது உண்மைதான்.

அதேசமயம் சீர்திருத்தவாதிகளும் ஜனநாயகத்தின் காவலர்கள் இல்லை. அதிகாரப் போட்டியில் ஓரங்கட்டப்பட்ட மத குருமார்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஜனநாயகத்திற்குக் குரல் கொடுப்பதைக் கேலிக்கூத்து என்று குத்திக்காட்டாமல் இருக்க முடியுமா? ''நாங்கள் ஆட்சியைப் பிடித்தால், ஈரான் மக்களின் மீது மத குருமார்களின் சர்வாதிகாரத்தைத் திணிக்கும் அரசுக் கட்டமைப்புகளை ஒழித்துக் கட்டுவோம்'' என்று இந்த சீர்திருத்தவாதிகள் வாக்குறுதி கொடுக்கவில்லை; மாறாக, இசுலாமியப் புரட்சிக்கு நாங்கள் எதிராகச் செயல்பட மாட்டோம் என்று வாக்குறுதி அளித்து, உயர்மட்டத் தலைவர், புரட்சிகர காவல் படை ஆகிய அமைப்புகளின் நம்பிக்கையைப் பெற முயன்றார்கள். சீர்திருத்தவாதிகளை ஆதரிக்கும் ஈரான் இளைஞர் பட்டாளத்தின் ஜனநாயகக் கோரிக்கை எல்லாம் ஜீன்ஸ் பேண்ட் அணிவதையும், வலைதளத்தில் ஃப்ரெஎஸ் பண்ணும் உரிமை பெறுவதையும் தாண்டிச் செல்லவில்லை.

•••

**அ**கமதிநிஜாத் தேர்தலில் 'தில்லுமுல்லு' செய்ததைக் 'கடமையுணர்வோடு' கண்டிக்கும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஏகாதிபத்தியங்கள்தான், 1953-ஆம் ஆண்டு, ஈரான் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முகம்மது மொஸாடெக் அரசை, அந்த அரசு ஈரானின் எண்ணெய் வளத்தை நாட்டுடமையாக்க முயன்றதற்காகவும், ஈரானின் கொடுங்கோல் மன்னன் ஷாவின் அதிகாரங்களுக்கு வரம்பிட முயன்றதற்காகவும் அரண்மனைப் புரட்சியின் மூலம் தூக்கியெறிந்தன. அமெரிக்க அடிவருடி ஷாவின் கொடுங்கோலாட்சியைத் தூக்கியெறிந்துவிட்டு, மத அடிப்படைவாதிகள்-தேசியவாதிகள் தலைமையில் அமைந்த தேசிய அரசைத் தூக்கியெறிய, சதாம் உசேனைத் தூண்டிவிட்டு, ஈரான் மீது எட்டாண்டு கால போரைத் திணித்ததும் அமெரிக்க ஏகாதிபத்தியம்தான்.

மௌசாவியின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதைக் கண்டித்து எழுதும் மேற்குலக ஊடகம், பக்கத்தில் ஈராக் மக்கள் அமெரிக்க இராணுவத்தால் நாயைப் போலச் சுட்டுக் கொல்லப்படுவதைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை. ஆப்கான் மீது அமெரிக்கா கொத்துக் குண்டுகள் வீசுவதைக் கண்டு கொள்வதில்லை. ஈரான்-ஈராக் போரின் பொழுது, ஈரான் மக்களின் மீது வீசப்பட்ட இரசாயனக் குண்டுகள் சதாம் உசேனுக்கு அமெரிக்காவால் வழங்கப்பட்டவை என்பது பற்றியும் கள்ள மௌனம் சாதிக்கின்றன, இந்த ஊடகங்கள்.

அணுசக்தி மூலம் மின்சாரம் தயாரிக்கும் உரிமை ஈரானுக்கு உண்டு என்பதை அங்கீகரிக்க மறுத்த பெருமையைக் கொண்டது அமெரிக்க ஏகாதிபத்தியம். ஈரானிடம் அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் இல்லை என சர்வதேச அணுசக்தி கமிசன் சான்றளித்த பிறகும், அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி ஐ.நா. மன்றத்தின் மூலம் ஈரான் மீது சட்டவிரோதமான பொருளாதாரத் தடையுத்தரவுகளைத் திணித்தது. அமெரிக்காவின் இந்த அடாவடித்தனத்திற்கு மன்மோகன் சிங் கும்பல் ஒத்துப் பாடியது தனிக்கதை. இப்படி ஈரானின் இறையாண்மையை எள்ளளவும் மதிக்காத மேற்குலக ஏகாதிபத்தியங்கள், இப்பொழுது ஈரானின் எதிர்த்தரப்பின் ஜனநாயகத்திற்காகக் குரல் கொடுப்பது கடைந்தெடுத்த பித்தலாட்டத்தனம்.

**முகமது அகமதி நிஜாதின் வெற்றியைக் கொண்டாடும் முகமாக, அவரது ஆதரவாளர்களால் தலைநகர் டெஹ்ரானில் நடத்தப்பட்ட பிரம்மாண்டமான பேரணி.**



அமெரிக்காவைப் பொருத்தவரை ஈரானில் ஓர் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை நடத்தி, அந்நாட்டில் தனக்குச் சாதகமான கைக்கூலி அரசை நிறுவிவிட வேண்டும் என்பதற்கு அப்பால், அதற்கு வேறெந்த 'ஜனநாயக' நோக்கமும் கிடையாது. ஜூனியர் ஜார்ஜ் புஷ் ஆட்சியிலிருந்தபொழுது ஈரான் மீது படையெடுக்கத் திட்டம் போட்டு, அந்நாட்டை ''தீமையின் அச்சு நாடு'' எனப் பழி சுமத்தினார், அவர். ஆனால் அமெரிக்கா, ஈராக்

போரில் ஆப்பசைத்த குரங்காக மாட்டிக் கொண்டதால், ஈரான் மீது போர் தொடுக்கும் திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

அடுத்ததாக, ஈரானின் அணு ஆராய்ச்சி நிறுவனங்களின் மீது ஓர் அதிரடித் தாக்குதலை நடத்தத் திட்டம் போடப்பட்டது. ஆனால், ஆப்கானில் அமைதியை நிலைநாட்ட ஈரானின் தயவு தேவையாக இருந்ததால், அத்திட்டமும் கைவிடப்பட்டது.

எனினும், சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்யன் போல், ஈரானின் எதிர்த்தரப்பைத் தூண்டிவிட்டு ஆட்சி கவிழ்ப்பு நடத்தும் சதித் திட்டத்தை தயாரித்து, அதற்காக 40 கோடி அமெரிக்க டாலர்களையும் ஒதுக்கிவிட்டுப் போனார், ஜார்ஜ் புஷ். முசுலீம்களுக்கு அமெரிக்கா எதிரியல்ல எனக் கூறிக் கொண்டு திரியும் ஒபாமாவின் ஆட்சியிலும்கூட 40 கோடி அமெரிக்க டாலர் சதித் திட்டம் கைவிடப்படவில்லை.

ஜார்ஜியா போன்ற முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளில் தனக்குச் சாதகமான தரப்பைத் தேர்தல்களின் மூலம் பதவிக்குக் கொண்டு வந்துள்ள அமெரிக்கா, அதே உத்தியை ஈரானிலும் செயல்படுத்த முனைகிறது. அந்த அடிப்படையில் தான் மௌசாவியின் ஆதரவாளர்களுக்கு ஊடகங்கள் மூலம் விரிவான விளம்பரத்தைத் தேடிக் கொடுத்து, உலக மக்களின் முன் உண்மைகளைத் திரித்துப் போட முயன்று வருகிறது.

மௌசாவி தரப்பினர் கூறுவது போல, ஈரானின் பிரச்சினை, ''அகமதிநிஜாதின் சர்வாதிகாரமா? இல்லை, சீர்திருத்தமா?'' என்பதல்ல. மாறாக, ஈராக், சவூதி அரேபியா போல ஈரான் அமெரிக்காவின் தொங்குசதை நாடாக மாறுவதா? இல்லை, சுதந்திரமாக இருப்பதா? என்பதுதான் பிரச்சினையின் மையம். அகமதிநிஜாத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ள மக்கள், ஈரான் இறையாண்மையுள்ள நாடாக இருக்க வேண்டும் என்பதையும் மனதில் இருத்திதான் வாக்களித்துள்ளனர். இந்த நீண்ட நெடிய போராட்டத்தில் ஈரான் மக்கள் தங்கள் சொந்த முயற்சிகளின் மூலமும், உலக மக்களின் ஒத்துழைப்போடும் ஜனநாயக உரிமைகளையும் வென்றெடுப்பார்கள்; அதற்கு மத குருமார்கள் தடையாக இருப்பதை உணரும்பொழுது, மத சர்வாதிகார ஆட்சியையும் தூக்கியெறிவார்கள்.

● செல்வம்

# ''சட்டக் கல்லூரி மாணவி பொன்னம்மாளை தற்கொலைக்குத் தள்ளிய கொலைகார போலீசாரைக் கைது செய்து தண்டனை கொடு!''

**- மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் (HRPC) ஆர்ப்பாட்டம்.**

''உன் மீது விபச்சார கேஸ் போட்டு தெருத்தெருவாக இழுத்து வந்து அவமானப்படுத்துவோம்!'' என்று திருச்சி-கோட்டை ஆய்வாளர் கண்ணன், உதவி ஆய்வாளர் சிவராமன் உள்ளிட்ட போலீசார் மிரட்டியதால் நான் தற்கொலை செய்து கொள்ளத் தீக்குளித்தேன்'' என்று நீதிபதியிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு கடந்த 30.05.09 அன்று மாண்டுபோனார், பொன்னம்மாள். இவர், பெங்களூர் சட்டக்கல்லூரி மாணவி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெரம்பலூர் தொகுதியில் சுயேட்சையாகப் போட்டியிட்ட வேட்பாளர்.




பொன்னம்மாளின் எதிர்காலக் கனவுகளைச் சிதைத்து, அவரது மரணத்துக்குக் காரணமான போலீசார் மீது இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மறுபுறம், இக்குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கத்தோடு சம்பவ நாளன்று கோட்டை ஆய்வாளர் கண்ணன் பணியிலேயே இல்லை என்றும், திருமணமானவர் என்று அறிந்திருந்தும் திருமணமாகாமல் பொன்னம்மாள் கருவுற்றிருந்தார் என்று அவதூறு செய்திகளைப் பரப்பியும் போலீசு கயவாளிகள் கொட்டமடித்து வருகின்றனர்.

பொன்னம்மாளின் சகோதரரான சேட்டு, மக்களைத் திரட்டி சாக்கடையை ஆக்கிரமித்த உள்ளூர் பெரும்புள்ளிக்கு எதிரான போராட்டம் நடத்தி அகற்றச் செய்ததால், ஆத்திரமடைந்த அம்முதலாளி வீசிய எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு பொய்வழக்குகளைப் போட்ட போலீசு, சேட்டு குடும்பத்தைத் தொடர்ந்து வதைத்தது. கடந்த மே மாதத்தில் உள்ளூர் கோயில் திருவிழாவையொட்டி நடந்த தகராறை சாக்காக வைத்து, சேட்டுவையும் அவரது குடும்பத்தினரையும் மிருகத்தனமாகத் தாக்கி இழுத்துச் சென்றது. நியாயம் கேட்க போலீசு நிலையம் சென்ற பொன்னம்மாளை நாக்கூசும் வார்த்தைகளால் சாதிவெறியோடு இழிவுபடுத்திய ஆய்வாளர் கண்ணனும் துணை ஆய்வாளர் சிவராமனும், விபச்சார வழக்கு போட்டு தெருத்தெருவாக இழுத்து வருவோம் என்று மிரட்டி எச்சரித்ததால் மனமுடைந்த அவர் தீக்குளித்து மாண்டு போயுள்ளார்.

திருச்சி போலீசு நடத்திவரும் அட்டூழியங்களுக்கு ஒரு சாட்சியம்தான், பொன்னம்மாளின் தற்கொலைச் சாவு. மக்களின் நண்பனாகச் சித்தரித்துக் கொண்டு, வரம்பற்ற அதிகாரத்துடன் கொட்டமடித்து வரும் போலீசாரின் முகத்திரையைக் கிழித்து இப்பகுதியில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) அதன் தொடர்ச்சியாக, பல்வேறு அரசியல் கட்சிகள், இயக்கங்கள், பத்திரிகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களை அணிதிரட்டி 18.06.09 அன்று சிந்தாமணி அண்ணா சிலை அருகே கொலைகார போலீசுக்கு எதிராக போர்க்குணமிக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. '' பொன்னம்மாள் குடும்பத்துக்கு ரூ. 10 லட்சம் நிவாரணம் வழங்கு! கொலைகாரர்களான கண்ணன், சிவராமன் ஆகியோரைப் பணியிலிருந்து நீக்கிக் கைது செய்து, அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அத்தொகையிலிருந்து நிவாரணம் வழங்கு! அப்பாவிகள் மீது போலீசு சோடித்துள்ள பொய்வழக்குகள் அனைத்தையும் ரத்து செய்!'' என்ற கோரிக்கைகளை முன்வைத்து நடந்த இந்த ஆர்ப்பாட்டம், உழைக்கும் மக்கள் அணிதிரண்டு போராடாமல் போலீசு அட்டூழியங்களுக்கு முடிவு கட்ட முடியாது என்பதை உணர்த்துவதாக அமைந்தது.

-பு.ஜ.செய்தியாளர்கள்.

# கல்வி வியாபாரிகளின் கட்டணக் கொள்ளை:

# சட்டம் போட்டுத் தடுக்க முடியுமா?

## அரசும், கல்வி வியாபாரிகளும் ஜாடிக்கேத்த மூடியாய்ச் செயல்படுகிறார்கள் என்பதே உண்மை.

தனியார் ஆற்றிவரும் ''கல்விச் சேவை'' வரலாற்றிலேயே, இதுவரை இல்லாத வகையில் நர்சரி பள்ளிகள் தொடங்கி தனியார் சுயநிதி பொறியியல், மருத்துவக் கல்லூரி வரை கல்வி கட்டணங்களும், கட்டாய நன்கொடைகளும் பன்மடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன.

சென்னையிலுள்ள எஸ்.பி.ஓ.ஏ.பள்ளியில் 6-ஆம் வகுப்புக்கு சென்ற ஆண்டு கட்டணம் ரூ.17,000/-. அது, இந்த ஆண்டு ரூ.25,025/-ஆக உயர்ந்திருக்கிறது என்பதிலிருந்தே இதன் பரிமாணத்தைப் புரிந்து கொள்ளலாம். 6-ஆம் வகுப்புக்கே இந்தக் கதியெனில், பொறியியல்-மருத்துவக் கல்லூரிகளின் நிலையைச் சொல்லவே வேண்டாம்.

இதுவரை 'தரமானக் கல்விக்காக' தனியார் கேட்டதைக் கொட்டியழுத பெற்றோர்கள், இன்று நிலைமை கைமீறிப் போனதையடுத்து, வேறுவழியேயின்றி கட்டணஉயர்வுக்கெதிராக ஆங்காங்கே பள்ளிகளுக்கு முன் கூடிக் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறார்கள். எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி நிர்வாகத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டமே நடத்தியிருக்கிறார்கள்.

இன்று இந்த தனியாரின் பகற்கொள்ளை குறித்து எழுதாத பத்திரிகைகளில்லை; இதனை கவரேஜ் பண்ணாத தொலைக்காட்சிகளில்லை என்று கூறுமளவுக்கு எல்லாம் பட்டவர்த்தனமான பின்பும், ''புகார் வந்தால் நடவடிக்கை எடுக்கத் தயார்'' என வசனம் பேசுகிறது, அரசு! ''இதைப்பார்த்துக் கொண்டு அரசு சும்மா இருக்காது'' என்கிறார், மாநில ஆரம்பக் கல்வி அமைச்சர் தங்கம் தென்னரசு.'' கட்டாய நன்கொடை வசூலில் ஈடுபடும் கல்வி நிறுவனங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்'' என்கிறார், மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் கபில்சிபல்.

வெற்றுச்சவடால்களையும், 'திடீர் ரெய்டு' நாடகங்களையும் அரங்கேற்றி, மக்களின் எதிர்ப்புணர்வை மடைமாற்றி நீர்த்து போகச் செய்ய முயலுகிறது அரசு. அரசுக்கு அறிக்கை அனுப்புவதைத் தவிர வேறு எந்த அதிகாரமும் இல்லாத ஒரு பல்லில்லாத அமைப்பான ஆய்வு குழுவை அனுப்பி கல்வி வியாபாரிகளை 'பயமுறுத்துகிறது.'

''மாநிலம் முழுவதும் உள்ள 350-க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், இது போன்ற சுரண்டல்களால் மூன்றாயிரம் கோடி ரூபாய் வரை கறுப்புப் பணம் கைமாறுகிறது'' எனப் பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்கிறார், இந்த ஆய்வுக் குழுவின் தலைவர் பேரா. இராமசாமி. இந்த அரிய கண்டுபிடிப்பை வெளியிட ஆய்வுக் கமிட்டி எதற்கு?

தனியார் சுயநிதி கல்வி வியாபாரிகள் என்றாலே சாராய வியாபாரி ஜேப்பியார், சாராய உடையார் மட்டும் தானா? டாடா, அம்பானி, ஸ்பிக் முத்தையா, மஹிந்திரா உள்ளிட்ட எண்ணற்ற தரகுப் பெருமுதலாளிகளும்; தி.மு.க.வின் ஜெகத்ரட்சகன், ரகுபதி, எ.வ.வேலு, டி.ஆர்.பாலு, அ.தி.மு.க.வின் தம்பிதுரை, நீதிக்கட்சி ஏ.சி.எஸ். தே.மு.தி.க. விசயகாந்த், காங்கிரசு தங்கபாலு போன்ற 'மக்களின் பிரதிநிதிகளும்' இந்த பிசினஸில் கால் நனைத்துள்ளனர். இவர்கள்தானே மத்திய மாநில அமைச்சர்களாக வலம் வருகின்றனர்.

இந்த கொள்ளைக்கார கும்பல்களெல்லாம் கூடிக் குலாவி, கும்மாளமிடும் நாடாளுமன்றம், சட்டமன்றங்களிலிருந்து, இத்தனியார் கொள்ளைக்கு எதிரான 'நடவடிக்கை'யை எதிர்பார்க்க முடியுமா என்ன?

**பனிமலர் பொறியியல் கல்லூரியைச் சோதனையிட வந்த ஆய்வுக் குழுவினரை, ஆளில்லாத அலுவலகம்தான் வரவேற்றது!**



கடந்த 95-ஆம் ஆண்டு, நாடாளுமன்ற மேலவையில், தனியார் சுயநிதிக் கல்லூரிகள் மற்றும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான 'தனியார் பல்கலை மசோதா' ஒன்று அறிமுகம் செய்யப்பட்டது. அவையின் இரு பக்கங்களிலிருந்தும் எந்த எதிர்ப்புமில்லை. ஆனாலும் 14 ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட அம்மசோதா இன்றும் நிறைவேறாமல் மேலவையில் உறங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில்தான், ''இந்த சட்டப்பேரவை கூட்டத்தொடரிலேயே தனியார் கல்லூரிகளை கட்டுப்படுத்தும் வகையில் மசோதா ஒன்றைத் தாக்கல் செய்யப்போவதாய் பூச்சாண்டி காட்டியிருக்கிறார்'', மாநில உயர்கல்வி அமைச்சர் பொன்முடி.

இப்பொழுது 'முழித்து'க் கொண்டுள்ள அமைச்சர், இதற்குமுன் கட்டணக் கொள்ளை நடந்தபோதெல்லாம், அதனைத் தடுக்காமல் எதைப் பிடுங்கிக் கொண்டிருந்தார்? மேலும்,

# கல்வி தனியார்மயமாவதைத் தடுக்காமல், கட்டணக் கொள்ளையை ஒழிக்க முடியாது!

கல்வி தனியார்மயமாக்கப்படுவதற்கெதிராக தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் பிரச்சார இயக்கங்களை நடத்திவரும் புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி, கடந்த ஜூன் 18-ஆம் தேதியன்று சென்னை மெமோரியல் அரங்கம் அருகிலும் சேலத்தில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஜூன் 15-ஆம் தேதியன்று போஸ் மைதானத்திலும் ''கல்வி தனியார்மயத்தைத் தடுத்து அரசுடமையாக்க''க் கோரி ஆர்ப்பாட்டங்களை நடத்தின.


சேலத்தில்...


சென்னையில்...

சென்னை ஆர்ப்பாட்டத்தில், ''தனியார் கட்டணக் கொள்ளையால் நேரடியாகப் பாதிக்கப்படாத இந்த மாணவர்கள் பிறருக்காக வெயிலில் நின்று கத்திக்கொண்டிருக்கின்றனர். இத்தனியாரின் கொள்ளையால் பாதிக்கப்பட்ட என்னைப் போன்ற பெற்றோர்கள் எங்கே போனார்கள்? '' என்ற கேள்வியெழுப்பி மாணவர்களும் பெற்றோர்களும் இணைந்து போராடவேண்டும் என வலியுறுத்திப் பேசினார், ஹிந்துஸ்தான் பொறியியல் கல்லூரியால் பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவரின் தந்தை முகமது ரபீக்.

பு.மா.இ.மு. கலைக்குழுவினர் கல்வி தந்தைகளாக அவதாரமெடுத்து நிற்கும் கொள்ளைகாரர்களைத் திரைகிழித்தும், ராபின் தொடங்கி விவேக் வரை பல மாணவர்களின் உயிரைப் பறித்த இக்கொலைகாரர்களை அம்பலப்படுத்தி நடித்த வீதி நாடகமும், ''திருத்த முடியுமா, ஜேப்பியாரைத் திருத்த முடியுமா? தனியாரின் கொள்ளையைத் தடுக்கமுடியுமா?'' போன்ற பாடல்களும் தனியார்மயத்தின் கோரமுகத்தைக் கண்முன் நிறுத்தின.

சேலத்தில் பு.ஜ.தொ.மு. கலைக்குழுவினர் ''மருத்துவக் கல்வி ரூ. 75 லட்சம், பொறியியல் கல்வி ரூ. 50 லட்சம்!'' எனத் தள்ளுவண்டியில் கூவிக்கூவி வியாபாரம் செய்வது போல நடத்திய ''கல்விச்சந்தை'' எனும் வீதி நாடகமும், ''ஆனா ஆவன்னா, காசிருந்தா இனா ஈயன்னா'' என்ற நையாண்டிப் பாடலும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

''புரட்சிகர அமைப்புகளுடனும் கல்வியாளர்களுடனும், மாணவர்களும் பெற்றோர்களும் கைகோர்த்து களமிறங்கிப் போராடுவதைத் தவிர, இதற்கு வேறு தீர்வில்லை'' என்ற அறைகூவலோடும், விண்ணதிரும் முழக்கங்களோடும் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் புதிய நம்பிக்கையையும் போராட்ட உணர்வையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.

— பு.ஜ.செய்தியாளர்

எத்தனைக் கடுமையான சட்டங்களைப் போட்டாலும் அதிலுள்ள ஓட்டைகள் வழியே தப்பி ஓடிவிடும் பெருச்சாளிகள் அல்லவா, கல்வி வியாபாரிகள்!

நீதித்துறையை நாடி இத்தனியாரின் கொள்ளையை தடுத்துவிடலாம் என நினைத்தால், ஏமாற்றமே மிச்சம்! ''தனியார் மயம் அரசின் பொருளாதாரக் கொள்கையாக இருக்கிறது. எனவே இதில் நீதிமன்றம் தலையிட முடியாது'' என்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறது உச்சநீதிமன்றம். இது மட்டுமா? சமூக சீர்திருத்த நோக்கத்தோடு தமிழக அரசு வழங்கிவந்த கிராமப்புற மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு, தமிழ் மொழிக்காகப் போராடி உயிர்நீத்த தியாகிகளின் வாரிசுகளுக்கான இடஒதுக்கீடு, ஆதரவற்ற மற்றும் இளம் கைம்பெண்களுக்கான இடஒதுக்கீடு ஆகியவற்றிற்குக் குழிபறித்து, கல்வியைச் சமூக நோக்கத்தோடு பார்க்கக்கூடாது எனப்பாடம் சொல்லிக்கொடுத்ததும் இதே நீதிமன்றங்கள்தான்!

''14 வயது வரைக்கும் அனைவருக்கும் கட்டாயக் கல்வியை, இலவசக் கல்வியை வழங்க வேண்டும்'' எனச் சொல்கிற இந்திய அரசியல் சாசனச் சட்டத்தை குப்பையில் போட்டுவிட்டு, ''கல்வியை பொதுச் சேவை என்பதிலிருந்து, ஹோட்டல், சுற்றுலா போன்ற சேவைத்துறையாக மாற்றி தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும். அரசு இத்தகைய சமூகப் பொறுப்புகளிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்'' என்ற 'காட்' ஒப்பந்தத்தின் கட்டளைப்படியே ஆட்சியாளர்கள் செயல்படுகின்றனர்.

''எந்த தொழில் ஆனாலும் தனியார் நுழைந்தால்தான் தரமாக இருக்கும்'' என அரசின் தனியார்மயக் கொள்கைக்கு ஒத்தூதி வந்த நடுத்தர வர்க்கம், இப்பொழுது தனியார் கல்வி முதலாளிகளிடம் மாட்டிக் கொண்டு விழிபிதுங்கி கிடக்கிறது! தனியார் மயம் என்பது எத்தகைய அபாயகரமானது, எத்தகைய சமூக விரோதமானது என்பதை இவர்களுக்கு புரிய வைத்திருக்கிறது 'கட்டணக் கொள்ளை'!

எனவே, அரசிடம் சட்டம் கொண்டு வா, கண்காணி, கட்டுப்படுத்து எனக் கோரிக்கை வைப்பதற்கு எந்த அடிப்படையுமில்லை. எதைக் கொண்டு வந்தாலும் அதிலிருந்து தப்பிக்க இத்தனியார் பெருச்சாளிகளுக்கு சொல்லித்தரவும் வேண்டியதில்லை.

● இளங்கதிர்

# ஆலயத்திற்குள் மட்டுமா, கருவறைக்குள்ளும் நுழைவோம்!

## தாழ்த்தப்பட்டோரின் ஆலய நுழைவுப் போராட்டங்களை வன்முறை மூலம் ஒடுக்கிவிட முயலுகிறார்கள், ஆதிக்கசாதி வெறியர்கள்.

இந்தியா முழுவதும் தலைவிரித்தாடும் சமூகக் கொடுமையாக சாதி இருக்கிறது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் தமிழ்நாடு மட்டும், சாதிய ஒடுக்கு முறைக்கெதிராகப் போராடிய முன்னோடி மாநிலம் என்றும், சுயமரியாதை இயக்க பூமி இது என்றும் சொல்வதில் நமக்கெல்லாம் பெருமை இருந்தாலும், இன்றைக்கு நடைமுறை என்னவாக இருக்கிறது? 'சமத்துவப் பெரியாரின்' ஆட்சியில் சாதிக் கொடுமை ஒழிந்திருக்கிறதா எனும் கேள்விக்கு மதுரையைச் சேர்ந்த ''எவிடென்ஸ்'' எனும் தன்னார்வ நிறுவனம் அண்மையில் நடத்திய ஆய்வு விடையளிக்கிறது.

தென்மாவட்டங்களில் சுமார் 85 கிராமங்களில் அந்நிறுவனம் நடத்திய கள ஆய்வில் திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, சிவகங்கை, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் பல கோவில்களில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரான சாதிப்பாகுபாடு கடைப்பிடிக்கப்படுவது தெரிய வந்துள்ளது. பல கோவில்களில் தாழ்த்தப்பட்டோருக்கு அன்னதானம் செய்வது அனுமதிக்கப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டோர் கோவில்களுக்குக் கால்நடைகளைத் தானம் செய்வது ஏற்கப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டோர் 69 கோவில்களில் நுழைய முடியாது. 72 கோவில்களில் நுழைய முடிந்தாலும், கோவிலுக்குள் வழிபடக் கூடிய பொதுவான இடங்களில் அனுமதி இல்லை. 52 கோவில்களில் இவர்களுக்குப் பரிவட்டம் கட்ட அனுமதி இல்லை. 33 கோவில்களில் தேர் இழுக்க அனுமதி இல்லை. 64 கோவில்களில் பூசை வைக்கவோ, கோவில் விழாக்களில் கலைநிகழ்ச்சி நடத்தவோ உரிமை இல்லை.

54 கோவில்களின் சப்பரமோ, தேரோ இம்மக்களின் தெருக்களிலோ காலனியிலோ வலம் வருவதில்லை. தென்மாவட்டங்களில் கோவில் கொடைகளில் ஆதிக்கச் சாதியினரின் சப்பரங்கள் சுற்றிவரும் பாதைகள் சேரி தவிர்த்த தெருக்களில் மட்டுமே - துல்லியமாக தங்களின் ஆதிக்க எல்லையை மறுஉறுதி செய்யும் வகையில்தான் உள்ளன.

அண்மைக்காலங்களில் கோவிலில் வழிபாட்டு உரிமை கேட்கும் ஒடுக்கப்பட்டோர் மீது ஆதிக்க சாதிவெறியர்கள் தாக்குவதும் படுகொலைகள் செய்வதும் தொடர்ச்சியாக நடக்கிறது. திருப்பித் தாக்கப்படும் சூழல் நிலவினால் ஆதிக்க சாதியினர், உத்தப்புரத்தில் செய்ததைப் போல கூண்டோடு ஊரை விட்டு வெளியேறி மிரட்டி, அரசு உதவியுடன் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுகின்றனர்.

கடந்த ஓராண்டில் தமிழகம் எங்கும் பரவலாக ஒடுக்கப்பட்டோர் மீது இவ்வாறு வன்கொடுமைகள் இழைக்கப்பட்டு வருகின்றன. அருப்புக்கோட்டை கல்லூரணியில் கோவில் திருவிழாவில் தீச்சட்டி ஊர்வலம் நடத்த முயன்ற அருந்ததியினர் மீது சாதிவெறிக் கும்பல் கற்களை வீசித்தாக்கியது.

செஞ்சி சொரத்தூர் காலனியைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோரின் கோவில் வழிபாட்டுரிமை வன்னிய சாதிவெறியர்களால் மறுக்கப்பட்டு வந்தது. நீதிமன்றத் தீர்ப்பும் சாதித்திமிரை அசைக்கவில்லை. சாமிக்குப் பொங்கல் வைத்த தாழ்த்தப்பட்டோர் மீது போலீசு தடியடி நடத்திப் பலரைக் கைது செய்தது.

சேலம் கவுண்டம்பட்டி திரௌபதி அம்மன் கோவிலில் நுழையும் உரிமையை தாழ்த்தப்பட்டோர் நீதிமன்றம் சென்று போராடி வாங்கியதும், அம்மனையே ஆதிக்க சாதியினர் ஒதுக்கி வைத்தனர்.

**ஆலயத்தில் நுழைந்து வழிபடும் உரிமை கோரி, நெல்லை கோட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டுப் போராடும் வீரணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள்.**



நெல்லை மாவட்டம் படர்ந்தபுளி கிராமத்தில் மாரியம்மனை ஒடுக்கப்பட்டோர் வழிபட விடாமல் தேவர் சாதிவெறியினர் தடுத்து வந்தனர். நீதிமன்றத்தில் உரிமை வாங்கி வந்தாலும், தேவர்சாதியினர் கோவிலையே இழுத்துப் பூட்டி சாதி ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

நெல்லை மாவட்டம் செந்தட்டியில் கோவில் வழிபாட்டுப் பிரச்சினையை ஒட்டி, ஆதிக்க சாதித்திமிர், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் இருவரை கொடூரமாக வெட்டிக் கொன்றுள்ளது.

ஆதிக்கசாதி வெறியர்களைப் பொறுத்த மட்டில், கோவில்கள் தங்கள் சாதி ஆதிக்கத்தின் தூண்கள் என்றுதான் கருதுகின்றனர். பக்தி எல்லாம் இரண்டாம்பட்சம்தான். தாழ்த்தப்பட்டோர் கோவிலில் சம உரிமை கேட்டாலோ,

சாமியையே சாதிவிலக்கம் செய்யும் அளவிற்கு பக்தியை விட சாதிவெறிதான் கோலோச்சுகிறது.

கோவிலில் மட்டுமல்ல, செத்த பிறகு தாழ்த்தப்பட்டோரின் பிணங்களை எரிக்கக் கூட பொது சுடுகாட்டில் சாதிவெறியர்கள் அனுமதிப்பதில்லை. திருச்சி மாவட்டம் திருமலையான் பட்டியில் அரசு நிதியில் கட்டப்பட்ட சுடுகாட்டில் ஆதிதிராவிடர்களின் பிணங்களை எரிக்க சாதி இந்துக்கள் அனுமதி மறுப்பதைக் கண்டுகொள்ளாத காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சியர் மீது வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி வழக்கறிஞர் ரத்தினம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்.

செய்தியாகப் பதிவாகாத சாதிய வன்கொடுமைகளோ நாள் தோறும் நூற்றுக்கணக்கில் நடைபெற்றுக் கொண்டுள்ளன. ஆனால் துணைமுதல்வர் ஸ்டாலினோ, புதிதாக பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 29 ஊர்களில் எழுப்பப்படும் என்று அறிவித்ததும், சாதியை ஒழிக்க எடுக்கப்படும் நடவடிக்கை இது என தி.மு.க.வின் செல்லப்பிராணி கி.வீரமணி தெளிவு படுத்துகிறார்.

கோவில்களில் வழிபாட்டு உரிமை வேண்டிய தாழ்த்தப்பட்டோர் மீது அடுத்தடுத்து தாக்குதல் நடந்தபோதெல்லாம் அதற்கெதிராகப் போராட முன்வராமல், காங்கிரீட் சமத்துவபுரம் சாதியை ஒழிக்கும் என நம்மை நம்பச் சொல்லுகிறது தி.மு.க. அரசு. தலித் விடுதலை எனும் இலட்சியத்தோடு ஆரம்பிக்கப்பட்ட டஜன்கணக்கான இயக்கங்களும் இத்தகைய கொடுமைகளுக்கெதிராகத் தொடர்ச்சியாகப் போராடுவதில்லை. மேலும் தாழ்த்தப்பட்டோர் மட்டும் தனியாகப் போராடி சமத்துவ உரிமைகளைப் பெற்றுவிடமுடியாது; ஆதிக்கசாதிகளில் இருக்கும் ஜனநாயக சக்திகளும் புரட்சிகர இயக்கங்களும் தாழ்த்தப்பட்டோரும் ஒருங்கிணைந்து போராடுவதைத் தவிர இதற்கு மாற்றுவழியும் கிடையாது.

● செங்கதிர்

# “தில்லை நடராசர் கோயிலை இந்து அறநிலையத் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர தனிச்சட்டம் இயற்று!”

## – சட்டசபை முன் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் (HRPC) ஆர்ப்பாட்டம்

‘‘தில்லை நடராசர் கோயில் பார்ப்பன தீட்சிதர்களுக்குச் சொந்தமானதல்ல; கோயில் நிர்வாகத்தை இந்து அறநிலையத் துறையிடம் ஒப்படைக்க வேண்டும்’’ என்று கடந்த பிப்ரவரி 2009-இல் சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. அதன்படி உடனடியாக இக்கோயிலுக்கு நிர்வாக அதிகாரியும் நியமிக்கப்பட்டார். ஆனாலும் நீதிமன்றத் தீர்ப்பின்படி கோயில் நிர்வாகத்தை நிர்வாக அதிகாரியிடம் இன்றுவரை பார்ப்பன தீட்சிதர்கள் ஒப்படைக்கவில்லை. தீர்ப்பை அமல்படுத்த தீட்சிதர்கள் இந்து அறநிலையத் துறைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்ற நீதிமன்ற உத்தரவையும் செயல்படுத்தவில்லை.

இருப்பினும், ‘சூத்திர’ கருணாநிதி அரசு பார்ப்பன தீட்சிதர்கள் மீது இன்றுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. நீதிமன்ற அவமதிப்பு வழக்குகூடத் தொடரவில்லை.

தற்போது தில்லை நடராசர் கோயிலில் நடைபெறும் ஆனித் திருமஞ்சன விழாவையொட்டி, தீட்சிதர் கட்டுப்பாட்டில் உள்ள கோயில் என்ற அறிவிப்புடன் அழைப்பிதழ் அச்சிட்டு தீட்சிதர்கள் விநியோகிக்கின்றனர். தில்லைக் கோயிலைத் தமது சொத்து என்று நிலைநாட்ட ஊர்வலம் - பொதுக்கூட்டம் நடத்தக் கிளம்பியுள்ளனர்.

நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகத் தீட்சிதர்கள் செய்துள்ள மேல்முறையீடு, உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளது. இதில் இடைக்காலத் தடை வாங்கி விட்டால், மறுபடியும் விசாரணையை ஆண்டுக்கணக்கில் இழுத்தடித்து, மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டி விடலாம் என்பது பார்ப்பன தீட்சிதக் கும்பலின் திட்டம். கடந்த பல ஆண்டுகளாக நடந்து வந்ததும் இதே கதைதான்.

இதை இனியும் அனுமதித்தால், நிரந்தரமாகவே தில்லை கோயிலைத் தீட்சிதர்கள் தமது சொத்தாக்கிக் கொள்வார்கள் என்பதால், இதர கோயில்களைப் போல தில்லை நடராசர் கோயிலையும் இந்து அறநிலையத் துறையின் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டுவர இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே தனிச்சட்டம் இயற்றக் கோரியும், தமிழில் பாடும் உரிமையை நிலைநாட்டவும் நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்துத் தீட்சிதர்களால் எழுப்பப்பட்ட தீண்டாமைச் சுவரை அகற்றவும் இக்கோயில் இந்து அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருவது அவசியம் என்பதை வலியுறுத்தியும், அரசாணையை அமல்படுத்தச் சென்ற போலீசு அதிகாரியைத் தாக்கிச் சிவனடியார் ஆறுமுகசாமியை தமிழில் பாடவிடாமல் தடுத்த தீட்சிதர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாத போலீசுத் துறையைக் கண்டித்தும் கடந்த 23.6.09 அன்று காலை 11 மணியளவில் மனித உரிமைப் பாதுகாப்பு மையம் சட்டமன்றத்தின் முன் திடீர் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன் சிவனடியார் ஆறுமுகசாமி உள்ளிட்டு வழக்குரைஞர்களும் புரட்சிகர அமைப்பினரும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம், பார்ப்பன ஆதிக்கத்துக்கு எதிராகப் போராட தமிழக மக்களை அறைகூவுவதாக அமைந்தது.



— பு.ஜ. செய்தியாளர்கள்.

## கடத்தல் தொழில்:

# பெரிய மனிதர்களின் பொழுது போக்கா?

டாடா, பிர்லாக்களின் வரிசையில் இந்தியாவில் கொடி கட்டிப் பறக்கும் தொழில் குடும்பங்களில் மஃபத்லால் குடும்பமும் ஒன்று. இக்குடும்பத்தின் மருமகளான ஷீதல் மபத்லால் கடந்த ஜூன் முதல் வாரத்தில் மும்பய் விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இலண்டனில் இருந்து மும்பய் திரும்பிய ஷீதல் மபத்லால், தன்னிடம் 20,000 ரூபாய் பெறுமான நகைகள் மட்டுமே இருப்பதாகவும், அவையும் தனது சொந்த பழைய நகைகள் என்பதால் சுங்க வரி எதுவும் கட்டத் தேவையில்லை என எழுதிக் கொடுத்து விட்டு விமான நிலையத்தில் இருந்து வெளியேற முயன்றார். அவர் மீது சந்தேகங்கொண்ட சுங்கத்துறை அதிகாரிகள் அவரது பெட்டியைத் திறந்து பார்த்தபொழுது அதிர்ந்தே போய் விட்டார்கள். கிட்டத்தட்ட 55 இலட்சம் ரூபாய் பெறுமான பலவித மான தங்க, வைர நகைகள் ஷீதல் மபத்லாலின் பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இதற்குண்டான 18 இலட்ச ரூபாய் சுங்க வரியைக் கட்டாமல் நகைகளைக் கடத்திக் கொண்டு போய்விட முயன்ற ஷீதல் மபத்லால் கைது செய்யப்பட்டுச் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

குளுகுளு அறைகளிலேயே வாழ்ந்து பழகிய, பஞ்சு மெத்தைகளிலேயே படுத்துப் பழகிய ஷீதல் மபத்லால், ஒரேயொரு இரவுப்பொழுதை சிறையில் ஓட்டை மின்விசிறிக்கு அடியில் கழிக்க நேர்ந்துவிட்ட அவலத்தை எண்ணி, மும்பய் நகரின் மேட்டுக்குடி கும்பலைச் சேர்ந்த ஒருவர் பாக்கியில்லாமல் அனைவரும் கண்ணீர் வடித்துள்ளனர். ஷீதல் மபத்லால் செய்த குற்றம் அவர்களுக்கு ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.

இப்பயங்கரத்தைக் கேள்விப்பட்ட மேட்டுக்குடி கும்பலைச் சேர்ந்த ஒருவர், ''நம்மைக் குறி வைக்கிறார்கள்; இனி நாம் கவனமாக இருக்க வேண்டும்'' எனத் தமது சக நண்பர்களிடம் சொன்னதாக ''அவுட்லுக்'' ஆங்கில ஏடு குறிப்பிட்டுள்ளது. இதன் பொருள், ஒரு காலத்தில் மும்பய் மாநகரைக் கலக்கி வந்த கடத்தல் மன்னன் மஸ்தானை, மேட்டுக்குடி கும்பல் தொழில் போட்டியில் வென்றுவிட்டது என்பதுதான். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், புகழ் பெற்ற இந்தி நடிகர் அமிதாப்பச்சன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலண்டனில் இருந்து திரும்பிய பொழுது ஒரு கோடி ரூபாய் பெறுமான பொருட்களைச் சுங்க வரி செலுத்தாமல் கடத்த முயற்சி செய்த பொழுது மாட்டிக்கொண்டு, பின்பு அதற்கு 36 இலட்ச ரூபாய் வரியும் அபராதமும் செலுத்திச் சிறைக்குப் போகாமல் தப்பித்துக் கொண்ட ''கிரைம்'' கதை உள்ளிட்ட பல சம்பவங்கள் இப்பொழுது ஒன்றன்பின் ஒன்றாக அம்பலத்துக்கு வருகின்றன.

ஷீதல் மபத்லால்:
சீமாட்டியா? கடத்தல் ராணியா?



இச்சம்பவங்களைக் கேள்விப்படும் பாமர மக்கள் வேண்டுமானால், ஷீதல் மபத்லாலையும் அமிதாப்பச்சனையும் குற்றவாளிகளாகக் கருதலாம். ஆனால், மேட்டுக்கடி கும்பலோ ஷீதல் மபத்லாலைக் கைது செய்து சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்த சட்டங்களைத்தான் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்கள்.


''உயர்தரமான சட்டை ஒன்றின் விலையே 20,000 ரூபாயாக இருக்கும் இந்தக் காலத்தில், ஒரு பெரிய முதலாளியின் மனைவியின் பெட்டியில் 50 இலட்ச ரூபாய் பெறுமான நகைகள் இருப்பது அதிசயமா?''

''அழகு நிலையத்துக்குக்கூட 50 இலட்ச ரூபாய் பெறுமான நகைகளை அணிந்து போய் வரும் ஷீதல் போன்றவர்கள் இலண்டனில் இருந்து வெறும் கையுடனா திரும்ப முடியும்?''

''உலகமே ஒரு கிராமமாகச் சுருங்கி வரும் இவ்வேளையில், இந்தியச் சட்டங்கள் இன்னும் பழமையானதாக, பிற்போக்குத்தனமாக இருக்கின்றன. சட்டம் எங்களைக் காந்திய வழியில் வாழச் சொல்கிறதா?''

''தாங்கள் விசாரித்துக் கொண்டிருக்கும் நபர் மபத்லாலின் மனைவி என்று தெரிந்தவுடனேயே அதிகாரிகள் அவரை விடுவித்திருக்க வேண்டும்; மாறாக, ஷீதலைக் கடத்தல் பேர்வழி போல நடத்தி அவமதித்துவிட்டார்கள். அபராதத் தொகையை வாங்கிக்கொண்டு ஷீதலை வழியனுப்பி வைப்பதை விட்டுவிட்டு, அவரைக் குற்றவாளியாக்கி விட்டார்கள். ஷீதல் போன்றவர்களுக்கே இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லையெனும் பொழுது, பிறகு யார் தான் பாதுகாப்பாக வாழ்ந்துவிட முடியும்?'' — இவையனைத்தும் மும்பயைச் சேர்ந்த மேட்டுக்குடி கும்பலின் வாயிலிருந்து பொங்கி வழிந்திருக்

**அபராதம் என்ற சலுகை இல்லையென்றால், அமிதாப்பச்சனும் கடத்தல் குற்றத்திற்காகக் கம்பி எண்ண வேண்டியிருந்திருக்கும்!**



கும் விமர்சனங்கள். அவர்களைப் பொருத்தவரை ஷீதல் தவறு செய்யவில்லை. சட்டம்தான் தவறு செய்துவிட்டது.

இக்கும்பல் அலட்டிக் கொள்வது போல சுங்கத் துறைச் சட்டங்கள் ஒன்றும் அவ்வளவு கடுமையானதாக இல்லை. இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் இடையே இரட்டை வரி விதிப்பு முறை உள்ளது. இதன்படி இங்கிலாந்திலோ அல்லது இந்தியாவிலோ வரி செலுத்தினால் போதும். அங்குமிங்குமாக இரண்டு முறை சுங்கத் தீர்வைக் கட்ட வேண்டிய தேவையில்லை. இதனைப் பயன்படுத்திக்கொண்டுதான் ஷீதல் இங்கிலாந்தில் வரி கட்டாமல் இந்தியாவிற்குப் பறந்து வந்தார். இந்தியாவில் தனது குடும்பத்திற்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு வரி கட்டாமல் தப்பிவிடலாம் எனக் கணக்குப் போட்டிருந்தார். ''ஷாப்பிங்'' செய்வதற்காக அடிக்கடி இலண்டனுக்குப் பறந்து போய்வரும் ஷீதலின் இந்தக் கணக்கு, அவருக்குப் பலமுறை சுங்கத் துறை அதிகாரிகளை 'ஏமாற்றி'விட்டுப் ஆடம்பரப் பொருட்களைக் கடத்திவரப் பயன்பட்டிருக்கிறது. இந்த முறை அவரது கணக்குத் தப்பிப் போனதற்கு, மபத்லால் குடும்பத்திற்குள் நடந்து வரும் சொத்துத் தகராறுதான் காரணம் என்று கூறப்படுகிறது.

மேலும், சுங்கத் துறை அதிகாரிகளால் கைப்பற்றப்படும் ஆடம்பரப் பொருட்களின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்க்கும் குறைவானதாக இருந்தால், கடத்தலில் ஈடுபட்ட நபரைச் சிறையில் அடைக்க வேண்டியதில்லை; பிணையில் விட்டுவிடலாம் என உச்சநீதி மன்றமும் தாராள மனத்தோடு ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறது. இத்தீர்ப்பைக் காட்டித்தான் ஷீதல் சிறையில் அடைக்கப்பட்ட மறுநாளே பிணையில் வெளியே வந்து விட்டார்.

உச்சநீதி மன்றத்தின் இந்தத் தீர்ப்பு, கொஞ்சமாகக் கடத்தி வராதீர்கள் என அறிவுறுத்துகிறது என்று கூறலாம். அயல்நாடுகளில் இருந்து ஆடம்பரப் பொருட்களைக் கடத்தி வரும் மேட்டுக்குடி குற்றவாளிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள இச்சலுகையைப் போன்று, ஏதாவதொரு சலுகை பல்வேறு சிறு குற்றங்களில் ஈடுபட்டு மாட்டிக்கொண்டோ அல்லது போலீசின் பொய் வழக்குகளில் சிக்கிக் கொண்டோ பிணையில்கூட வெளியே வரமுடியாமல் சிறைக்குள்ளிருக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய விசாரணைக் கைதிகளுக்கும் காட்டப்பட்டிருந்தால், அவர்களுள் பலருக்குச் சட்ட விரோதமான சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டிய அவலம் நேர்ந்திருக்காது.

பணத்திலும் செல்வாக்கிலும் புரளும் மேட்டுக்குடி கும்பல், தங்களின் ஆடம்பர வக்கிர வாழ்விற்கு இடையூறாக எந்தவொரு சட்டமும் இருக்கக் கூடாது என்றே விரும்புகிறார்கள். அப்படி ஏதாவதொரு சட்டமிருந்தால், அதனை மீறுவதற்குத் தங்களுக்குத் தார்மீக உரிமையும் நியாயமும் இருப்பதாகக் கருதிக் கொள்கிறார்கள். உழைக்கும் மக்கள் தங்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சட்டத்தை மீறிப் போராடினால், அவர்களைத் தயங்காமல் சமூக விரோதிகளாக, தீவிரவாதிகளாக முத்திரை குத்தும் அரசாங்கம், மேட்டுக்குடி கும்பல் சட்டத்தை மீறும்பொழுதோ, சட்டங்களைச் சீர்திருத்த வேண்டும் எனப் புது பல்லவி பாடுகிறது.

● கீரன்

**கொலைகார சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்பு:**

# அடக்குமுறை அம்பலமானது! பொய்வழக்கு புஸ்வாணமானது!

கடந்த 2004-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், காஞ்சி வரதராஜ பெருமாள் கோவில் மேலாளர் சங்கர்ராமன் அய்யரை, கூலிப் படையை ஏவி போட்டுத் தள்ளிய பார்ப்பன பயங்கரவாதி, கொலைகார காஞ்சி சங்கராச்சாரியை தூக்கிலிடக் கோரியும்; இப்பார்ப்பன பாசிஸ்டுகளின் கூடாரமான சங்கரமடத்தை இடித்துத் தள்ளக் கோரி மக்களிடத்தில் அறைகூவல் விடுத்தும்; இந்து மதவெறி பாசிசத்தின் கோர முகத்தைத் திரைகிழித்தும்; ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் தொடர் பிரச்சார இயக்கங்களை மேற்கொண்டன. இதன் ஒரு பகுதியாக, ஈரோடு-பள்ளிப்பாளையம் பகுதியில் செயல்படும் பு.ஜ.தொ.மு. அமைப்பினர், கடந்த 14.11.04 அன்று ஈரோடு பேருந்து நிலையம் அருகே கொலைகார சங்கராச்சாரியின் கொடும்பாவி எரிப்புப் போராட்டத்தை நடத்தினர்.



இப்போராட்டத்தில் ஈடுபட்ட தோழர்கள் சசி, குமரேசன், இராமன், பழனிச்சாமி ஆகியோரை கைது செய்த ஈரோடு நகரப் போலீசு, 'பொம்மையை எரித்த' குற்றத்தோடு பொதுச் சொத்தைச் சேதப்படுத்தியதாகவும், பொது அமைதிக்கு பங்கம் விளைவித்ததாகவும் பொய் வழக்கு புனைந்து சிறையிலடைத்தது. போலீசின் பொய் வழக்கைக் கண்டித்தும், தோழர்களை விடுதலை செய்யக் கோரியும் ஈரோடு தலைமை அஞ்சலகம் எதிரில் 17.11.04 அன்று கண்டன ஆர்ப்பாட்டத்தை இவ்வமைப்பினர் நடத்தினர்.

இதன் பிறகு, கைதான தோழர்கள் பிணையில் வெளிவந்த போதும், வாய்தா-வழக்கு என கடந்த 4 ஆண்டுகளாக நீதிமன்ற அலைகழிப்பினூடாக வழக்கை எதிர்கொண்டனர். வழக்குரைஞர்கள் தோழர் பி.டி.திருமலைராசன் மற்றும் பி.டி.சசிக்குமார் ஆகியோரின் முன்முயற்சியினாலும் கடின உழைப்பினாலும் போலீசின் பொய் வழக்கை முறியடித்தனர். வேறுவழியின்றி, நீதிமன்றம் தோழர்கள் நால்வரையும் கடந்த 9.6.09 அன்று விடுதலை செய்துள்ளது.

இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிராகவும் மறுகாலனியாக்கத்திற்கெதிராகவும் தொடர்ந்து தமக்கேயுரிய போர்க்குணத்துடன் போராடி வரும் இப்புரட்சிகர அமைப்புகளை பொய் வழக்கின் மூலம் முடக்கி விடலாம் என்ற போலீசு - அதிகார வர்க்கத்தின் கனவு தகர்ந்து போனது!

— தகவல்
**பு.ஜ.தொ.மு., ஈரோடு-பள்ளிப்பாளையம்.**

## சி.பி.எம் – காங்கிரசு

# இந்து மதவெறியர்களின் இளைய பங்காளிகள்!

### மராத் கிராம முசுலீம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியில், சி.பி.எம்.–காங்கிரசு கட்சிகளுக்கும் பங்குண்டு.

கேரளாவில் உள்ள மராத் எனும் சிறு கிராமத்தில் நடந்த மதக் கலவர படுகொலைகள் மீது ஜனவரி 15, 2009-இல் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பொதுவாக, இந்து மதவெறி பாசிசக் கொடுமையிலிருந்து சிறுபான்மையினரைத் தாங்கள் தான் காப்பதாக சி.பி.எம். மற்றும் காங்கிரசு கட்சிகள் உருவாக்கி வந்த மாயையை, இந்த தீர்ப்பின் பின்னணி தகர்த்துள்ளது.

கேரளத்தின் கடற்கரையோர மீனவ கிராமமான மராத்தில், கடந்த 2002-இன் புத்தாண்டு கொண்டாட்டத்தில் ஒரு முஸ்லீம் சிறுமியிடம் தவறாக நடந்து கொண்ட இந்து இளைஞருக்கும், அதனை தட்டிக்கேட்ட முஸ்லீம் இளைஞருக்கும் மோதல் உருவானது. இம்மோதல் பின்னர் மதக்கலவரமாக ஊதிப் பெருக்க வைக்கப்பட்டது.

ஜனவரி 2002-இல் நடந்த இந்த கலவரத்தில் இரு மதத்தையும் சேர்ந்த நான்கு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இந்த கலவரத்தில், முஸ்லீம்களின் வீடுகளும், சொத்துக்களும் சூறையாடப்பட்டன. கொல்லப்பட்டவர்களுக்காக சவக் குழி வெட்டிக் கொண்டிருந்த முஸ்லீம் பெரியவர் அபுபக்கர் என்பவரைக் கூட விட்டு வைக்காமல், ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகள் கொடூரமாகக் கொன்றனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் காங்கிரசு அரசு நழுவிக் கொண்டது. தங்களுக்கு நீதி கிடைக்காத ஆத்திரத்தில், அபுபக்கரின் படுகொலைக்கு பழி வாங்கும் வகையில் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகள் 8 பேரை மே மாதம் 2003-இல் அபுபக்கரின் உறவினர்கள் படுகொலை செய்தனர். கொலையானவர்களில் புஷ்பராஜ் என்ற உள்ளூர் ஆர்.எஸ்.எஸ் தலைவர், அபுபக்கர் படுகொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர்.

அபுபக்கரைக் கொன்றவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காத அரசு, இம்முறை உடனடியாக நூறுக்கும் மேலான முஸ்லீம்களைக் கைது செய்தது. ஊடகங்களும், அரசும் இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புகளின் தொடர்பு குறித்து மயிர் பிளக்க விவாதம் செய்தன. அப்போது மத்தியில் ஆட்சியிலிருந்த பா.ஜ.க. அமைச்சர்கள் முஸ்லீம்களுக்கு எதிரான பல விதமான பொய்ச் செய்திகளை அதிகாரப் பூர்வமாகவே பரப்பினர். இந்தப் பொய்ப் பிரச்சாரத்தை அம்பலப்படுத்துவதற்கு பதில், அவற்றுக்கு விளக்கம் கொடுத்து லாவணி பாடிக் கொண்டிருந்தன சி.பி.எம்.மும், காங்கிரசும்.

இந்தப் படுகொலைகளைத் தொடர்ந்து ஆர்.எஸ்.எஸ் தாக்குதலின் காரணமாக, ஏறக்குறைய 500 முஸ்லீம் குடும்பங்கள் ஊரைக் காலி செய்து கொண்டு நிவாரண முகாம்களுக்கும், வேறு ஊர்களுக்கும் சென்றனர். காலியாய்க் கிடந்த முஸ்லீம்களின் வீடுகளை 'மதச்சார்பற்ற' காங்கிரசு அரசின் காவல்துறையினர் உதவியுடன் கொள்ளையடித்து சூறையாடினர் ஆர்.எஸ்.எஸ் குண்டர்கள். அந்த பகுதியே முற்றிலுமாக ஆர்.எஸ்.எஸ்-இன் ஆட்சிப் பிரதேசமாக மாறிவிட்டிருந்தது.

மராத் கிராமத்திற்குள் வெளியாட்கள் நுழைவதை ஆர்.எஸ்.எஸ் தடை செய்திருந்தது. அன்றைய முதலமைச்சர் காங்கிரசின் அந்தோணியே கூட இந்து பயங்கரவாதிகளின் நிபந்தனைகளின்படி நடந்து கொண்ட பின்னர்தான் கிராமத்திற்குள் அனுமதிக்கப்பட்டார். அனைவரும் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகளின் காலில் விழாத குறையாகக் கெஞ்சிக் கொண்டிருந்தனர். கிராமத்திற்குள் மிகச் சுதந்திரமாக நுழைந்து வெறியேற்றிக் கொண்டிருந்தான், இந்து மதவெறி பயங்கரவாதியான பிரவீன் தொகாடியா.

1970-களில் இருந்து இந்த பகுதியில் ஆர்.எஸ்.எஸ் தனது ''ஷாகா''க்களை நடத்தி மதவெறியை ஊட்டி வளர்த்து வந்துள்ளது. 2002 மராத் கலவரத்திற்கு முன்னும், பின்னும் காங்கிரசும், சி.பி.எம்-முமே கேரளாவை ஆண்டுள்ளன. ஆனால், இவர்கள் இந்து மதவெறியைத் தூண்டி கலவரம் செய்யும் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகளை ஒடுக்க எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்ததில்லை. மாறாக, பாதிக்கப்பட்ட முஸ்லீம் மக்களே மீண்டும் மீண்டும் தண்டிக்கப்பட்டனர்.

2002 மதக் கலவரத்தின் போது அரசு பாராமுகமாக நடந்து கொண்டதன் மூலம் கலவரத்தில் மிக முக்கிய பங்காற்றிய

**2003-இல் இந்துவெறி பயங்கரவாதிகளின் கொலைவெறியாட்டத்தில் உற்றார்-உறவினர்களை இழந்த துயரம் தாளாமல் கதறி அழும் இஸ்லாமியத் தாய்.**



ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. பயங்கரவாதிகளைக் காப்பாற்றியது. அந்தக் கலவரத்தின் முதல் தகவல் அறிக்கையில் குற்றவாளிகளாக பதிவு செய்யப்பட்டிருந்த 392 பேரில் 213 பேர் பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்-யைச் சேர்ந்தவர்கள். இவ்வழக்கு முற்றிலும் கிடப்பில் போடப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் கூட குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளிகளான இந்து பயங்கரவாதிகள் உடனடியாகவே பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் முழுமூச்சில் மதவெறி பிரச்சாரத்தில் இறங்கினர். இன்று வரை அவர்கள் கைது செய்யப்படவில்லை. ஆனால், 2003-இல் கைது செய்யப்பட்ட 138 முஸ்லீம்களுக்கும் வழக்கம் போல பிணை மறுக்கப்பட்டது. அவர்கள் பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டனர்.

2002-இல் நடந்த கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்தவொரு நிவாரணமும் வழங்கப்படவில்லை. ஆனால், 2003-இல் நடந்த பழிவாங்கும் படுகொலையில், கொலை செய்யப்பட்ட இந்துவெறியர்கள் குடும்பத்திற்கு ரூ.10 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு 5 லட்சமும் வழங்கியது 'மதச்சார்பற்ற' காங்கிரசு அரசு. இதுவரை இந்தியாவில் நடந்த எந்த மதக் கலவரத்திலும் இந்தளவுக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டதில்லை.

2002-இல் நடந்த கலவரத்தின் போது உடனடியாக பெரிய அளவில் போலீசு படைகளை இறக்கி பாதுகாப்பை வழங்கிய அரசு, 2003-இல் நடந்த படுகொலைக்குப் பிறகு அந்த பகுதியின் பாதுகாப்பை முற்றிலும் ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகளிடம் விட்டது. 2003-இல் நடந்த படுகொலைகளை, பழிவாங்கும் நடவடிக்கை என்று டி.ஜி.பி. கே.ஜெ.ஜோசப் கூறினார். ஆனால், அரசும், ஊடகங்களும் இந்த சம்பவத்தை மத அடிப்படைவாதிகளின் திட்டமிட்ட சதியாகச் சித்தரித்தன. சி.பி.எம். ஆட்சியின் போது வெளியிடப்பட்ட நீதிமன்ற விசாரணை அறிக்கை இதையே வாந்தியெடுத்திருந்தது.

அந்த அறிக்கையில், 2002-இல் நடந்த கலவரத்திற்கும் 2003-இல் நடந்த படுகொலைகளுக்கும் தொடர்பே இல்லாதது போல குறிப்பிடப்பட்டிருந்தது. ஆர்.எஸ்.எஸ்.க்கும் இந்த மதக் கலவரத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என இந்த அறிக்கை கூறுகிறது. முஸ்லீம் அடிப்படைவாதிகள் மட்டும்தான் இவையனைத்திற்கும் காரணம் என்றும், அவர்கள்தான் மதவெறி பிரச்சாரம் செய்தனர் என்றும் குறிப்பிடும் அறிக்கை, மராத் கிராமம் முழுவதையும் இந்து மதவெறியூட்டி வைத்திருந்த ஆர்.எஸ்.எஸ் பயங்கரவாதிகளின் பங்கை மறைத்தது.

பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண முகாம்களில் இருப்பது குறித்தோ அல்லது போலீசு துணையுடன் முஸ்லீம்களின் வீடுகள், சொத்துக்கள் சூறையாடப்பட்டது குறித்தோ அறிக்கையில் மூச்சு கூட விடப்படவில்லை . மராத் பகுதியே இந்துத்துவ பயங்கரவாதிகளின் விடுதலைப் பிரதேசமாக இருப்பது குறித்தும் எதுவும் பேசப்படவில்லை . இதைத்தான் தனது அதிகாரப்பூர்வ அறிக்கையாக வெளியிட்டது 'முற்போக்கு', 'மதச்சார்பற்ற' சி.பி.எம். அரசு.

முஸ்லீம்களாக பிறந்த ஒரே பாவத்தைச் செய்த மராத் மீனவ மக்களின் மீதான இந்துத்துவ அரசு பயங்கரவாதம் இத்துடன் நிற்கவில்லை. 2003-இல் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு மிக முக்கியமானதாக எடுத்துக் கொள்ளப்பட்டு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. இந்திய நீதித்துறை வரலாற்றிலேயே முதல் முறையாக இந்த வழக்கில் 67பேருக்கு ஆயுள் தண்டனை விதித்து ஜனவரி



**சொந்த மண்ணிலே அந்நியர்களாக்கப்பட்டு, மறுவாழ்வைத் தேடும் மராத் முஸ்லிம் குடும்பம்.**

2009-இல் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனால், 2002 கலவரம் குறித்த வழக்கோ இன்று வரை ஆமை வேகத்தில் நடந்து வருகிறது.

இந்த வழக்கில் நான்கு ஆண்டுகள் பிணை கிடைக்காமல் சிறையிலிருந்த 78 முஸ்லீம்கள் இன்று வாழ்க்கையைத் தொலைத்த விரக்தியில் பேசுகின்றனர். சிறையில் காவல்துறையின் சித்திரவதைகளினால் உடல் நைந்து துவண்டு போயுள்ளனர். அவர்களது குடும்பங்கள் காப்பாற்ற ஆளின்றி பஞ்சை பாராரிகளாக சீரழிந்துவிட்டன. அவர்களது வீடுகளும், மீன்பிடி படகுகளும் உடைத்து நொறுக்கப்பட்டு விட்டன. 2003-க்குப் பிறகு மராத்துக்கு திரும்பிய முஸ்லீம் குடும்பங்களோ சமூகப் புறக்கணிப்புக்கு ஆளாகியுள்ளனர். இவர்களுக்கு யாதொரு நிவாரணம் வழங்கப்படவில்லை.

2003-இல் மராத் சென்ற ஒரு நிருபரிடம் இந்துத்துவ பயங்கரவாதிகள் பின்வருமாறு கூறினர்: ''இங்கு இன்னொரு குஜராத்தை நடத்தினால்தான் முஸ்லீம்கள் பாடம் கற்றுக் கொள்வார்கள்.'' அவ்வாறே, இன்னொரு குஜராத்தை கேரளாவில் நடத்திக் காட்டியுள்ளனர் ஆர்.எஸ்.எஸ். பயங்கரவாதிகள். 2002-இல் மோடி அரசு குஜராத்தில் சிறுபான்மையினருக்கு எதிராகவும், இந்து பயங்கரவாதிகளுக்கும் ஆதரவாகவும் எப்படி செயல்பட்டதோ, அதே போலத்தான் கேரளாவில் சி.பி.எம். மற்றும் காங்கிரசு அரசுகளும் செயல்பட்டுள்ளன. கோத்ராவில் கொல்லப்பட்டவர்களுக்கு பழிவாங்கும் வகையிலேயே குஜராத் கலவரம் நடந்தது என்று சொன்ன குஜராத் அரசுக்கும், 2003-இல் நடந்த படுகொலைகள் மதக் கலவரங்களை தூண்டும் முஸ்லீம் அடிப்படைவாதிகளின் சதி என்ற கேரள சி.பி.எம்.-காங்கிரசு அரசுகளின் கருத்துக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

● தனபால்

# இந்து வெறியர்களுக்கு, குஜராத்! இந்திய இராணுவத்துக்கு, காஷ்மீர்!!

## ஷோபியன் நகரைச் சேர்ந்த இரு பெண்களின் சாவிற்கான காரணங்களை அரசு பூசி மெழுகுவது ஏன்?

**கா**ஷ்மீர் மாநிலத்தில் அமைதியான முறையில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்திருப்பதையும், அம்மாநிலத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதையும் பார்த்து அம்மாநில மக்கள் சுதந்திரம் கேட்பதை விட்டுவிட்டு, மீண்டும் தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டதாக இந்திய அரசு மயக்கம் கொண்டிருந்தது. இந்த மயக்கத்தை அம்மாநிலத்தின் தென்பகுதியிலும் தலைநகர் சீறிநகரிலும் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக நடந்து வரும் போராட்டங்கள் கலைத்துப் போட்டுவிட்டன.

காஷ்மீரின் தென்பகுதியில் அமைந்துள்ள ஷோபியன் என்ற நகரைச் சேர்ந்த 22 வயதான நீலோஃபர் ஜானும் அவரது மைத்துனியும் 17 வயதான பள்ளி மாணவியுமான ஆஸியா ஜானும் மே 29 அன்று அக்கிராமத்தின் ஒதுக்குப்புறத்தில் அமைந்திருக்கும் தங்களின் ஆப்பிள் தோட்டத்திற்குச் சென்றிருந்தனர். அதிகாலையிலேயே சென்றுவிட்ட அவ்விருவரும் இரவு 10 மணியாகியும் வீடு திரும்பாததால், நீலோஃபரின் கணவர் இது பற்றி அருகிலுள்ள போலீசு நிலையத்தில் புகார் அளித்தார். மறுநாள் அதிகாலை நேரத்தில், நீலோஃபரின் ஆப்பிள் தோட்டத்திற்குச் செல்லும் வழியில் ஓடும் சிற்றாறு ஒன்றில் அந்த இரு இளம் பெண்களின் சடலங்கள் போலீசாலும் பொதுமக்களாலும் கண்டுபிடிக்கப்பட்டன. உடலெங்கும் காயங்களோடும் ஆடைகள் கிழிந்த நிலையிலும் அவர்களது சடலங்கள் ஆற்றின் ஓரத்தில் ஒதுங்கிக் கிடந்தன. அகால 'மரணமடைந்த' நீலோஃபர் நிறைமாதக் கர்ப்பிணி என்பதும் ஆஸியா ஜான் படிப்பில் கெட்டிக்கார மாணவி என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அவ்விரு இளம் பெண்களும் இறந்து கிடந்த நிலையைப் பார்த்த பொதுமக்கள், ''அவர்கள் போலீசாராலோ அல்லது இராணுவச் சிப்பாய்களாலோ கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம்'' எனச் சந்தேகம் கொண்டனர்.

இந்த மர்மமான 'மரணங்கள்' பற்றி விசாரணை நடத்தி, பிரேதப் பரிசோதனை நடத்தி மக்களின் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டிய போலீசாரோ சடலங்களைப் பார்த்த நிமிடமே, ''அவர்கள் ஆற்றில் மூழ்கி இறந்து போனதாகத் தெரிவதாகவும், பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரியவில்லை என்றும்'' முடிவு செய்தனர். மேலும், இச்சம்பவம் பற்றி உடனடியாக முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யவும் மறுத்து விட்டனர். காஷ்மீர் மாநில முதல்வர் ஓமர் அப்துல்லாவும் போலீசாரின் தடாலடி முடிவுக்கு ஒத்தூதினார்.

''அரசாங்கமும் போலீசும் யாரையோ பாதுகாக்க முயலுவதாக''ச் சந்தேகப்பட்ட பொதுமக்கள், அவ்விரு இளம் பெண்களின் படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளைக் கண்டு பிடித்துத் தண்டிக்கக் கோரி ஆர்ப்பாட்டங்களில் இறங்கினர். இதனையடுத்து, அப்பெண்களின் சடலங்கள் ஷோபியன் அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. எனினும், போலீசின் நெருக்குதல் காரணமாக அரசு மருத்துவர்கள் 'இம்மரணங்கள்' பற்றி எவ்வித முடிவையும் அறிவிக்காமல் மௌனமாக இருந்துவிட்டனர். எனவே, வேறு நடுநிலையான மருத்துவர்களைக் கொண்டு பிரேதப் பரிசோதனை செய்யக் கோரி பொதுமக்கள் மீண்டும் போராட்டத்தில் இறங்கினர்.



**பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாகி, பின் கொல்லப்பட்டிருக்கலாம் என காசுமீர் மக்களால் சந்தேகிக்கப்படும் நீலோஃபர் ஜான் (இடது) மற்றும் ஆஸியா ஜானின் சடலங்கள்.**

புல்வாமா நகரைச் சேர்ந்த அரசு மருத்துவர்கள் நடத்திய இரண்டாவது பிரேதப் பரிசோதனையும், அப்பெண்கள்

பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டார்களா இல்லையா என்பது பற்றியோ, அவர்கள் எப்படி இறந்து போனார்கள் என்பது பற்றியோ முடிவான அறிக்கை எதனையும் தரவில்லை என்றே கூறப்படுகிறது. ஆர்ப்பாட்டங்கள் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் மும்மரமாகத் திரிந்த போலீசார், இரண்டாவது பிரேதப் பரிசோதனை முடிந்தவுடனேயே அச்சடலங்களைப் புதைத்துவிடுமாறு கூறிவிட்டனர். புதைக்கப்பட்ட சடலங்களை மீண்டும் தோண்டியெடுப்பது உள்ளூர் மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் எனக் கூறி, மூன்றாவது பிரேதப் பரிசோதனை என்ற யோசனையைத் திட்டவட்டமாக மறுத்துவிட்டது, மாநில அரசு.



**குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டிக்கக் கோரி சிறீநகரில் நடந்த ஆர்ப்பாட்டம், போலீசாருடனான மோதலில் முடிந்தது (மேலே); சீறிநகரில் நடந்த பேரணியைத் தடுக்க முற்படும் போலீசாருடன் வாக்குவாதம் செய்யும் பெண்கள்.**

தீவிரவாதிகளைக் கண்டுபிடிக்க ஏகப்பட்ட உளவுப் பிரிவுகளை வைத்திருக்கும் அரசுக்கு, இந்த 'மரணங்களுக்கு'ப் பின்னுள்ள மர்மங்களைக் கண்டுபிடிப்பதில் பெரிய சிரமமொன்றும் இருந்திருக்க முடியாது. போலீசும், அரசும், தேசியவாதிகளும் கூறிவருதைப் போல இந்த மரணங்கள் விபத்தினால் நேர்ந்தவை என்பது உண்மையாகவே இருந்தாலும், அவ்வுண்மையை காசுமீர் மக்கள் நம்பக்கூடிய நடுநிலையான அமைப்பின் மூலம் நிரூபிப்பதற்கும் அரசு தயாராக இல்லை. மாறாக, மக்களின் கோபத்திற்கு வடிகால் வெட்டுவதற்காக, வழக்கம் போலவே விசாரணை கமிசன்களை அமைத்திருக்கிறது, அம்மாநில அரசு. மேலும், நியாயம் கேட்டுப் போராடும் மக்களை ஒடுக்குவதற்காக பொது அமைதியைப் பாதுகாக்கும் சட்டம் உள்ளிட்ட பல்வேறு அடக்குமுறைகளை ஏவிவருகிறது. இப்பிரச்சினை தொடர்பாக போலீசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே நடந்துவரும் மோதல்களில் நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். போலீசார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் ஒரு சிறுவன் இறந்து போனான். சையத் ஷா கீலானி, ஷாபிர் ஷா, மிர்வாயிஸ் உமர் ஃபாரூக், யாசின் மாலிக், ஜாவேத் மிர் ஆகியோர் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலிலும், சிறைச்சாலையிலும் அடைக்கப்பட்டுள்ளனர்.

காஷ்மீர் மக்கள் போதிய ஆதாரங்கள் எதுவுமின்றி போலீசையும் துணை இராணுவப் படைகளையும் சந்தேகிப்பதாக இந்திய தேசியவாதிகள் அலுத்துக் கொள்கிறார்கள். ஒரு குற்றம் நடந்தால், அது பற்றி விசாரிக்க போலீசார் பழைய குற்றவாளிகளை விசாரிக்க 'அழைத்து'ச் செல்வதில்லையா? அது போலத்தான் காஷ்மீர் மக்களின் சந்தேகத்தையும் பார்க்க வேண்டும்.

ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்பு, வாஜ்பாயின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்த பில் கிளிண்டன் இந்தியாவிற்கு வந்த சமயத்தில், காஷ்மீரில் பாதுகாப்புப் படைகளோடு நடந்த 'மோதலில்' ஐந்து முசுலீம்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அந்த ஐவரும் எல்லைதாண்டி வந்த பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டனர். இப்படுகொலையை எதிர்த்து காஷ்மீர் மக்கள் போராடியிருக்காவிட்டால், அந்த ஐவரும் சிட்டிசிங்புரா கிராமத்தைச் சேர்ந்த அப்பாவி முசுலீம்கள் என்ற உண்மை வெளியுலகுக்குத் தெரிந்திருக்காது.

ஜம்மு-காஷ்மீர் போலீசுத் துறையைச் சேர்ந்த சிறப்பு நடவடிக்கைக் குழு பணம், பதவிகளைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே அப்துல் ரஹ்மான் பத்தர், ஷௌகத் கான், நஸிர் அகமது தேகா உள்ளிட்ட பல அப்பாவி முசுலீம்களைத் தீவிரவாதிகள் என முத்திரை குத்தி சுட்டுக் கொன்ற உண்மை 2007-இல் அம்பலமானது. இப்படுகொலைகளுக்கான ஆதாரங்களை அழித்துவிட்டதாக மப்பில் திரிந்த காக்கிச் சட்டை கிரிமினல்களை காஷ்மீர் மக்களின் போராட்டம்தான் சட்டத்தின் முன் நிறுத்தியது.

போலீசோ அல்லது பாதுகாப்புப் படையினரோ இவ்விரு பெண்களையும் கடத்திக்கொண்டு போய், பாலியல் பலாத்காரப்படுத்திய பின் கொன்றிருக்கக்கூடாதா என்ற கேள்வியை எழுப்ப மறுக்கும் இந்திய தேசியவாதிகள், இப்படுகொலைகளுக்கு நியாயம் கேட்டு நடக்கும் போராட்டங்களை, அப்போராட்டங்கள் இந்திய இராணுவத்தைக் குற்றம் சுமத்தும் ஒரே காரணத்திற்காகவே, அவற்றை இனவெறியையும், மத வெறியையும் தூண்டிவிடும் போராட்டங்கள் என அவதூறு செய்து வருகிறார்கள். மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்துவிட்ட பிரிவினைவாதிகள் மீண்டும் செல்வாக்குப் பெறவே மக்களைத் தூண்டிவிடுவதாகக் குற்றஞ்சுமத்துகிறார்கள்.

காஷ்மீரின் தென்பகுதியில் போராடிவரும் மக்கள் ''குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டி!'' எனக் கோரிதான்

# குட்டு உடைகிறது!

காஷ்மீர் மக்கள் நடத்திய போராட்டங்களையடுத்து, அம் மாநில அரசு, ''நீலோஃபர் ஜானும், ஆஸியா ஜானும் இறந்து போனதற்கான உண்மையான காரணத்தையும், சூழ்நிலையை யும் மற்றும் இப்பிரச்சினையையொட்டி நடந்த போராட்டங் களை அரசு அணுகிய விதம் குறித்தும்'' விசாரிப்பதற்கு ஓய்வு பெற்ற ஜம்மு-காஷ்மீர் உயர்நீதி மன்ற நீதிபதி முஸாபர் ஜான் என்பவர் தலைமையில் விசாரணை கமிசன் ஒன்றை அமைத் தது. அக்கமிசன் அளித்துள்ள இடைக்கால அறிக்கையில், ''அப்பெண்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுப் பின் கொல்லப்பட்டுள்ளதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருப்ப தாக''ச் சுட்டிக் காட்டியிருக்கிறது. மேலும் போலீசார், பிரே தப் பரிசோதனை நடத்திய மருத்துவ அதிகாரிகள், தடய அறி வியல் நிபுணர்கள் ஆகியோரின் திறமையின்மையாலும், நிர் வாகக் குளறுபடிகளாலும் இந்த ஆதாரங்கள் அழிந்து போய் விட்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. இதனையடுத்து, போலீசு மற்றும் மருத்துவ துறையைச் சேர்ந்த சில அதிகாரிகள் இடைக்காலப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

''ஆதாரங்கள் 'அழிந்து' போகும் அளவிற்கு திறமைக் குறைவாக நடந்து கொள்ளக் காரணம் என்ன?'' என்ற கேள் விக்கான பதிலை இடைக்கால பதவி நீக்கம் செய்யப்பட் டுள்ள அதிகாரிகளிடமிருந்து வாங்கிவிட்டால், இந்த 'மர்ம' மரணங்களுக்குப் பின்னுள்ள பெரிய மனிதர்களின் பெயர் கூட அம்பலமாகிவிடாதா? அந்த இரு பெண்களுள் ஒருவர் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்களை போலீசார் மறைக்க முயன்று முடியாமல் போன பிறகும், தேசி யவாதிகள் இக்கேள்வியை எழுப்ப மறுத்து வருகிறார்கள். மாறாக, இக்கமிசன் புதிய ஆதாரங்கள் எதையும் கண்டுபிடிக் கவில்லை எனக் கூறி, இந்த இடைக்கால அறிக்கையை ஒதுக்கித் தள்ளுவதிலேயே குறியாக இருக்கிறார்கள். அப் பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்திக் கொலை செய்த பெரிய மனிதர்களே 'மனசாட்சிக்குப் பயந்து' குற் றத்தை ஒப்புக்கொண்டால்கூட, ''அதற்கும் ஆதாரம் ஏதாவது வைத்திருக்கிறாயா?'' என இவர்கள் கேட்டாலும் ஆச்சரியப் பட முடியாது!

போராடுகிறார்களேயொழிய, சுதந்திரம் கேட்டுப் போராட வில்லை. ஓட்டுப் பொறுக்குவதற்கு மட்டும் காஷ்மீர் மக்களை அணுகும் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சி இப்போராட்டத் திற்கு தலைமை தாங்கட்டுமே, யார் வேண்டாமென்று சொன்னது? பிரிவினைவாதிகளைவிட, காங்கிரசுக் கும்பல் உள்ளிட்ட இந்திய தேசியவாதிகள்தான் காஷ்மீர் மக்களின் நம்பிக்கையைப் பெற முடியாமல் தனிமைப்பட்டுக் கிடக்கின் றனர்.

நீலோஃபரும், ஆஸியாவும் பாலியல் பலாத்காரப்படுத்தப் பட்டுத்தான் கொல்லப்பட்டனர் என்பது நிரூபணமானால், காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதுமே போராட்டங்கள் வெடித்து விடும் என்பதனால்தான், ஷோபியன் போலீசார் முதல் பிரேதப் பரிசோதனை நடத்திய மருத்துவர்களிடம், ''அப்பெண்கள் பாலியல் பலாத்காரபடுத்தப்பட்டிருந்தால் அவ்வுண்மையை மறுக்க வேண்டும் அல்லது மழுப்ப வேண்டும்'' என நெருக் குதல் கொடுத்ததாகவும்; இரண்டாவது பிரேதப் பரிசோத னையை நடத்திய மருத்துவர்களுள் ஒருவர் ஷோபியன் நகர மக்களிடம் அவர்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுள்ள உண்மையைச் சொன்னதற்காக மாவட்ட போலீசு கண்காணிப் பாளரால் கடிந்து கொள்ளப்பட்டதாகவும் ''தெகல்கா'' வார இதழில் (20 ஜூன் 2009) பிரேம் சங்கர் ஜா என்றொரு பத்திரி கையாளர் குறிப்பிட்டுள்ளார். எனவே, இந்திய தேசியவாதி கள் அவதூறு செய்து வருவது போல காஷ்மீர் மக்களின் போராட்டங்கள் உண்மையைக் கண்டுபிடிக்கத் தடையாக இல்லை. மாறாக, அதிகார வர்க்கம்தான், உண்மை வெளியே தெரிந்தால், இந்திய தேசியம் நாறிவிடும் என்பதால், உண்மையை அமுக்கிவிட முயன்று வருகிறது என்று கூற வேண்டும்.

போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான நிஸார் அகமது என்ற சிறுவனின் உடலைத் தூக்கிச் செல்லும் கிளர்ச்சியாளர்கள்.

பிரிவினைவாதத்தையோ, பிரிவினைவாத அமைப் புகளையோ ஏற்றுக் கொள்ளாத காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த முசுலீம் அறிவுத் துறையினர்கூட, இராணுவ மும், போலீசும் வரைமுறையின்றி நடத்திவரும் மனித உரிமை மீறல்களும், இராணுவமும், துணை இராணு வப் படைகளும் திரும்பப் பெறப்படாமல் காஷ்மீரை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதுதான் மக்களின் சந்தே கங்களுக்கும் போராட்டங்களுக்கும் அடிப்படையாக அமைகின்றன எனச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இவையனைத்தும் காஷ்மீர் அமைதியாக இல்லை என்பதைத்தான், இந்திய தேசியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எந்தவொரு அமைப்பையும் அம்மக்கள் நம்பத் தயாராக இல்லை என்பதைத்தான் எடுத்துக்காட் டுகின்றன. அதனால்தான் சந்தேகத்திற்கிடமான ஒவ் வொரு மரணமும், சந்தேகத்திற்கிடமான அரசின் ஒவ் வொரு நடவடிக்கையும் (அமர்நாத் கோயில் நில மாற் றம் போன்றவை) அம்மாநிலத்தில் பெரும் கொந்தளிப் புகளை உருவாக்கிவிடுகிறது. இப்போராட்டங்களை அவதூறு செய்தோ அடக்குமுறைகளை ஏவியோ ஒடுக் கிவிட இந்திய அரசு தொடர்ந்து முயன்று வருகிறது. அம்முயற்சிகள் அனைத்தும் எரிகிற நெருப்பில் எண் ணெய் வார்ப்பது போலவே அமைந்து விடுகின்றன.

● செல்வம்

## அமெரிக்கா:

# மாயை கலைந்தது! உண்மை சுடுகிறது!!

### அமெரிக்க மக்களை, ஒண்டுவதற்குக்கூட இடமின்றித் தவிக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது, முதலாளித்துவம்.

பசி, பட்டினி ஏதுமில்லாத செல்வச் செழிப்பு மிக்க நாடு என்றும், குடிசைகளே இல்லாத நாடு என்றும் அமெரிக்காவைச் சொல்வார்கள். இங்கிருக்கும் படித்த நடுத்தரவர்க்க இளைஞர்களைக் கேளுங்கள்; ''அந்த சொர்க்க பூமிக்கு வேலைக்குச் செல்வதுதான் தங்கள் வாழ்வின் லட்சியம்'' என்பார்கள். இந்தக் கனவு தேசத்தின் மகாணங்களில் ஒன்று கலிபோர்னியா. எண்ணிலடங்காத தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் குவிந்து கிடக்கும் இம்மாகாணந்தான் தமிழ்நாட்டுக் கணிப்பொறியாளர்கள் பலருக்கும் புனிதத்தலம். அமெரிக்காவின் செல்வச் செழிப்புக்கு இம்மாகாணத்தையே சான்றாகக் கூறுவர். ஆனால் இன்று அமெரிக்காவை மட்டுமல்ல; உலக முதலாளித்துவத்தையே பிடித்தாட்டும் பொருளாதார நெருக்கடி, சொகுசான அமெரிக்கக் கனவைக் கலைத்துப் போட்ட பிறகு; அமெரிக்க மக்களின் அவல நிலைக்குச் சாட்சியமாக இருப்பதும் இதே கலிபோர்னியா மாகாணத்தின் தலைநகரான சாக்ரமண்டோதான்.



**சொர்க்கபுரியின் மறுபக்கம்:**
**சாக்ரமண்டோ நகரில் உள்ள வீடற்றோரின் கூடாரங்கள்.**

சென்ற ஆண்டு செப்டம்பரில் ஆரம்பித்த, பொருளாதார வீழ்ச்சியால் வேலை இழந்த அமெரிக்கர்கள் பலரால் வீட்டுக் கடன்களைக் கட்ட முடியவில்லை. வாங்கிய கடனுக்கு, வங்கியிடம் வீட்டைப் பறிகொடுத்த இவர்கள் இன்று நடுத்தெருவில் நிற்கின்றனர். வேலையும் இல்லை, வீடும் இல்லை, கண் மூடித் திறக்கும் நேரத்தில் அனைத்தையும் இழந்து வீதிக்கு வந்துவிட்ட இவர்களை அமெரிக்க ஊடகங்கள் 'புது ஏழைகள்' என அழைக்கின்றன. பகல் முழுவதும் நகரில் ஏதாவது வேலை கிடைக்குமா எனத் தேடித்திரிந்தாலும் இரவில் தூங்க இடம் வேண்டுமே? பெரும் முதலாளிகளுக்கு மக்களின் வரிப் பணத்தை ('பெயில் அவுட் பேக்கேஜ்') அள்ளிக் கொடுத்துக் காப்பாற்றும் அரசு, தங்களைக் காக்க நிச்சயம் வராது என்பதை உணர்ந்த அவர்கள், தாங்களாகவே தங்களுக்குத் தற்காலிகக் குடியிருப்புகளை அமைத்துக் கொள்ளத் துவங்கினர். தார்ப்பாய், பிளாஸ்டிக் உறைகள், அல்லது பழைய துணிகளை வைத்துக் கூடாரங்கள் கட்டி அவற்றில் வசிக்க ஆரம்பித்தனர்.

சாக்ரமண்டோ நகரில் அவ்வாறு உருவான கூடாரக் குடியிருப்பு ஒன்று, ரயில் பாதையை ஒட்டி குப்பை போடும் திடலில் உள்ளது. இதைத்தவிர அந்நகரில் ஓடும் சாக்ரமண்டோ ஆற்றின் கரையை ஒட்டி ஒப்ரா எனும் பேரில் உருவாகி இருக்கும் குடிசைப்பகுதி, நூற்றுக்கணக்கான கூடாரங்களைக் கொண்டுள்ளது. சுகாதாரமற்ற இக்குடியிருப்புகளில் குடிநீரோ, கழிப்பறை வசதிகளோ கிடையாது. மனநிலை சரியில்லாதவர்களும், சொந்த வீடு இல்லாதவர்களும் சுமார் 200 பேர்கள் வரை அப்பகுதிகளில் ஏற்கெனவே குடியிருந்தனர். அவர்களுடன் சேர்ந்து கூடாரங்களில் வாழும் நிலை, வேலை இழந்தோருக்கு ஏற்பட்டிருக்கிறது.

தொலைக்காட்சிகள் இக்குடியிருப்புகளின் அவலத்தை படம் பிடித்து ஒளிபரப்பின. உடனே அம்மாகாணத்தின் ஆளுநராக இருக்கும் முன்னாள் ஹாலிவுட் கதாநாயகன் அர்னால்டு ஸ்வாஷ்நேக்கர், மக்களை அங்கிருந்து பெயர்த்தெடுத்து வந்து அரசு பொருட்காட்சிகள் நடைபெறும் சாக்ரமாண்டோ மாநாட்டு மையத்தில் குடியமர்த்த ஏற்பாடு செய்தார். போலீசார் சாக்ரமண்டோவின் கூடாரக் குடியிருப்புகளைத் தடை செய்து, அங்குள்ளவர்கள் வெளியேறி விடவேண்டும் என்றும் மீறி அங்கே தங்கினால் கைது செய்வோம் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். 4 வாரங்களில் இவர்களின் கூடாரங்கள் அகற்றப்பட்டு, தனியார்களுக்குச் சொந்தமான அப்பகுதி வேலியிடப்பட்டு, பிறர் நுழையத் தடை விதிக்கப்படும் என்று நகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அர்னால்டு ஸ்வாஷ்நேக்கர், 5 கோடி ரூபாயை அவர்களுக்கு நிரந்தர இருப்பிடம் உருவாக்க ஒதுக்கினார். வீடற்றோருக்கு பொருளாதார இழப்பீட்டு நிதி வழங்க வேண்டும் என்று ஒபாமாவுக்கு அவசரக் கடிதம் ஒன்றை அனுப்பினார். ஒபாமாவோ 'அமெரிக்காவில் எந்தக் குழந்தை வீடில்லாமல் இருந்தாலும் அது என் இதயத்தையே பிளக்கிறது' என வசனம் பேசினார். வீதிக்கு வந்துவிட்ட உழைக்கும் மக்களுக்கு வெறும் 5 கோடியை ஒதுக்கும் இதே அமெரிக்க அரசு, திவாலாகிப் போன வங்கி முதலாளிகளுக்கு ஆயிரக்கணக்கான கோடிகளை

வாரி வழங்குகிறது, ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனம் திவாலாகாமல் தடுக்க துடித்தெழுந்து செயலாற்றுகிறது.

சாக்ரமாண்டோ நகரத்தில் மட்டுமல்ல, அனைத்து அமெரிக்க நகரங்களிலும் திடீரென முளைத்து வரும் கூடாரங்கள் அந்நாட்டு மக்களின் அவல நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஃப்ரெஸ்னோ நகராட்சியின் அதிகாரிகள் தரும் தகவல்படி, அந்நகரக் கடைவீதிகளை ஒட்டி மூன்று மிகப்பெரிய கூடாரக் குடியிருப்புகளும் நெடுஞ்சாலைகளை ஒட்டியவாறு சிறிய கூடாரக் குடியிருப்புகளும் உருவாகியுள்ளன. அந்நகரில் வேலைநிழந்து, வீடிழந்து நடுத்தெருவிற்கு வந்துவிட்ட மக்கள் தொகையோ இரண்டாயிரம். இக்குடியிருப்புகளில் வசிப்போர்கள் எவ்வித வசதியுமின்றி மன அழுத்தத்தில் வாழ்கின்றனர். பணம் ஏதும் அவர்களிடம் இல்லை. எனவே அவர்களிடம் விபச்சாரமும் போதைப்பொருள்களும் கூடவே வன்முறையும் பெருகி உள்ளன.

சியாட்டில், வாஷிங்டன் நகரங்களில் வேலை இழந்தோரும், வீடிழந்தோரும் சர்ச்சுகளின் பின்புறத்தில் கூடாரம் அடித்து வசிக்கின்றனர். டென்னசி நகரில் உள்ள நாஷ்வில்லேயில் கடைவீதிப் பகுதியை ஒட்டி சுமார் 30 கூடாரமுகாம்கள் பரவலாய் முளைத்துள்ளன. நெவேடா மாகாணத்தின் ரினோ நகரின் அதிகாரிகள், 160 குடியிருப்போர்கள் அடங்கிய குடியிருப்பை 2008-இல் அகற்றினார்கள். அவர்களில் 60 பேருக்கு அந்நகரின் நடைபாதைகள்தான் இப்போது படுக்கைகளாய் உதவுகின்றன. நடைபாதைகள் அடைபடுவதால் வாடிக்கையாளர்கள் வந்து செல்ல இடமின்றி தங்கள் வியாபாரம் பெருமளவு சரிந்துவிட்டதென, உள்ளூர் கடைக்காரர்கள் சொல்கின்றனர்.




**முதலாளித்துவத்தின் மகிமை: வீடற்றோர் பட்டினியிலிருந்து தற்காலிகமாக மீள, கிறித்துவ தேவாலயங்களின் இலவச ரொட்டி வழங்கும் ஏற்பாடு.**

சில தன்னார்வ நிறுவனங்கள் இம்மக்களுக்கு சில அடிப்படை வசதிகளைச் செய்து தர முயல்கின்றன. சாக்ரமண்டோ முகாமில் உள்ளோருக்கு உணவையும், குளிக்க வசதியையும் ஒரு நிறுவனம் செய்து தருகிறது. இந்நிறுவனங்களிடம் இருப்பிடம் கேட்டும் உணவு கேட்டும் வரும் ஆதரவற்ற மக்களின் எண்ணிக்கை சில மாதங்களிலேயே இருமடங்காகி உள்ளது. இந்தப் பொருளாதார வீழ்ச்சி பலதரப்பட்ட மக்களை முகாம்களுக்கு கொண்டுவந்து சேர்த்துள்ளது. சில மாதங்கள் முன்பு வரை வேலைபார்த்து வந்த லாரி டிரைவர்களும், எலெக்ட்ரிசியன்களும், போதை அடிமைகளோடும், மனநோயாளிகளோடும் ஃப்ரெஸ்னோ முகாமில் ஒன்றாக வாழ நேர்ந்துள்ளது.

இவர்களுக்கு உறங்க இடம் கிடைத்தாலும் உணவுக்கு தட்டழிய வேண்டியுள்ளது. ரினோ நகரின் முகாமில் வசிக்கும் டாம்மி, இது பற்றிக் கூறுகையில் ''வேண்டாம் எனத் தெருவில் வீசி எறியப்படும் பண்டங்களைத்தான் நாங்கள் தின்கிறோம். சொல்லக் கூச்சமாகத்தான் உள்ளது. ஆனால் கொஞ்சக் காலத்துக்கு அதுதான் ஒரே வழி'' என்கிறார்.

இம்முகாம்களில் நாம் காணும் காட்சிகள் அமெரிக்காவிலா இப்படி என நம்மைச் சொல்ல வைக்கிறது, முப்பது வயதைத் தாண்டிய அந்தத் தந்தை, மார்க்கெட்டிங்கில் பட்டம் பெற்றவர். தாயோ தகவல் தொழில்நுட்பத் துறையில் கல்வி கற்றவர். இவர்களுக்கு எட்டு, ஐந்து, இரண்டு வயதுகளில் மூன்று குழந்தைகள். கடந்த 9 மாதங்களாக இந்தப் பெற்றோருக்கு வேலை இல்லை, வீட்டு வாடகை தர இயலாததால் குடியிருந்த வீட்டிலிருந்தும் துரத்தப்பட்டனர். கையில் காசில்லாததால் குழந்தைகளுக்கு உணவு ஊட்ட வழியின்றி அவர்கள் முகாம், முகாமாய் அலைந்து கொண்டுள்ளனர். வேலையிழந்து, வீடிழந்த இலட்சக்கணக்கான அமெரிக்கர்களின் துயர வாழ்வுக்கு இவர்கள் ஒரு உதாரணம்.

இன்னொருபுறம், ஒரு குழந்தை பட்டினியாலும், குளிரில் நடுங்கியபடி உறங்க இடமும் இன்றி உள்ளது. அக்குழந்தையின் தாய் சில மாதங்களுக்கு முன் வேலையிலிருந்து நீக்கப்பட்டாள், மீண்டும் வேறு வேலை எதுவும் கிடைக்கவில்லை. இதனால் வீட்டை இழந்தாள். உள்ளூர் முகாம்கள் நிரம்பி விட்டதால் உறைய வைக்கும் கடும் குளிரில் தலைக்கு மேலே கூரையின்றி குழந்தையோடு உறங்க வேண்டிய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார். இவை எல்லாம் ஏதோ கற்பனைக் கதைகள் அல்ல, அமெரிக்க நகரங்களின் தற்காலிக முகாம்களில் இது போன்ற பல கதைகள் உள்ளன. பல பெண்களும் அவர்களின் குழந்தைகளும் ஒதுக்கப்பட்டவர்களாக, உறைபனிக்குளிரில் அமெரிக்க வீதி எங்கும் வீசியடிக்கப்பட்டுள்ளனர்.

இப்படிக் கூடாரங்களில் வாழ்பவர்களைப் போன்று, கார்களில் வாழும் இன்னொரு சமூகமும் அமெரிக்காவில் புதிதாக உருவாகியுள்ளது. நண்பர்கள், உறவினர்கள் தயவில் உறங்க இடம் கிட்டாதவர்கள், அதே சமயம் கூடாரங்களுக்குச் செல்ல மனமில்லாதவர்கள், தங்களுடைய கார்களில் வாழ்க்கை நடத்தத் துவங்கி விட்டனர். இரவு நேர வண்டிநிறுத்தங்களில் காரை நிறுத்தி, அதன் உள்ளேயே தூங்குகின்றனர். இவர்களில் எண்ணிக்கை எவ்வளவு அதிகரித்துவிட்டதென்றால், இரவு தங்களது நிறுத்தத்தில் தங்குபவர்களுக்கு காலைக் கடன்களை முடிக்கவும், குளிக்கவும் ஏற்பாடு செய்வதாக அம்முதலாளிகள் விளம்பரம் செய்யுமளவிற்கு அவர்கள் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, 15 லட்சம் அமெரிக்கக் குழந்தைகள் நிம்மதியான உறக்கத்தை இழந்துள்ளன. வீடிழந்த மக்களில் 34% பேருக்கு சிறு குழந்தைகள் உள்ளன.

அக்குழந்தைகளில் 42 சதவீதம் பேர் 6 வயதுக்கும் கீழானவர்கள். எந்த உதவியுமின்றி, உறைபனிக்கும் கீழான குளிரில் பசியோடும் உறங்க நல்ல இடமில்லாமலும் இருக்கும் ஒரு வயதுக்கு உட்பட்ட சிசுக்களைக் கற்பனை செய்து பாருங்கள். வீடு இழந்தவர்கள் குறித்த தேசிய மைய அறிக்கையின்படி, உறங்க வீடில்லாத குழந்தைகளின் எண்ணிக்கையோ லூசியானாவில் 2,04,053 , கலிபோர்னியாவில் 2,92,624 , டெக்சாசில் 3,37,105. தொடரும் வேலையிழப்புகளும், வீட்டுக்கடன் பிரச்சினையும் இவ்வெண்ணிக்கையை மேலும் கூட்டக்கூடும்.

முதலாளித்துவம் மக்களுக்கு இழைக்கும் இக்கொடுமைகளை எதிர்த்துப் போராட அமெரிக்காவில் உழைப்பாளருக்கென ஒரு புரட்சிகரக் கட்சி இல்லை. இவர்களை ஒருங்கிணைக்க புரட்சிகர சக்திகள் எதுவும் இல்லாததால் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள வேண்டிய நிலையில் இன்று அமெரிக்க உழைப்பாளர்கள் உள்ளனர். ஆனால், மக்கள் இப்படியே கூடாரங்களுக்குள் முடங்கிப் போய்விட மாட்டார்கள்; திருப்பி அடிக்கும் காலம் வெகுதொலைவில் இல்லை.

● கதிர்

# ஒடுங்கியது முதலாளியின் திமிர்! உயர்ந்தோங்கியது செங்கொடி!

**கோ**வை - தடாகம் சாலையில் அமைந்துள்ள சிறீரங்கநாதன் இண்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தொழிலாளர்கள் எவ்வித பணி பாதுகாப்போ, சட்டரீதியான சலுகைகளோ கிடைக்கப் பெறாததுடன், அந்நிறுவன முதலாளி நாராயணசாமியின் கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர்.

இந்த நிலை மாற வேண்டும்; இந்த அநீதிக்கெதிராய் போராட வேண்டும், சங்கமாய் சேரவேண்டும் என அத்தொழிலாளர்கள் முயற்சி செய்த போதெல்லாம் அவை அம்முதலாளியால் முளையிலேயே கிள்ளியெறியப்பட்டிருக்கின்றன. என்ன செய்வதென்று தெரியாத உள்ளுக்குள் புழுங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்கள், இப்பகுதியில் இயங்கிவரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் செயற்பாடுகளால் ஈர்க்கப்பட்டு; தாம் இருக்க வேண்டிய சரியான சங்கம் இதுதான் என்பதுணர்ந்து, சக தொழிலாளர்களை அமைப்பாக்க முனைந்தனர்.

இதுவரை, பெயர்ப்பலகை அமைப்பைக் கூட அனுமதிக்காத 'ஆண்டை' நாராயணசாமி, இப்புரட்சிகர சங்கத்தை எதிர்த்து முன்னை விட மூர்க்கமாய் பல்வேறு அடக்குமுறைகளை ஏவினார். இதற்கெதிராக பு.ஜ.தொ.மு. வழிகாட்டலுக்கிணங்க பல்வேறு போராட்டங்களைத் தொழிலாளர்கள் தொடர்ந்து நடத்தினர். குறிப்பாக, சுற்று வட்டார கிராம மக்களிடம் சென்று ஆதரவு திரட்டினர். 45 நாள் தொடர் வேலைநிறுத்தம், வேலையிழப்பு, ஊதியமிழப்பு, வழக்கு, முன்னணியாளர்கள் 10 பேர் சிறை செல்ல நேர்ந்தது — என பல இடையூறுகளை எதிர்கொண்டு கடந்த இரண்டு ஆண்டுகளாக, இத்தொழிலாளர்கள் காட்டிய உறுதிக்கு கிடைத்த இறுதி வெற்றியாக, கடந்த 14.6.09 அன்று ஆலை வாயிலில், பட்டொளி வீசிப் பறந்தது பு.ஜ.தொ.மு. சங்கக் கொடி.

பு.ஜ.தொ.மு.வின் மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் சங்க கொடியேற்றி, வெற்றி ஊர்வலத்தைத் துவக்கி வைத்தார். தடாகம் சாலை நெடுக இருநூற்றுக்கு மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் செஞ்சட்டையணிந்து சென்ற தொழிலாளர்களின் இந்த எழுச்சிப் பேரணி துடியலூர் பேருந்து நிலையம் அருகே அமைக்கப்பட்டிருந்த பொதுக்கூட்ட திடலில் நிறைவடைந்தது.

சிறீரங்கநாதன் இண்டஸ்ட்ரீஸ் பு.ஜ.தொ.மு. கிளைத்தலைவர் தோழர் பி.ராஜன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்தில் சங்க நிர்வாகிகளும், சட்ட ஆலோசகர் தோழர் டி.வெங்கடேசன், தோழர் பெரியசாமி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்னர். இறுதியாக பு.ஜ.தொ.மு. மாநில பொதுச் செயலர் தோழர் சுப.தங்கராசு சிறப்புரையாற்றினார்.

இப்போராட்டத்தில் உறுதியாய் நின்று வெற்றியை ஈட்ட துணை நின்ற தோழர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர். இப்போராட்டங்களில் பங்கெடுத்த தோழர்கள் தமது அனுபவங்களை உரைவீச்சுகளால், உணர்ச்சி ததும்பிய கவிதை வீச்சுகளால் வெளிப்படுத்தினர். சங்க முன்னணியாளர்களும் தொழிலாளர்களுமாய் செஞ்சட்டையணிந்து குழுமியிருந்த கூட்டமும், இறுதியாய் ம.க.இ.க. மையக் கலைக்குழு நடத்திய புரட்சிகர கலை நிகழ்ச்சியும் தொழிலாளர்களிடத்தில் வர்க்க உணர்வூட்டியது.



ஒரு காலத்தில், பின்னலாடை மற்றும் பொறியற்துறை சார்ந்த தொழிலாளர்களது தொழிற்சங்கப் போராட்டங்களை கண்ட மாவட்டம் என்ற போதிலும், 'கோவை குண்டுவெடிப்பு' நிகழ்வுக்குப் பிறகு போலீசின் அடக்குமுறையை தொடர்ந்து ஏற்பட்ட ஒரு தேக்கநிலையை உடைத்து புதிய போராட்டப் பாதையை பு.ஜ.தொ.மு. உருவாக்கியிருக்கிறது.

**தகவல்: பு.ஜ.தொ.மு., எஸ்.ஆர்.ஐ. கிளை, கோவை.**

# மகளிர் சுய உதவிக் குழுக்கள்:

# பலனடைந்தது யார்? பன்னாட்டு நிறுவனங்களா, அடித்தட்டுப் பெண்களா?

**த**மிழகத்தில் ஏறத்தாழ 3 லட்சத்து 90 ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் இயங்கிவரும் நிலையில், 2011-க்குள் மேலும் ஒரு லட்சம் சுயஉதவிக் குழுக்களைக் கட்டியமைக்கப் போவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. இதுதவிர, விவசாயிகளுக்கென 10,000 சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்று பட்ஜெட் உரையில் அறிவித்துள்ளார், நிதியமைச்சர் அன்பழகன்.

தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் சுயஉதவிக் குழுக்கள் இலட்சக்கணக்கில் பல்கிப் பெருகி வருகின்றன. 1990-களில் 500 சுயஉதவிக் குழுக்கள் மட்டுமே இருந்த நம் நாட்டில், நபார்டு வங்கியின் கணக்குப் படி 2006-ஆம் ஆண்டின் இறுதிக்குள் 33.7 லட்சம் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் நாடு முழுவதுமுள்ள சுயஉதவிக் குழுக்களின் எண்ணிக்கை 50 லட்சத்தைத் தாண்டி விடும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர்.

பெண்களின் தற்சார்பு நிலை, வறுமை ஒழிப்பு, அதிகாரப் பரவல் என்ற சொல்லடுக்குகளுடன் கட்டியமைக்கப்படும் சுயஉதவிக் குழுக்களின் மூலம் கிராமப்புறச் சந்தையை பன்னாட்டு ஏகபோக முதலாளிகளும் இந்நாட்டு தரகு முதலாளிகளும் கைப்பற்றி மேலாதிக்கம் செய்யும் சதி வேகமாக அரங்கேறி வருகிறது. உள்நாட்டு சிறு தொழில்களை நசுக்கி நகர்ப்புறச் சந்தையைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திவரும் பன்னாட்டு - உள்நாட்டு ஏகபோக முதலாளிகள், சிதறலாகவும் வட்டார அளவிலும் உள்ள கிராமப்புற சந்தையையும் கச்சாப் பொருட்களையும் கைப்பற்றிக் கொள்ளவும், நுகர்பொருள் கடன் திட்டங்களை கிராமப்புற அடித்தட்டு மக்களிடம் விற்று கொள்ளை லாபமீட்டவும்தான் அரசும் தன்னார்வ நிறுவனங்களும் சுயஉதவிக் குழுக்களை இலட்சக்கணக்கில் உருவாக்கி வருகின்றன. இந்த உண்மையை ஏகபோக முதலாளிகளின் பைபிளாகச் சித்தரிக்கப்படும் ''எண்ணிக்கையில் மிகுதியாக உள்ள அடித்தட்டு மக்களிடம் வர்த்தகம் செய்வது எப்படி?'' (Business at bottom of pyramid) என்ற, சி.பிரகலாத் என்பவர் எழுதிய நூல் தெளிவாக்கிக் காட்டுகிறது.


வங்கிகளுக்கும் சுயஉதவிக் குழுக்களுக்குமிடையே ''கொடுக்கல்-வாங்கல்'' விவகாரங்களை முறைப்படுத்தி மேற்கொள்ளும் தன்னார்வக் குழுக்களும் அவற்றின் சார்பு நிறுவனங்களும் நுண்நிதி நிறுவனங்கள் என்றழைக்கப்படுகின்றன. இத்தகைய நுண்நிதி நிறுவனங்களையும் சுயஉதவிக் குழுக்களையும் சோதனை முறையில் கட்டியமைத்து ஆய்வுகளும் களப் பரிசோதனைகளும் செய்வதற்காக ஐ.நா. மன்றத்தின் துணை அமைப்புகளும், ஏகாதிபத்திய அரசுகளும், இந்திய அரசு நிறுவனங்களும், பெரும் அறக்கட்டளைகளும் கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்தன. பல்வேறு வடிவங்களில் சுயஉதவிக் குழுக்களைக் கட்டியமைத்து பராமரிப்பது, கடன் கொடுத்து தொகை முறையாக திருப்பிச் செலுத்தப்படுகிறதா என்று சோதித்துப் பார்ப்பது, என்னென்ன முறைகளில் கிராமப்புறச் சந்தையை அடைவது என்பதைப் பரிசீலிப்பது ஆகியன இந்த ஆய்வுகளின் மையமான நோக்கமாக இருந்தது. வெறும் பத்து சதவீத மேட்டுக்குடி - நடுத்தர வர்க்கத்தினரை மட்டுமே வாடிக்கையாளர்களாகக் கொண்டிருந்த பன்னாட்டு மற்றும் தரகு முதலாளிகளுக்கு எஞ்சியுள்ள கிராமப்புற - சிறு நகர ஏழைகளையும் தமது வாடிக்கையாளர்களாக மாற்றி சந்தையை விரிவாக்க முடியும் என்ற நம்பிக்கையையும் வாய்ப்பையும் இந்த ஆய்வுகள் நிரூபித்துக் காட்டின. இந்த ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் உருவானதுதான் பிரகலாத் எழுதிய நூல்.

**பன்னாட்டு - உள்நாட்டு ஏகபோக நிறுவனங்களின் நுகர்பொருட்களை விற்கும் கிராமப்புற சுயஉதவிக் குழு உறுப்பினரின் மளிகைக் கடை.**



இந்நூலும் ஆய்வுகளும் அடையாளம் காட்டிய கிராமப்புறச் சந்தைகளைக் கைப்பற்ற அரசு வங்கிகளும் கூட்டுறவு வங்கிகளும் களத்தில் இறங்கின. உள்ளூர் கமிசன் மண்டிகள் மற்றும் கந்துவட்டிக் கும்பல்களின் பிடியிலுள்ள கிராமப்புறக் கடன் சந்தையோ 22,000 முதல் 50,000 கோடி ரூபாய் வரை மதிப்புள்ளதாகக்

கருதப்படுகிறது. இந்தச் சந்தையைக் கைப்பற்ற, கந்து வட்டிக் கும்பலை விட ஒப்பீட்டளவில் குறைவான வட்டிக்குக் கடன் கொடுத்து அரசு வங்கிகள் கிராமப்புற அளவுக்கு தமது சேவையை விரிவுபடுத்தின. தன்னார்வக் குழுக்களின் மூலமாகவோ அல்லது நேரடியாக சுயஉதவிக் குழுக்களைத் தொடர்பு கொண்டோ கடன் திட்டங்களை வங்கிகள் விற்கத் தொடங்கின. இத்தகைய கடன் திட்டங்களுக்கு 25 முதல் 40 சதவீதம் வரை வட்டி வசூலிக்கப்படுகிறது. நகர்ப்புற நடுத்தர - மேட்டுக்குடியினருக்குத் தரப்படும் நுகர்பொருள் கடன் மற்றும் தொழிலதிபர்களுக்குத் தரப்படும் கடன் ஆகியவற்றுக்கான வட்டி விகிதத்தைவிட கிராமப்புற கடன் திட்டங்களின் வட்டி விகிதம் 3 மடங்கு அதிகமாகும்.



நகர்ப்புற வட்டித் தொழிலை விட கிராமப்புற வட்டித் தொழில் கொழுத்த இலாபம் அளிப்பதால், அரசு வங்கிகள் அடுத்தடுத்து இத்தொழிலில் இறங்க ஆரம்பித்தன. நகர்ப்புறங்களைப் போல வங்கிக் கிளையோ, அலுவலர்களோ, கட்டிடங்களோ இல்லாமல் அரசு வங்கிகள் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகவே கிராமப்புற கடன் சந்தையில் கால் பதித்து விரிவடையத் தொடங்கின. சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக உள்ள கடன் பெறாத ஒருவர், கடன் பெற்றவர்களைக் கண்காணித்து கடனைக் கட்டுமாறு நிர்பந்திப்பதாலும், தன்னார்வக் குழுக்கள் மேற்பார்வையிட்டு முறைப்படுத்துவதாலும், போட்டுள்ள முதலீடு உத்திரவாதமாகத் திரும்பக் கிடைப்பதாலும், இலாபம் உறுதி செய்யப்படுவதாலும் அரசு வங்கிகள் மட்டுமின்றி, ஐ.சி.ஐ.சி.ஐ., ஹெச்.எஃப்.டி.சி, ஆக்சிஸ், ஏ.பி.என். அம்ரோ, சிட்டி பேங்க், ஐ.என்.ஜி. வைஸ்யா முதலான தனியார் வங்கிகளும் போட்டி போட்டுக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. ஐ.சி.ஐ.சி.ஐ. வங்கியோ இன்னும் ஒருபடி மேலே போய், சென்னையில் ''நுண்நிதி மையம்'' என்ற ஆய்வு நிறுவனத்தை உருவாக்கி, சுயஉதவிக் குழுக்களுக்கு பல்வேறு வடிவங்களிலான கடன் திட்டங்களைத் தயாரித்து வருகிறது.

ஏகாதிபத்திய உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக, பாதுகாப்பானதாகவும் இலாபகரமானதாகவும் உள்ள நுண்நிதி நிறுவனங்களில் ஏகாதிபத்திய நிதியாதிக்கக் கும்பல்கள் அதிகமாக முதலீடு செய்து வருகின்றன. அதற்கேற்ப சுயஉதவிக் குழுக்களைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர அரசு வங்கிகளுடன் போட்டா போட்டியில் இறங்கியுள்ளன.

**கிராமப்புற ஏழ்மையை ஒழிக்க உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் சுயஉதவிக் குழுக்கள், இப்போது உள்நாட்டு–வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் விற்பனைப் பிரதிநிதிகளாகவும் தரகர்களாகவும் மாற்றியமைக்கப்பட்டு விட்டன.**

ஆந்திராவைத் தலைமையகமாகக் கொண்டு 18 மாநிலங்களில் 36 லட்சம் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுடன் இயங்கி வரும் ''எஸ்.கே.எஸ்.'' என்ற நுண்நிதி நிறுவனத்தில் அமெரிக்காவின் சீயுக்யா, யுனிடஸ் மற்றும் பிற ஏகபோக நிதி மூலதனக் கும்பல்கள் 366 கோடி ரூபாயை முதலீடாகப் போட்டுள்ளன. ''கேர்'' என்ற நுண்நிதி நிறுவனத்தில் லெகாட்டம், அவிஸ்கார் குட்வெல் ஆகிய ஏகபோக கும்பல்கள் ரூ.150 கோடியை முதலீடாகப் போட்டுள்ளன. தமிழகத்தில் 150 கிளைகளுடன் 24 மாவட்டங்களில் செயல்படும் ''கிராம விடியல்'' எனும் நுண்நிதி நிறுவனம் ரூ. 50 கோடியை ஏகாதிபத்திய நிதி மூலதனக் கும்பல்களிடமிருந்து பெறப் போவதாக அறிவித்துள்ளது. ஆந்திராவில் செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் நுண் கடன் திட்டங்களில் ரூ. 5000 கோடி முதலீடு செய்ய உலக வங்கி திட்டமிட்டுள்ளது. இதுவரை உலகளவில் ஏறத்தாழ ரூ.8000 கோடி அளவுக்கு நுண்நிதித் திட்டங்களில் ஏகாதிபத்திய நிதி நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. 2015-ஆம் ஆண்டில் இது 80,000 கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

கிராம அளவிலான சுயஉதவிக் குழுக்களுக்கு ஊறுகாய், ஊதுபத்தி, கைவினைப் பொருட்கள் தயாரித்தல் முதலான நுண்தொழில்களுக்குத் தொடக்கத்தில் கடன் கொடுத்து வந்த இந்நிதி நிறுவனங்கள், அத்தகைய பொருட்களுக்கு சந்தை இல்லாமல் போனதால் இப்போது சுயஉதவிக் குழுக்களுக்கென்றே பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆயுள் காப்பீடு, மருத்துவக் காப்பீடு, வீட்டுக் கடன், அன்றாட நுகர்பொருள் கடன் என்று பல்வேறு கவர்ச்சிகரமான கடன் திட்டங்களுடன் களத்தில் இறங்கியுள்ளன. இக்கடன் திட்டங்களைத் தனிப்பட்ட ஒரு குழு உறுப்பினர் வாங்க முடியவில்லை என்றால், ஒட்டுமொத்த குழுவுக்கென்றே வடிவமைக்கப்பட்ட குரூப் பாலிசி திட்டங்களும் உள்ளன. இத்தகைய கடன் திட்டங்களை விளம்பரப்படுத்தி பரவலாக்குவதுதான் சுயஉதவிக் குழுக்களின் மையமான வேலையாக மாறியுள்ளது.

இன்னொருபுறம், ''ஸ்பந்தனா'' என்ற நுண்நிதி நிறுவனத்தின் கீழ் இயங்கும் சுயஉதவிக் குழுக்களில் பெரும்பாலோர் ஆடு-மாடு வளர்ப்பவர்களாக இருப்பதால், அந்நுண்நிதி நிறுவனம் தனது சுயஉதவிக் குழுக்களிடம் ''கோத்ரெஜ்'' கம்பெனியின் தீவனங்களை வாங்க நிர்பந்தித்தது, கமிசன் அடிப்படையில் விற்று கொள்ளை லாபமீட்டுகிறது. எஸ்.கே.எஸ். நுண்நிதி



**ஏகபோக நிறுவனங்களின் நுகர்பொருட்களையும் கடன் திட்டங்களையும் விற்பனை செய்வதற்கான உத்திகளை விளக்கி நடக்கும் மகளிர் சுயஉதவிக் குழு கூட்டம்.**

இவை மட்டுமின்றி, ஒட்டு மொத்த கிராமப்புற விவசாயத்தையும் கைப்பற்றி ஆதிக்கம் செய்ய உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக நிறுவனங்கள் சுயஉதவிக் குழுக்களைக் கொண்டு களத்தில் இறங்கியுள்ளன. கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில் உள்ள ''மைராடா'' என்ற தன்னார்வ நிறுவனம், தனது கட்டுப்பாட்டில் உள்ள சுயஉதவிக் குழுக்கள் மூலம் ஐ.டி.சி. நிறுவனத்திற்கு ''ரோஸ்மெரி'' என்ற பணப்பயிரை ஒப்பந்த விவசாயத்தின் அடிப்படையில் விளைவித்துத் தருகிறது. இதேபோல, அப்பாசி காட்டன், தென்னிந்திய மில் முதலாளிகளின் கூட்டமைப்பு ஆகியன சுயஉதவிக் குழுக்களின் மூலம் பருத்தியை ஒப்பந்த விவசாய அடிப்படையில் உற்பத்தி செய்யக் கிளம்பியுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், நுண்கடன் - நுண்தொழில் மூலம் கிராமப்புற ஏழ்மையை ஒழிக்க உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் சுயஉதவிக் குழுக்கள், இப்போது உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளின் விற்பனைப் பிரதிநிதிகளாகவும் தரகர்களாகவும் மாற்றியமைக்கப்பட்டு விட்டன. பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கும் ஏகாதிபத்திய மறுகாலனியாக்கத்திற்கான கருவிகளாக அவை வடிவமைக்கப்பட்டு விட்டன. விவசாயம், உற்பத்தி, கொள்முதல் தொடங்கி கிராமப்புற சந்தை வரை ஏகபோக நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தி, கச்சாப் பொருட்களிலிருந்து ஒட்டு மொத்த பொருளாதாரத்தையே கைப்பற்றி சூறையாடுவதற்கான சாதனமாக அவை மாற்றப்பட்டு விட்டன.

நிறுவனத்தின் சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளோரில் பல்லாயிரக்கணக்கானோர் கிராமங்களில் மளிகை கடை வைத்துப் பிழைக்கின்றனர். எஸ்.கே.எஸ். நுண்நிதி நிறுவனம் இந்த மளிகைக் கடைகளை ''மெட்ரோ'' என்ற பன்னாட்டு ஏகபோக தொடர் பேரங்காடியுடன் பிணைத்து விட்டுள்ளது. இனி, இந்த மளிகைக் கடைகள் தங்களுக்குத் தேவையான பல சரக்குகளை மெட்ரோ நிறுவனத்திடம்தான் கொள்முதல் செய்ய முடியும். இதை ஏற்க மறுத்தால் சுயஉதவிக் குழுவில் உறுப்பினராக நீடிப்பதே பிரச்சினையாகி விடும்.

இப்படி சுயஉதவிக் குழுக்களைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு கிராமப்புற சந்தையைக் கைப்பற்றி வரும் உள்நாட்டு - வெளிநாட்டு ஏகபோக முதலாளிகள், சுயஉதவிக் குழுக்களைத் தமது விற்பனைப் பிரதிநிதிகளாக மாற்றி விட்டனர். பன்னாட்டு ஏகபோக யுனிலீவர் நிறுவனம், சுயஉதவிக் குழு உறுப்பினர்களைக் கொண்டு 14 கோடி மக்களிடம் தனது நுகர்பொருட்களை விற்பனை செய்து வருவதாக பெருமையுடன் அறிவிக்கிறது. நுண்நிதிக்கான கடன் அட்டை, பங்குகள், பரஸ்பர நிதிகள், பந்தய - சூதாட்ட ஒப்பந்தங்கள், ஆயுள் மற்றும் பொதுக்காப்பீடு முதலான திட்டங்களை குஜராத்தின் சுயஉதவிக் குழுக்கள் மூலமாக அனில் அம்பானியின் ''ரிலையன்ஸ் மணி'' நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

சுயஉதவிக் குழுக்களை விற்பனைப் பிரதிநிதிகளாக மாற்றியதோடு, கிராமப்புற கச்சாப் பொருட்களை மலிவு விலையில் கொள்முதல் செய்து தரும் தரகர்களாகவும் ஏகபோக முதலாளிகள் மாற்றியமைத்து வருகின்றனர். டாபர் என்ற தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனம், 2007-ஆம் ஆண்டு முதலாக சுயஉதவிக் குழுக்களைப் பயன்படுத்தி, 610 கிராம கொள்முதல் மையங்களை உருவாக்கி, தமது நிறுவனத்துக்குத் தேவையான விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொள்முதல் செய்து வருகிறது. ரிலையன்ஸ் நிறுவனமும் ஜெர்சி நிறுவனமும் சுயஉதவிக் குழுக்களைக் கொண்டு கிராமப்புறங்களில் பால் கொள்முதல் நிலையங்களை உருவாக்கி வருகின்றன. இவற்றின் மூலம் இந்நிறுவனங்கள் கொள்முதல் தொடங்கி விற்பனை வரை அனைத்திலும் ஆதிக்கம் செலுத்துபவையாக வளர்ந்துள்ளன.

இப்பகற்கொள்ளைக்கும் பேரழிவுக்கும் விசுவாச சேவை செய்து வரும் ஆட்சியாளர்கள், போட்டி போட்டுக் கொண்டு சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி வருவதோடு, கோடிக்கணக்கில் அவற்றுக்காக மானியங்களை ஒதுக்கி வருகின்றனர். மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராக உழைக்கும் மக்களுடன் இணைந்து போராட வேண்டும் என்ற உணர்வை மழுங்கடித்து, சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினராவதன் மூலம் நாம் எப்படியாவது முன்னேறி விடலாம் என்ற குறுகிய - சுயநல பிழைப்புவாதச் சிந்தனையை ஊட்டி வளர்க்கின்றனர்.

போதாக்குறைக்கு இத்தகைய சுயஉதவிக் குழுக்கள் ஆளும் கட்சியின் ஓட்டு வங்கிகளாகவும் சீரழிக்கப்பட்டு விட்டன. சுயஉதவிக் குழுக்களின் உறுப்பினர்களது குடும்பம் மற்றும் சாதிக்காரர்களிடம் பிரச்சாரம் செய்து ஓட்டுகளை உறுதிப்படுத்துவதற்காக பேரம் பேசும் இழிந்த நிலைக்கு சுயஉதவிக் குழுக்கள் பிழைப்புவாதத்தில் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. சுயஉதவிக் குழுக்களின் உண்மையான நோக்கத்தையும் செயல்பாட்டையும் மூடி மறைக்கும் எதிர்க்கட்சிகள், தேர்தல் நேரத்தில் இக்குழுக்கள் ஆளும் கட்சியின் ஓட்டு வங்கிகளாக மாற்றப்படுவதை மட்டும் எதிர்த்து கூச்சலிடுகின்றன.

மறுகாலனியத் தாக்குதலால் பேரழிவை நோக்கி கிராமப்புறங்களும் விவசாயமும் தள்ளப்பட்டு வருகிறது. சில்லறை வர்த்தகம் முதல் கிராமப்புற சந்தை வரை ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கமும் சூறையாடலும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. இப்பகற்கொள்ளையையும் ஆக்கிரமிப்பையும் மூடிமறைத்து வஞ்சக வலை விரிக்கும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளான தன்னார்வ நிறுவனங்களையும் ஆட்சியாளர்களின் பசப்பல்களையும் அம்பலப்படுத்தி முறியடிப்பதும், மறுகாலனிய தாக்குதலுக்கு எதிராகப் போராடுவதும் உழைக்கும் மக்களின் இன்றைய உடனடிக் கடமையாக முன்நிற்கிறது.

● **சுடர்**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# கலாவதியின் துயரக் கதையும் ராகுலின் வக்கிரப் புத்தியும்

காங்கிரசின் தேர்தல் வெற்றிக்குப் பின், "இளவரசர்" ராகுல் காந்திக்கு மகுடாபிஷேகம் பண்ணி வைக்கும் வேலையில் முதலாளித்துவப் பத்திரிகைகள் இறங்கியுள்ளன. "அவர்தான் இந்தியாவின் ஒபாமா" என ராகுலைப் புகழ்ந்து தள்ளுகிறது தெகல்கா வார இதழ். அவரது மேடைப் பேச்சுக்கும் மட்டுமல்ல, அவரது "ஸ்டைலுக்கும்" ஒரு பொருள் இருப்பதாகக் கண்டுபிடித்து எழுதுகிறது இந்தியா டுடே இதழ். எதிர்கால இந்தியாவுக்கு ராகுலை விட்டால் வேறு சிறந்த தலைவன் யாரும் கிடையாது என்றொரு கருத்து, பாமர மக்களிடம் திட்டமிட்டுத் திணிக்கப்படுகிறது.

தன்னை மக்கள் தலைவனாகக் காட்டிக் கொள்ளும் நடிப்பில் ராகுலும் சளைத்தவராகத் தெரியவில்லை. திடீரெனத் தாழ்த்தப்பட்டோர் வீடுகளுக்கு "விஜயம்" செய்து, அப்பாவி மக்களைத் திக்குமுக்காட வைக்கிறார். ஏழை விவசாயிகளைத் தேடிப்போய்ப் பேசுகிறார். அவர்களது துயர வாழ்க்கையை நாடாளுமன்றத்தில் எடுத்துப் பேசித் தன்னை ஏழைப் பங்காளனாகக் காட்டிக் கொள்கிறார். ராகுல், தனது பிறந்த நாளன்று இலண்டனில் குதூகலமாக இருந்தாலும், அவரது அடிப்பொடிகள் இந்தியாவில் அவரது பிறந்த நாளை சமூக நல்லிணக்க நாளாகக் கொண்டாடினர்.

திராவிடக் கட்சிகளின் அரசியலைப் பார்த்தவர்களுக்கு ராகுலின் இந்தக் கவர்ச்சி அரசியல் புதிதாகத் தெரியப் போவதில்லை. பழைய கள்ளு, புதிய மொந்தை, அவ்வளவுதான்!

இதோ, இந்தப் படத்தில் இருக்கும் தாயின் பெயர் கலாவதி. மகாராஷ்டிர மாநிலத்தின் விதர்பா பகுதியைச் சேர்ந்த ஏழை விவசாயி. விதர்பா பகுதியைப் பிடித்தாட்டி வரும் சாபக்கேடு இவரது குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை. கலாவதியின் கணவர், தான் பட்ட 90,000 ரூபாய் கடனை அடைக்க வழி தெரியாமல் சில ஆண்டுகளுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்டார்.



சேம்ரா கிராமத்தில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் குடிசையில், பிரிட்டிஷ் நாட்டு வெளியுறவுச் செயலர் டேவிட் மிலிபந்துடன் ஓரிரவு தங்கி விட்டு விடை பெற்றுச் செல்லும் ராகுல் காந்தி. (கோப்புப் படம்)

அரசு சாரா அமைப்பொன்று தில்லி நகரில் நடத்திய விழாவொன்றில் கலந்து கொண்டு, அவ்வமைப்பின் "அனைத்திந்திய மக்கள் அறிக்கையை" வெளியிடும் கலாவதி.



ராகுல் காந்தி கடந்த ஆண்டு திடீரென கலாவதியின் குடிசைக்கு விஜயம் செய்து, அவரது துயரக் கதையைக் கேட்டுவிட்டு, அவருக்கு ஒரு வீடு ஒதுக்கித் தருமாறு அதிகாரிகளிடம் கூறுவதாக "அருள்" பாலித்துவிட்டு "மறைந்து" போனார். இடதுசாரிக் கட்சிகள் மன்மோகன் சிங் அரசிற்கு அளித்துவந்த ஆதரவை விலக்கிக் கொண்டபொழுது, கலாவதியின் துயரக் கதையை ராகுல் காந்தி நாடாளுமன்றத்தில் எடுத்துப் பேசி, அவர்களை மடக்கினார். பத்திரிகைகள் அனைத்திலும் கலாவதியின் துயரக் கதையும், ராகுல் அவருக்கு அளித்திருந்த வாக்குறுதியும் பிரசுரமாயின.

கலாவதி நம்பிக்கையோடு ஒவ்வொரு அதிகாரியாகத் தேடிப் போய்ப் பார்த்து, ராகுல் காந்தியின் வாக்குறுதியை நிறைவேற்றித் தருமாறு கேட்டார். அந்தோ பரிதாபம்! அவர் ஒவ்வொரு அதிகாரியாலும் பந்தாடப்பட்டார். "ஐயா, ராகுல் காந்தியே, நீங்கள் எனக்கு அளித்த வாக்குறுதியை ஒரு சான்றிதழாக எழுதித் தாருங்கள்" என இப்பொழுது கலாவதி ராகுல் காந்திக்குத் தனது கதையை நினைவூட்டிக் கொண்டிருக்கிறார்.

கலாவதிக்குத் தான் அளித்த வாக்குறுதி அதிகார வர்க்கத்தால் உதாசீனப்படுத்தப்படும் என்பதை அறியாத அப்பாவி அல்ல ராகுல் காந்தி. தனக்கு விளம்பரம் தேடிக் கொள்ளவே, அந்தப் பாமர ஏழை விவசாயத் தாயின் துயரத்தை ராகுல் காந்தி பயன்படுத்திக் கொண்டார் என்பதே உண்மை.

கலாவதியின் கதை, ராகுல் காந்தி தாழ்த்தப்பட்டோர் மீதும், ஏழைகளின் மீதும் காட்டும் திடீர் கரிசனம் வக்கிரம் நிறைந்த நாடகம் என்பதை அம்பலப்படுத்தி விட்டது. எனவே, உழைக்கும் மக்களே, ராகுல் காந்தி உங்கள் பகுதிக்கு வரப் போகிறார் எனக் கேள்விப்பட்டால், ஆரத்தித் தட்டிற்குப் பதிலாகத் துடைப்பத்தைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள்!